விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உறவுகளிடமிருந்து உலகெங்குமுள்ள WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
நாடுங்கள்
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 மாசி 26 வெள்ளிக்கிழமை (10.03.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 081

# அரசுக்கு கால அவகாசமா? தமிழ் அமைப்புக்கள் கொதிப்பு

## ஐ.நா. சபைக்கு அவசர மகஜர்

(யாழ்ப்பாணம்)

**2015 ஆம் ஆண்டு ஐ.நா மனித உரிமைகள் பேரவையால் இலங்கை அரசுக்கு விதிக்கப்பட்ட தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கு மேலும் கால அவகாசம் வழங்குவதை தமிழ் அமைப்புகள் கடுமையாக எதிர்த்துள்ளன.**

இலங்கை அரசுக்கு வழங்கப்படும் கால அவகாசம் தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பதை தடுப்பதாகவே இருக்கும் என குற்றம் சாட்டியுள்ள பொது அமைப்புகள் மற்றும் தமிழ் அரசியல் கட்சிகள் ஜெனிவாவில் இடம்பெற்று வரும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கை அரசுக்கு கால அவகாசம் வழங்கக்கூடாது என்ற கோரிக்கையை முன்னெடுத்து ஐ.நா சபைக்கு அவசர மகஜர் ஒன்றை அனுப்பி வைக்கவுள்ளனர்.

ஐ.நா சபைக்கு அனுப்பப்படும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு,

இலங்கையின் அனுசரணையுடன் ஐ.நா மனித உரிமை பேரவையில் 2015 அக்டோபரில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானமானது, மனித உரிமைகள் அச்சுறுத்தலுக்குட்படுத்தப்பட்ட ஒருநாட்டுடன் இணைந்து ஐ.நா மனித உரிமைகள் பேரவை எவ்வாறு ஆக்கபூர்வமாக தொழிற்படுவது என்பதற்கு உதாரணமாக அமையக் கூடியது என அந்நேரத்தில் பரவலாகக் கருத்துரைக்கப்பட்டது.

ஆனால், இலங்கை அரசாங்கத்தை, இப்பிரேரணையின் இணை அனுசரணையாளர் எனும் தளத்திற்கு கொண்டுவருவதற்காக, பிரேரணையின் உள்ளடக்கத்தில், உறுதியான சர்வதேச நியமங்களு

22 ஆம் பக்கம் பார்க்க....

## மீனவர் சுட்டுக்கொலை எதிரொலி

## 85 தமிழக மீனவர்களை விடுவிக்க இலங்கை அரசாங்கம் ஒப்புதல்

(கொழும்பு)

இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள 85 தமிழக மீனவர்களை விடுதலை செய்ய இலங்கை அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

தமிழக மீனவர் சுட்டுக்கொல்லப்பட்டதால் ஏற்பட்டுள்ள பதற்றத்தை தணிக்கும் நடவடிக்கையாக இந்த முடிவை இலங்கை எடுத்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை தமிழ்நாட்டின் ராமேஸ்வரத்தில் இருந்து தங்கச்சி மடத்தைச் சேர்ந்த 7 மீனவர்கள் ஒரு படகில் சென்று கச்சதீவு அருகே நடுக்கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு அதிவேக ரோந்து படகில் வந்த இலங்கைக்

23 ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு மாகாணசபை முன்பாக பட்டதாரிகள் நேற்று போராட்டம்

### 13-ம் திகதி ஆளுநரை சந்திக்கவும் முடிவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் அரச வேலைவாய்ப்பை வழங்கக்கோரி நேற்று பதினொராவது நாளாகவும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.


இந்த போராட்டத்தை வடக்கு மாகாணசபை முன்பாக முன்னெடுத்திருந்த நிலையில், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கும் பட்டதாரிகளுக்கும் இடையில் சந்திப்பொன்றும் நடைபெற்றது.

இந்த சந்திப்பில் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை வடமாகாண ஆளுநரை சந்தித்து கல

24 ஆம் பக்கம் பார்க்க....

## பாலத்துடன் மோதுண்டு முச்சக்கரவண்டி விபத்து!

### பெண் பலி; இரு சிறுவர்கள் படுகாயம்



(மல்லாவி)

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பயணித்த முச்சக்கர வண்டி சாரதியின் கவனக்குறைவு காரணமாக முச்சக்கரவண்டி வீதியை விட்டு விலகி அருகில் இருந்த பாலத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் சம்பவ இடத்திலேயே பெண் ஒருவர் பலியானதுடன், இரு சிறுவர்கள் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்

24 ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேச பொறிமுறையை கோரும் வடக்கின் பிரேரணை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் முழுமையாக அமுல்படுத்த வேண்டும். இல்லையேல் விசேடமாக சர்வதேச பொறிமுறை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என கோரும் வடக்கு மாகாண சபையின் பிரேரணையொன்று தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாட்டை அறிவதற்காக நேற்றைய தினம் ஒத்தி

24 ஆம் பக்கம் பார்க்க....

## தரம் - 5

புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இன்றைய வலம்புரியில்...

## இம்மாத இறுதியில் க.பொ.த [சா/த] பரீட்சை பெறுபேறுகள் வெளியாகும்

(கொழும்பு)

2016 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் இந்த மாதம் 28 ஆம் திகதி வெளியிடப்படும் என கல்வி அமைச்சர் அகில

24 ஆம் பக்கம் பார்க்க....

## விழித்துக் கொள்ளுங்கள்! "த ஹிந்து" ஆசிரியர் தலையங்கம்

(புதுடில்லி)

இலங்கை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பான முன்னேற்ற அறிக்கையை கடந்த வாரம் ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டமையானது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் விழித்துக் கொள்வதற்கான அழைப்பாகக் கருதப்பட வேண்டும் என த ஹிந்து ஊடகம் தனது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

24 ஆம் பக்கம் பார்க்க....

உசன் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் உசன் - மிருசுவில்
மூலமந்திர ஜபயக்ஞ ஸ்கந்த ஹோம பெருவிழா
ஸ்கந்தஹோமம் 12.03.2017 ஞாயிற்றுக்கிழமை
குறிப்பு :அன்றைய தினம் இல.769 வழி இ.போ.ச, தனியார் பஸ் சேவைகள் இடம்பெறும்.
(யாழ்ப்பாணம் - உசன் - யாழ்ப்பாணம்)

# முச்சக்கரவண்டியில் வைத்து கேரள கஞ்சா விற்பனை

## மூவர் கைது

(மல்லாவி)

வவுனியா மாவட்ட உதவி மதுவரி ஆணையாளர் அலுவலக எல்லைக்குட்பட்ட வவுனியா சிந்தாமணி பிள்ளையார் ஆலயத்திற்கு அண்மையாக முச்சக்கர வண்டியில் வைத்து கேரள கஞ்சா விற்பனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 03 பேரை வவுனியா மாவட்ட உதவி மதுவரி ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தர்கள் கைது செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 2.45 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

வவுனியா சிந்தாமணி பிள்ளையார் ஆலயத்திற்கு அண்மையாக முச்சக்கர வண்டியில் வைத்து கேரள கஞ்சா விற்பனை நடைபெறுவதாக மதுவரி ஆணையாளர் அலுவலகத்திற்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா மாவட்ட உதவி மதுவரி ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தர்கள் சம்பவ இடத்தில் வைத்து தடயப் பொருட்களுடன் முச்சக்கர வண்டியையும் சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்துள்ளனர்.

இதன் பின்னர் கைதான சந்தேக நபர்களிடம் நடைபெற்ற விசாரணைகளை அடுத்து மேலும் ஒருவரைக் கைது செய்துள்ளதாகவும் வவுனியா உதவி மதுவரி ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவத்தின் போது கைது செய்யப்பட்ட 03 பேரிடமும் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்களை வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் வவுனியா உதவி மதுவரி ஆணையாளர் அலுவலகத் தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-15)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

## காளான் வளர்ப்பு பயிற்சி

காளான் வளர்ப்பு பற்றிய சகல
விதமான பயிற்சி மற்றும் தேவையான
பொருட்கள் வழங்கப்படும்.
தேவைக்கேற்ப தங்கள் இல்லங்களில்
வந்து செய்து தரப்படும்.

(8159)

தொடர்பு: 071 747 1847
072 675 0045, 076 309 7609

### இரு மாணவர் படுகொலை

# 5 பொலிஸாருக்கு மீளவும் மறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களை சுட்டு கொலை செய்த குற்றச்சாட்டில் கைதாகியிருந்த ஐந்து பொலிஸ் உத்தியோகஸ்தர்களையும் எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. குறித்த வழக்கு நேற்றைய தினம் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் குளப்பிட்டி பகுதியில் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதி யாழ் பல்கலை மாணவர்களான கலைப் பீடத்தில் 3ஆம் வருடத்தில் கல்வி கற்கும் கிளிநொச்சியைச் சேர்ந்த நடராசா கஜன் (வயது 23), சுன்னாகத்தைச் சேர்ந்த விஜயகுமார் சுலக்ஸன் (வயது 24) ஆகியோர் பொலிஸாரின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தனர்.

இந்த சம்பவத்தை அடுத்து ஐந்து பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர். இவர்கள் தொடர்பான விசாரணை இடம் பெற்று வந்த நிலையில் நேற்றைய தினம் குறித்த வழக்கும் மீண்டும் யாழ்.நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதில் குறித்த ஐந்து பொலிஸ் உத்தியோகஸ்தர்களும் மன்றில் முன்னிலையாகியிருந்த நிலையில்,

தமக்காக வாதாடுவதற்கு இங்கு எந்த சட்டத்தரணியும் முன்வருகின்றனர் இல்லை. வடக்கு கிழக்கு தவிர்ந்த வேறொரு இடத்திற்கு தமது வழக்கை மாற்ற வேண்டும் என கூறியிருந்தனர்.

எனினும் இது தொடர்பில் ஏப்ரல் மாதம் ஆறாம் திகதி நீதிமன்றம் முடிவை அறிவிக்கும் என தெரிவித்து எதிர்வரும் 23ஆம் திகதி வழக்கை நீதவான் எஸ். சதீஸ்கரன் ஒத்திவைத்தார். (செ-4)

# போரில் பாதிக்கப்பட்ட பெண்கள் தொடர்பில் அரசு பாராமுகம்

## கவலை தெரிவிக்கிறார் சந்திரிகா

போரினால் உயிரிழப்புக்களைச் சந்தித்த படையினரது குடும்பங்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டாலும், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாண பெண்களுக்கு எந்தவொரு கொடுப்பனவும் வழங்கப்படாமை கவலையளிப்பதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கவலை வெளியிட்டுள்ளார்.

மகளிர் விவகார அமைச்சு முன்னெடுத்து வரும் வேலைத்திட்டங்களில் இதுதொடர்பான விவகாரத்தில் கவனம் செலுத்துவது குறைவடைந்திருப்பதாக சுட்டிக்காட்டிய முன்னாள் ஜனாதிபதி, வட கிழக்கு பெண்கள் குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏற்பாடு செய்திருந்த விசேட மாநாடு நேற்றைய தினம் கொழும்பிலுள்ள கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உள்ளிட்டோரும் கலந்துகொண்டிருந்தனர்.

நாட்டின் பல பாகங்களிலும் இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெண் ஆதரவாளர்களும் தலைமை வகிக்கும் தலைவிகளும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, "யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் இந்த நாட்டில் உள்ளனர். அதிகமானவர்கள் தமிழ் பெண்களாவர். அதேபோல் முஸ்லிம் பெண்களும் உள்ளனர். போரில் ஈடுபட்டு மரணித்த படையினரின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் அவர்களது மனைவிமார்களுக்கு வழங்கப்படுகின்றது.

ஆனால் வடக்கு, கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு எதுவுமே இல்லை. படையினரின் மனைவிமார்களுக்கு வேறு பிரச்சினைகளும் உள்ளன. யாராவது இதற்கு தலைமை தாங்கி தீர்வு பெற்றுக் கொடுக்க வேண்டும்.

தற்போதைய அரசாங்கம் மகளிர் விவகார அமைச்சின் ஊடாக பெண்களின் அபிவிருத்திக்காக விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இவற்றில் வெளிநாடுகளுக்குச் செல்லும் பணிப் பெண்கள், யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட பெண்கள் ஆகிய பிரிவினர் மீது செலுத்தப்படும் கரிசனை போதாது எனவும் அவர் தெரிவித்தார். (செ-11)

# த.தே.கூட்டமைப்பு நாளை சந்திப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளுக்கு இடையே கருத்து முரண்பாடுகள் அதிகரித்துள்ள நிலையில், கட்சியின் வடக்கு - கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையிலான சந்திப்பு நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியாவில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில், இலங்கைக்கு கால நீடிப்பு வழங்கக் கூடாது என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கடிதம் அனுப்பியமை தொடர்பில், கூட்டமைப்பினுள் முரண்பாடான நிலைமை தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# மரண அறிவித்தல்

திருமதி
## தங்கரத்தினம் சுப்பிரமணியம் (பவாக்கா)



மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் பன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கரத்தினம் சுப்பிரமணியம் அவர்கள் 08.03.2017 அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கனகசபை சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் அமரர் சிறீரஞ்சன் மற்றும் சயந்தன் (பிரதி அதிபர்-யா/அருணோதயக் கல்லூரி), ஜெயரஞ்சன் (பிரான்ஸ்), ஜெயந்தன் (ஆசிரியர் - யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவசக்தி (ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் கல்வி வலயம்), சூரியகலா (பிரான்ஸ்), பவானி ஆகியோரின் அன்பு மாமியாரும் அபிராம், அபிசயனி, அபிசரண், திவ்யா, சௌமியா, ஜீவேஸ், கிருஸ்ண்யா, ஆரகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சிவபதி பன்னாலை, தெல்லிப்பளை இல்லத்தில் இன்று வெள்ளிக்கிழமை (10.03.2017) நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கீரிமலை செம்பொன்வாய்க்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


'சிவபதி'
பன்னாலை,
தெல்லிப்பளை.

(8154)

தகவல்: பிள்ளைகள்
திரு. சு. சயந்தன் - 077 724 6412
திரு. சு. ஜெயரஞ்சன் - 021 205 9701
திரு. சு. ஜெயந்தன் - 077 996 6512

8ம் ஆண்டு
# நினைவஞ்சலி

திருமதி
## பூமிராசா லபிதா
(ஆசிரியர்)



1968.08.11 2009.03.09

காலன் உயிர் பறிக்க
சோகத்தை தந்து இன்றுடன்
ஆண்டு எட்டானாலும்
அம்மா உங்கள் நினைவு
பசுமையாய் உள்ளது
எங்கள் வாழ்க்கைக்கு ஒளி
கொடுத்த தெய்வமே...
உங்கள் ஆத்மா சாந்தி பெற
இறையருளை
வேண்டுகின்றோம்

பாலிநகர்,
வவுனிக்குளம்.
077 074 1703

(8054)

தகவல்:
கணவன் (பூமிராசா)
பிள்ளைகள் (கோபிநாத்
கோகிலாத், லோஜினி)

# வடமாகாணசபை முன்பாக பட்டதாரிகள் போராட்டம்






வடக்கு மாகாண பட்டதாரிகள் அரச நியமனம் கோரி நேற்று 11வது நாளாகவும் தமது போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். இந்தப் போராட்டத்தை வடக்கு மாகாண சபை முன்பாக பட்டதாரிகள் முன்னெடுத்திருந்தனர். (படங்கள் : உ.சாளின்)

## வியாபாரியிடம் பணம் திருட்டு ஒருவர் கைது

(கரணவாய்)

பருத்தித்துறை சந்தைப் பகுதியில் வியாபாரி ஒருவரின் பணத்தைத் திருடிய நபர் ஒருவரை பருத்தித்துறைப் பொலிஸார் கைது செய்தனர். நேற்று முன்தினம் புதன் கிழமை முற்பகல் வியாபாரப் பட்டறையில் வைக்கப் பட்டிருந்த முப்பது ஆயிரம் ரூபா பணம் காணாமல் போயுள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸில் முறையிடப்பட்டது. இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வந்த குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவைச் சேர்ந்த எஸ். றமணன் தலைமையிலான பொலிஸார் கண்காணிப்பு கமராவின் உதவியுடன் அன்றைய தினம் பிற்பகலே பருத்தித்துறை 3 ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த 37 வயதுடைய நபர் ஒருவரைக் கைது செய்ததாகத் தெரிவித்தனர். (இ-3-60)

## இலங்கை ஆவணக்காப்பகத்தின் 43 ஆவது நிகழ்வு ஞாயிறன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆவணக் காப்பகத்தின் சமகாலக் கலை கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான 43 ஆவது நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை இல 199, கோவில் வீதி, நல்லூர் எனும் முகவரியில் அமைந்துள்ள சமகாலக் கலை கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தில் இடம்பெறும். இந் நிகழ்வில் 42 ஆவது நிகழ்வாக இப் போதைக்குக் கொண்டாடுதல் இல்லை என்ற தலைப்பில் இலங்கையின் சமகால சிற்பப் போக்கினை மாற்றியமைத்தவர்களில் ஒருவரான சரத் குமாரசிறி உரை நிகழ்த்துவார். இவர் தனது உரையில் தனது வெளிப்பாடுகள் அவற்றின் சமூக பொருளாதார பண்பாட்டுப் பின் புலன்கள் பற்றிக் கலந்துரையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## வீதிக்கருகில் கழிவுகளை வீசியோர் கரவெட்டியில் கைது செய்யப்பட்டனர்



(கரணவாய்)

மண்டான் உப்பு வீதிப் பகுதியில் ஒதுக்கப்பட்ட இடத்தை விட்டு வீதிக்கருகாமையில் கழிவுகளை வீசி வந்தவர்களை கரவெட்டி பிரதேச சபையும், சுகாதாரப் பகுதியினரும் இணைந்து பிடித்துள்ளனர்.

மேற்படி பகுதியில் கழிவுகளை வீசுவதற்கு ஒதுக்கப்பட்ட இடத்தை விட்டு வெளியில் அதாவது வீதிக்கு அருகாமையில் வீசுவதால் வீதியில் பயணிப்போர் சிரமத்துக்குள்ளாவதாக பத்திரிகையில் ஏற்கனவே செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து விழிப்புடன் இருந்த பிரதேச சபையினரும் சுகா தாரப் பகுதியினரும் வெளி யிடங்களில் இருந்து கனரக வாகனங்களில் கழிவுகள் கொண்டுவந்து கொட்டிய வர்களை நேற்று முன்தினம் புதன்கிழமை மடக்கிப் பிடித்தனர். சுன்னாகம், யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் இருந்து கொண்டுவந்து இக்க ழிவுகள் கொட்டப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இவர்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (இ-3,60)

## தீர்த்தோற்சவம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மடத்துக்கரை முத்துமாரியம்மன் ஆலய தீர்த்தோற்சவம் நாளை சனிக் கிழமை இடம் பெறும். இந் நிகழ்வில் கலாபூஷணம் க.லோகேஸ்வரனின் பண்ணிசை அரங்கு இரவு 7 மணிமுதல் 8 மணிவரை பக்கவாத்திய சகிதம் இடம்பெறும். (இ-3)

## கைதடி, நாவற்குழி பாலங்கள் நிர்மாணிப்புப்பணிகள் ஆரம்பம்

உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் விசேட திட்டங்கள் முகாமைத்துவப் பிரிவினால் கைதடி மற்றும் நாவற்குழி பாலங்கள் புதிதாக நிர்மாணிக்கப்பட உள்ளன. தைதடி மற்றும் நாவற்குழி பாலங்கள் கண்டி வீதியில் யாழ்ப்பாணத்தை தரைவழியாக இணைக்கின்ற மிக முக்கியமான பாலங்கள் ஆகும். தற்போது அமைந்துள்ள பாலம் வழுக்கும் தன்மை கொண்டுள்ளதனால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. ஜப்பான் சர்வதேச கூட்டுத்தாபனம் முகவர் உதவியுடன் தேசிய நெடுஞ்சாலைகள் வலையமைப்பில் உள்ள பாரிய பாலங்களை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டத்தின் கீழ் கைதடி மற்றும் நாவற்குழி பாலங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன.

தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள பாலங்களின் நிர்மாணப் பணிகள் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதிக்கு முன் நிறைவு செய்யப்படும் எனத் தெரியவருகிறது. (இ-89)



# ஆட்டோ-பட்டா விபத்து; குடும்பஸ்தர் படுகாயம்





படங்கள்:-பி.கோபி

இராஜவீதி சந்தியில் இடம்பெற்ற ஆட்டோ - பட்டா மோதிய விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்றுக் காலை 8.30 மணியளவில் இடம் பெற்றது.

கரந்தன் பகுதியில் இருந்து இராஜவீதி வழியாக திருநெல்வேலி சந்தை நோக்கி பயணித்த ஆட்டோவும் கோப்பாய் வீதி வழியாக கோப்பாய் சந்தியை நோக்கி பயணித்த பட்டா ரக வாகனமும் இராஜவீதி சந்தியில் மோதுண்டே மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளது.

பட்டா வாகனம் அதிக வேகமாக பயணித்த நிலையில் வேகக்கட்டுப்பாட்டை யிழந்து ஆட்டோவுடன் மோதியதனால் ஆட்டோ 5 மீற்றர் தூரம் வரை இழுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இதன்போது ஆட்டோ சாரதியான அளவெட்டி மேற்கு அளவெட்டியைச் சேர்ந்த தியாகராசா தர்மலிங்கம் (வயது-58) தலையில் படுகாயமடைத்த நிலையில் வீதியில் பயணித்தவர்களால் மீட்கப்பட்டு கோப்பாய் வைத்தியசாலையில் சிகிச் சைக்காக அனுமதிக்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். ஆட்டோவில் வாழைக் குலைகளை சந்தைக்கு ஏற்றிச் சென்றிருந்த நிலையில் விபத்தின் காரணமாக வாழைக்குலைகள் வீதியில் சிதறிக்காணப்பட்டன. மேலும் ஆட்டோ சேதமடைந்ததுடன் பட்டா வாகனத்தின் முன்பகுதியும் சேதமடைந்துள்ளது.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் மேலதிக விசாரணைகளுக்கு விபத்தில் சிக்கிய இரு வாகனங்களையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். (இ-9-30-87)

## பட்டப்பகலில் துணிகரத் திருட்டு சித்தன்கேணி பகுதியில் சம்பவம்

கீரிமலை வீதி, சித்தன் கேணியில் இராசேந்திரம் என்பவரது வீட்டில் நேற்று க் காலை 9.45 மணியளவில் கதவுடைத்து திருடப்பட்டுள்ளது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

வீட்டுரிமையாளர் காலை சந்தைக்கு சென்றிருந்த நிலையில் வீட்டில் ஒருவரும் இல்லாத நேரம் பார்த்து உள்நுழைந்த திருடன் வீட்டின் பின்புறத்தில் இருந்த அலவாங்கினை எடுத்து முன்பக்க நுழைவாயிலின் கதவில் மேலுள்ள கடைச்சல் கட்டைகளை உடைத்து அதனூடாக கதவைத்திறந்து உள்ளே சென்று சுமார் ஆறு பவுண்நகைகள் திருடப் பட்டதாக வட்டுக்கோட்டைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-82)




## பௌர்ணமி விழா

கலட்டி ஐக்கிய சனசமூக நிலையம் நடத்தும் பௌர்ணமி விழா கரவை சுப்பர் சிங்கர் இரண்டாம் சுற்றுதெரிவு நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு ஜெயச்சந்திரன் கலயரங்கில் தலைவர் சி. ஜி. திருமாலழகன் தலைமையில் இடம்பெறும்.(இ-3)


# வடக்கின் கிரிக்கெட் போர் நேற்று ஆரம்பம்
# இரு அணிகளும் சமபலத்துடன் போராட்டம்



நேற்று ஆரம்பமாகிய வடக்கின் பெரும் கிரிக்கெட் போரில் இரு கல்லூரி வீரர்களும் சம பலத்துடன் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

வடக்கின் பெரும்போர் என வர்ணிக்கப்படும் யாழ்.மத்திய கல்லூரி மற்றும் சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கிடையிலான 111ஆவது கிரிக்கெட் துடுப்பாட்டப் போட்டி நேற்று ஆரம்பமானது.

பலத்த எதிர்பார்ப்புக்களுடன் வருடாவருடம் இடம்பெறும் இந்த போட்டி கடந்த ஆண்டு வெற்றி தோல்வி இன்றி சமநிலையில் முடிவடைந்த நிலையில் இவ்வருடம் கிண்ணத்தை கைப்பற்ற இரண்டு அணிகளும் புதிய உற்சாகத்துடன் களமிறங்கியுள்ளன.



யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வுகளை தொடர்ந்து, இந்த போட்டியில் நாணயசுழற்சியில் வெற்றிபெற்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி தலைவர் ஜெனி பிளைமின் முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தார்.

இதற்கமைய பிரியலக்சன் தலைமையில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய யாழ்.மத்திய கல்லூரியினர் தமது முதல் இன்னிங்சில் 57.3 ஓவர்கள் பந்து வீசப்பட்ட நிலையில 167 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக்களையும் இழந்தது.

இதில் அதிக பட்சமாக யாழ். மத்திய கல்லூரி முன்னணி துடுப்பாட்ட வீரர் தசோபன் 48 ஓட்டங்களையும், கௌதமன் 37 ஓட்டங்களையும் பெற்றனர்.



பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் வேகப்பந்து வீச்சாளர் கபில்ராஜ் 18 ஓவர்கள் பந்து வீசி 38 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து அதிகபட்சமாக நான்கு விக்கட்டுக்களை கைப்பற்றினார் மற்றும் அபினாஷ் 3 விக்கெட்டுக்களையும் யதுசன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

மதியபோசன இடைவேளையை அடுத்து பதிலுக்கு துடுப்பெடுத்தாட ஆரம்பித்த சென்.ஜோன்ஸ் கல்லூரி நேற்றைய ஆட்டநேர முடிவில் 33 ஓவர்களை எதிர்கொண்டு 5 விக்கெட் இழப்பிற்கு 114 ஓட்டங்கள் பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் துலக்ஷன் 41 ஓட்டத்தையும் கிசாந்துயன் 29 ஓட்டத்தினையும் அதிகபட்சமாக பெற்றுக்கொண்டனர்.




மத்திய கல்லூரியின் சார்பில் பந்து வீச்சில் தசோபன் 3 விக்கெட்டுக்களையும், துசாந்தன் 2 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

நேற்றைய ஆரம்ப நிகழ்வில் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன், நீதவான் எஸ். சதீஸ்கரன், இரண்டு பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் விளையாட்டு ஆர்வலர்கள் எனப் பலரும் நேற்றைய கிரிக்கெட் போட்டியை பார்வையிடுவதற்காக இணைந்திருந்தனர்.

இவ்விரு பாடசாலை அணிகளுக்குமான ஒரு நாள் போட்டி எதிர்வரும் 18ஆம் திகதி சென்.ஜோனஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியின் இரண்டாம் நாளான இன்று காலை 9.30 மணிக்கு போட்டி ஆரம்பமாகும்.






## அரசுக்கு கால அவகாசமா ...

கலாநிதி என். கெங்காதரன் (வர்த்தக முகாமைத்துவ பீடம் யாழ் பல்கலைக்கழகம்), கலாநிதி வி.திருக்குமரன் (விவசாய பீடம் யாழ் பல்கலைக்கழகம்), கலாநிதி எஸ்.ராஜஉமேஸ் (வர்த்தக முகாமைத்துவ பீடம் யாழ் பல்கலைக் கழகம்), எஸ்.ரவீந்திரன் (சிரேஷ்ட விரிவுரையாளர் புவியியல் துறை யாழ் பல்கலைக்கழகம்), எஸ். சிவகாந்தன் (சமூகவியல் துறை யாழ் பல்கலைக்கழகம்), கே.கே. அருள்வேல் (சிரேஷ்ட விரிவுரையாளர் வர்த்தக முகாமைத்துவ பீடம் யாழ்.பல்கலைக்கழகம்), கலாநிதி க.சிதம்பரநாதன் (சிரேஷ்ட விரிவுரையாளர் நாடகவியல் துறை யாழ்.பல்கலைக்கழகம்), யூட்வோல்டன் (பல்கலைக்கழக கல்லூரி யாழ்ப்பாணம்), வை.எம்.எச்.சி மட்டக்களப்பு, வணபிதா இரவிச்சந்திரன், வணபிதா மங்கள ராஜா, வணபிதா செல்வநாதன் செல்வன், வணபிதா எழில்ராஜன், இன்பநாயகம் (கிராமிய உழைப்பாளர் சங்கம் / தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் வடமாகாண ஒருங்கிணைப்பாளர்), கே.எஸ்.இரட்ணவேல் (சிரேஷ்ட சட்டத்தரணி), வி.விவேகானந்தன் புவிதரன் (சிரேஷ்ட சட்டத்தரணி), திரு.எஸ்.ஏ.ஜோதிலிங்கம் (சட்டத்தரணி), திரு.நடராஜா காண்டீபன் (சட்டத்தரணி), எஸ். விஜகுமார் (சட்டத்தரணி), கணேஸ்வரன் (சட்டத்தரணி), எம்.கிறேசியன் (சட்டத்தரணி), ஜி.அபின் மன்யு (சட்டத்தரணி), வி.மணிவண்ணன் (சட்டத்தரணி), ரி. அர்யூனா (சட்டத்தரணி), கே.சுகாஸ் (சட்டத்தரணி), பி.பார்த்தீபன் (சட்டத்தரணி), வி.திருக்குமரன் (சட்டத்தரணி), எஸ்.சோபிதன் (சட்டத்தரணி) உள்ளிட்ட பலர் ஐ.நாவுக்கான இம்மகஜரில் கையொப்பமிடுகின்றனர். (செ)

## உறவுகளை தேடி கவனயீர்ப்பு





கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக ஆரம்பிக்கப்பட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டுள்ளவர்களின் உறவுகளின் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று 18ஆவது நாளாகவும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கிளிநொச்சி கந்தசாமி ஆலய முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட இக் கவனயீர்ப்பு போராட்டம் இரவு பகலாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது

(செ-312, 15)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

31.01.2017 அன்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) இல் BEd பட்டம் பெற்ற எமது பாடசாலை ஆசிரியர்களான



திரு. F.F.M.கிறேவியர்

திரு.சோமசுந்தரம் திருக்குமரன்

திருமதி ஜெயலட்சுமி சுரேஸ்

திருமதி தயாபரி சத்தியலிங்கம்


ஆகியோர் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புற வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/புத்தூர் இந்து ஆரம்ப பாடசாலை

(C-7769)

# தொண்டைமானாறு கெருடாவில் அருள்மிகு ஸ்ரீ தொட்டில் கந்தசுவாமியார் தேவஸ்தான இரதோற்சவ சிறப்புமலர்

10.03.2017





## நல்லை ஆதீன குரு முதல்வரின் அருளாசிச் செய்தி

சரவணப் பொய்கையிலே ஆறு மலர்களில் ஆறு குழந்தைகளாக வந்துதித்து உமையவள் அறுவரையும் ஒன்றாய் அணைக்க ஆறுமுகனாய் தோன்றிய அற்புதமானவனே கந்தப் பெருமான்.

கந்தன் எனும் நாமத்தை சொன்னாலே பிடித்த வினை நீங்கி இந்தப் பூமியில் அமைதியுடன் வாழ வழி செய்வான் கந்தன். அந்த வகையில் இன்று தேர் ஏறி வரும் கெருடாவில் தொட்டில் கந்தசுவாமியரை தொழுது அவன் வலம் வரும் இரதத்தின் வடம் தொட்டு இழுத்து வினையறுப்போம் வாரீர்.

தேவரை வதம் செய்த சூரனை வதம் செய்து சேவலும் மயிலுமாக்கி தன்னுடனே வீற்றிருக்கச் செய்த கந்தனவன் நிச்சயம் எம் மக்கள் படும் இன்னல் யாவும் தீர்ப்பான் என்பதில் ஒரு சிறு ஐயமுமின்றி அவன்தாள் தொழுது அவன் அருள் பெறுவோமாக..

**என்றும் வேண்டும் இன்ப அன்பு**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,**
**நல்லை ஆதீன குருமுதல்வர்**



## அருள்மிகு ஸ்ரீ தொட்டில் கந்தன் தேரேறி வருகிறான்

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியின் கிழக்கே கெருடாவில் எனும் ஊரில் தொட்டில் கந்தசாமியார் ஆலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய அம்சங்களுடன் அமைந்தமை சிறப்புடையது.

மஹோற்சவம் தமிழுக்கு மாசி மாதம் 17 தொடக்கம் மாசி 27 ஆம் திகதி மக நட்சத்திரம் வரை இவ்வாலயப் பிரதம குருவும் பரம்பரை தர்மகர்த்தாவும், சாமஸ்ரீ தேசமான்யவுமாகிய சிவஸ்ரீ பாலமுத்துச்சாமி குருநாதக் குருக்கள் அவர்களால் சிறப்புறப் பூஜைகள் நடத்தப்பெற்று இன்று கந்தன் தேரேறி ஆரோகணிக்கும் காட்சியோ கண்கொள்ளாக் காட்சி. தொட்டில் கந்தனை தொட்டிலில் எழுந்தருளச் செய்தவர் போர்த்துக்கேயர் காலத்து அரசன் பரராஜசேகரனின் ஆஸ்தான நண்பனும் சிவாகம விற்பன்னருமாகிய உலக குருநாதக் குருக்கள் ஆவார். அவர் தம் சந்ததியினர் இன்றுவரை ஆகம முறைப்படி பூஜையை செய்து வருகின்றனர். ஆலய மஹோற்சவ குருவின் தந்தை சிவஸ்ரீ முத்துச்சாமிக்குருக்கள் பாலசுப்பிரமணியக் குருக்கள் அவர்கள் இவ்வாலயத்தைப் புனர்நிர்மாணம் செய்து பராமரித்து வந்துள்ளார்.

வேண்டுவோர்க்கு வேண்டிய வரங்களை வாரி வழங்கும் தொட்டில் கந்தனின் தேரூர்வலத்தில் யாமனைவரும் கலந்து அருட்கடாட்சத்தினைப் பெறுவோமாக

**திரு.த.து.ஜெகநாதன், ஓய்வுநிலை வங்கியாளர்.**



## ஆலய பிரதம குருவின் ஆசிச்செய்தி

மேற்படி தேவஸ்தான பிரதம குருவும் பரம்பரை முகாமை தர்மகர்த்தாவுமாகிய சாமஸ்ரீ தேசமான்ய சிவஸ்ரீ பாலமுத்துச்சாமி குருநாத குருக்கள் அவர்கள் வழங்கிய ஆசியுரை

"கஜானணம் பூதகணாதிசேவிதம்
கபித்தயம் பூபல சார பட்சிதம்
உமாசுதம் சோக விநாச காரணம்
நமாமி விக்கினேஸ்வர பாத பங்கயம்"

எல்லாம் வல்ல தொட்டில் கந்தசுவாமியாரின் பாதார விந்தங்களைப் பணிந்து மேற்படி தேவஸ்தானமானது மருத நிலம் அடங்கிய மூர்த்தி ,தலம் ,தீர்த்தம் எனும் மூவகை அம்சங்களும் ஒருங்கே அமையப் பெற்ற ஆலயம் என் பது ஓர் சிறப்பான அம்சமாகும். தொட்டில் கந்தனை தொட்டிலில் எழுந் தருளச் செய்தவர் போர்த்துக்கேய கால அரசன் பரராஜசேகரனின் நெருங் கிய நண்பராகிய உலக குருநாத குருக்களாவார். அவர்தம் சந்ததியினர் இன்றுவரை ஆகம முறைப்படி பூஜைகளை செய்து வருவது மிகவும் சிறப்பான ஓர் விடயமாகும். இவ் ஆலயத்தில் இருக்கும் மூர்த்திகள் யாவும் மிகவும் தொன்மை வாய்ந்ததும் இந்தியாவில் இருந்து உலக குருநாத குருக்களால் தருவிக்கப்பட்டதுமான மூர்த்திகள் ஆகும். இவ் ஆலயம் உலக குருநாத குருக்களால் ஸ்தாபிக்கப்பட்ட காலத்தில் இருந்து இன்று வரை அவரின் சந்ததியினராகிய சைவக் குருமார்களால் நித்திய, நைமித்திய கிரியைகள் யாவும் செய்யப்பட்டு வருகின்றன. மேலும் இவ் ஆலயத்தில் மாசி மாத மக நட்சத்திர தினத்தில் தீர்த்த உற்சவம் நிகழ்வது மிகவும் சிறப்பான ஓர் நிகழ்வாகும். இவ் ஆலயத்தில் நித்திய, நைமித்திய கிரியைகள் யாவும் சிறப்புற நடைபெற்று வருகின்றது.

இன்னும் மென்மேலும் இவ் ஊர் மக்களும் இக்கிராமமும் செழிப்புற இன்றைய தினம் தேரேறி வரும் சண்முகப் பெருமான் அருள்பாலிப்பாராக என வேண்டி எமது ஈழத் திருநாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலைக்க இன்றைய நன்னாளில் தேரேறி வரும் தொட்டில் கந்தப் பெருமானை வேண்டி எனது ஆசியுரையை நிறைவு செய்கின்றேன்.

**இவ்வண்ணம்**
**ஆலயப் பிரதம குருவும் பரம்பரை முகாமை**
**தர்மகர்த்தாவுமாகிய**
**சாமஸ்ரீ தேசமான்ய**
**சிவஸ்ரீ பாலமுத்துச்சாமி குருநாத குருக்கள்.**

## கந்தன் தேர் வடம்பிடிப்போம் வாரீர்!

கெருடாவில் கிழக்கில் தொட்டில் கந்தசுவாமி கோவில் கந்தனால் அந்த ஊருக்கே பெருமை சேர்ந்துவிட்டது.

அடியவர்களின் வேண்டுதல் எதுவாக இருந்தாலும் அதை நிறைவேற்றும் சக்தி தொட்டில் கந்தனிடம் இருக்கின்றது. இதற்கு ஆதாரமாக கந்தனின் திருவிளையாடலி னூடே அருள் பெற்றவர்கள் இன்றும் கந்தனை சிந்தனை செய்து வருவதைக் காண முடிகின்றது. வேல் கொண்டு எதிரிகளை வதம் செய்து வீரனாய் வேலு டன் மிளிரும் கந்தன் இன்று தேர் ஏறி வந்து எம்மவர் குறை தீர்ப்பான் என்பதில் எதுவித ஐயமுமில்லை. அந்த அற்புத காட்சியைக் காண கோடி கண் வேண்டும். இந்த நன்நாளில் கந்தன் அருள் வேண்டி அமைகின்றேன்.

**கந்தையா வடிவேலழகன் முகாமையாளர், நெல்லியடி கிளை, ஹற்றன் நஷனல் வங்கி.**



## முத்துக்குமார சர்மா வைகுந்த வாசக் குருக்கள் அவர்களின் ஆசியுரை

இலங்கை மாநகரில் பிரசித்தி மிக்கதும் அநேக இந்து தாள் பணிந்து வழிபடுவதுமாகிய முருகன் ஆலயங்களில் தொண்டைமானாறு கெருடாவிலில் அருள்பாலித்துள்ள ஸ்ரீ தொட்டில் கந்தசுவாமியார் தேவஸ்தா னம் மிகவும் பிரசித்து பெற்று விளங்குகின்றது. முருகு என் றாலே அழகு எனும் பொருள். இவ்வுலகுக்கு எந்நாளும் அருள் புரிவதற்காக வெளிப்படும் ஒரு மின்னல் சக்தியே முருகன்.

இச்சாசக்தியாகிய வள்ளியையும் கிரியாசக்தியாகிய தெய்வயானையையும் ஞானாசக்தியாகிய ஞானவேலெனும் அறிவாற்றலை தன்னுள் அடக்கி பேரறிவும் அதன் ஆழமும் அதன் கூடிய கூர்மையையும் உடையவர் இக்கந்தன். இவ் ஆலயம் மக்களுக்காக அமையப் பெற்றிருப்பதுடன் இவ் ஆலயக் கிரியைகளின் நோக்கமும் ஆன்ம முன்னேற்றமே. தொண்டைமானாறு சமூகத்தின் உயிர் மையமாகத் திகழும் இக்கோவில் ஆன்மீக நிலையமாகவும் கலைகளை வளர்க்கும் கலாமன்றங்களாகவும் அறம் பேணும் அறச்சாலையாகவும் பல்வகைப் பரிமாணங்களைப் பெற்று இலங்கை வரலாற்றில் முதன்மை பெற்று வருகின்றது.

ஸ்ரீதொட்டில் கந்தசுவாமியார் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவமும் அதனுள் முதன்மையான தேர்த்திருவிழாவும் இனிதே சிறப்புடன் நடந்தேற வேண்டி எம் கந்தவேளின் திருவடி மலர்களை சிந்தை,செயல்தனில் பணிந்து வாழ்த்துகின்றேன்.

**முத்துக்குமார சர்மா வைகுந்தவாசக் குருக்கள், நல்லூர்.**



## அருள் ஆசிச் செய்தி

அருள்மிகு ஸ்ரீ தொட்டில் கந்தசுவாமியார் கோவில் தேர்த்திருவிழா 10.03.2017 இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. எம் பெருமானின் வீதி விவசாயம் செழிக்கின்ற பூமியாகும். இந்த ஆலயம் ஆறுமுகசுவாமி பூர்வீகமானதும் அற்புதம் வாய்ந்ததும் வேண்டுவோர்க்கு வேண்டுமென அருள்பாலிக்கும் முருகனாவார். இந்த ஆலயத்தின் ஆறுமுகசுவாமி தேரில் வீதி வலம் வந்து அடியவர்களுக்கு அருள்பாலிப்பார். இந்த ஆலயத்தின் தர்மகர்த்தாக்களினால் இந்த ஆலயம் பராமரிக்கப்பட்டு மெருகூட்டப்பட்டுள்ளது. எம் பெருமானின் அருள் ஆசி எல்லா ஜீவராசிகளுக்கும் கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

**சிவஸ்ரீ. சி.கிருபாகரக்குருக்கள்,**
**திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரி**
**அம்மன் தேவஸ்தான பிரதம குரு.**

கந்தா கடம்பா கார்த்திகேயா என வந்தனை செய்திடும் அன்பர் தமக்கு
நட்டநடு நிசியிலும் துணை வரும்- வெற்றிதரும் தொட்டிலிற் கந்தன் வேல்
ஊர் கூடி வடம் பிடிக்க தேர் ஏறும் தொட்டிலிற் கந்தன்
அருள் பார் முழுதும் கமழுதடா-வாழ்வின் இருள் நீங்கி ஒளிக்கீற்று தெரியுதடா

**நாமகள் கிருஷ்ணபிள்ளை**
**சிரேஷ்ட விரிவுரையாளர், தாவரவியல் துறை, யாழ்.பல்கலைக்கழகம்.**


கோஸ்வே பெயின்ட் வகைகள், கட்டடப் பொருட்கள், மின்சார உபகரணங்கள், கம்பி வகைகள், அனைத்து வகையான பொருட்களும் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்.
**எமரல்ட் ஹாட்வெயார்**
யாழ்.வீதி,உடுப்பிட்டி.
T:P:- 021 226 3468

மூர்த்தி அலங்காரம், திருமண வீட்டிற்கு தேவையான மாலைகள் அனைத்தும் உரிய நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.
**சிறிமுருகன் பல்பொருள் வாணிபம்**
தொட்டில் கந்தசுவாமி கோவிலடி, கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு
T:P:- 021 205 5701

**A-Z திருமண சேவை**
**X-197 B**
வேலுவனராம வீதி , வெள்ளவத்தை , கொழும்பு-06
T:P:-077 375 3684
உரிமையாளர்:- சிவஸ்ரீ தில்லை அழகேச குருக்கள்.

(7292)

இங்கே சித்திரத்தேர், திருமஞ்சம், வாகனங்கள் யாவும் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.
**அம்பாள் சிற்பக் கலைக்கூடம்**
உரிமையாளர்:- கலாபூஷணம், கலாவித்தகர் ஆறுமுகம் கந்தசாமி, திருநெல்வேலி கிழக்கு.
T:P:- 077 280 2632

**ஹப்பி ரெக்ஸ்ரைல்**
ரெக்ஸ்ரைல் & ரெடிமேட் கார்மெண்ட்ஸ்
எம்மிடம் மங்கள வாத்திய உதிரிப்பாகங்கள்,கோயில் பூசைப்பொருட்கள், வாசனைத்திரவியங்கள், அலங்காரப் பொருட்கள், பித்தளைப் பொருட்கள், கவரிங் நகைகள், செருப்பு வகைகள் (VKC) அனைத்தும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
இல,110, பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
T:P:- 021 226 3287, 077 774 5394

**தொட்டில் கந்தன் விவசாயக் களஞ்சியம்**
கெருடாவில் தெற்கு,
தொண்டைமானாறு.

**உஷா ரேடர்ஸ்**
பாடசாலை வீதி,
கெருடாவில் தெற்கு,
தொண்டைமானாறு
T:P-077 162 9984


**பிரசாத் பல்பொருள் வாணிபம்**
பாடசாலை வீதி, கெருடாவில் தெற்கு,
தொண்டைமானாறு
T:P- 077 920 4210

**Ambal Welding Work Shop**
சகல விதமான இரும்பு வேலைகள், கூரை வேலைகள், கேட் வேலைகள் அனைத்தும் செய்து கொடுக்கப்படும்.
இல. 690, ஆலடிச் சந்தி, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம்.
T:P:- 077 969 0185

கோயில் வர்ண அமைப்புக்கள், வர்ண பூச்சு வேலைகள் சிறந்த முறையில் வடிவமைத்து கொடுக்கப்படும்.
**ஆராதனா பந்தல் சேவை & ரவி பெயின்ரிங்**
உரிமையாளர்:- ஓவியர் ரவி
மணற்றறை லேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம். T:P:- 077 989 6653

# முப்படைகளைப் பாதுகாக்கும் விதத்தில் சுமந்திரன் கருத்துக்களை வெளியிடுகிறார்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் காட்டம்



அண்மையில் பருத்தித்துறையில் நடந்த தமிழரசுக் கட்சியின் புதிய உறுப்பினர்களுக்கான அரசியல் கருத்தரங்கு ஒன்றில் சுமந்திரனும் மாவை சேனாதிராசாவும் நீண்ட உரையாற்றியுள்ளனர். தமிழரசுக் கட்சியின் வரலாற்றையும் நிகழ்கால அரசியல் நிலைமைகளையும் அம்மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு சுமந்திரனை விட்டால் வேறுயாரும் தமிழரசுக் கட்சிக்குக் கிடைக்காமையானது தமிழரசுக் கட்சியினதும் அதன் தலைவரினதும் துரதிஷ்டமே என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எப்.) தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### சுமந்திரனின் பேச்சு

மேற்படி கருத்தரங்கில் தமிழரசுக் கட்சியின் தோற்றம், அதனை சமஷ்டிக் கட்சி என்று அழைத்ததன் வரலாறு, ஒற்றையாட்சி மற்றும் சமஷ்டி தொடர்பான அவரது வியாக்கியானங்கள், காணாமல் போகச் செய்யப்பட்டோர் தொடர்பில் அவர் வெளியிட்ட நையாண்டித் தனமான கருத்துக்கள், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்திடம் இலங்கை அரசாங்கம் இரண்டு வருடகால நீடிப்புக் கேட்டது தொடர்பான கருத்துக்கள், அந்த நீடிப்பை வழங்குவதற்கான அவரது வியாக்கியானங்கள், வடக்கு- கிழக்கு தொடர்பான அவரது கருத்துக்களும் வியாக்கியானங்களுமென நீண்டதொரு உரையை ஆற்றியிருந்தார்.

### எமது பதில்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்று என்ற அடிப்படையிலும் அந்த கூட்டமைப்பை ஆரம்பித்ததில் ஒருவர் என்ற அடிப்படையிலும் கூட்டமைப்பிற்குள் இடையில் வந்து சேர்ந்த சுமந்திரனுக்கு அவர் சார்ந்துள்ள தமிழரசுக் கட்சியில் அவர் வகிக்கும் பதவி காரணமாக பதில் சொல்ல வேண்டிய நிலையை அவர் ஏற்படுத்தியுள்ளார்.

அண்மைக்காலமாக பல்வேறுபட்ட முக்கியமான பிரச்சினைகள் தொடர்பாக கேலியானதும், கிண்டலானதும், நையாண்டித்தனமானதுமான கருத்துக்களை அவர் வெளியிட்டு வருவது கண்டிக்கத்தக்கது.

### காணாமல் ஆக்கப்பட்டோர்

காணாமல் போகச் செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் நடத்தும் போராட்டம் தொடர்பாக அலரிமாளிகையில் நடைபெற்ற சந்திப்பின் போதும் இப்பொழுதும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் தொடர்பாகவும் பாதிக்கப்பட்ட மக்களை மேலும் பாதிப்படையச் செய்யும் வகையில் நையாண்டித் தனமான மிகவும் மோசமான கருத்துக்களை தனது எஜமான விசுவாசத்துடன் கூறிவருகின்றார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற சந்திப்பின்போது உண்ணாவிரதமிருந்த பதினான்கு பேரும் ஏதோ தங்களது உறவினர்களுக்காக மாத்திரம் உண்ணாவிரதமிருந்தது போலவும் அவர்களுடைய போராட்டம் காணாமல் போகச் செய்யப்பட்ட 20,000 பேருக்கானது அல்ல என்றும் அவர் கூறியதன் மூலம் எமது உறவுகளின் போராட்டத்தையே கொச்சைப் படுத்தியுள்ளார். இப்பொழுது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வவுனியாவில், கிளிநொச்சியில், திருகோணமலையில் முல்லைத் தீவில் என வடக்கு- கிழக்கு முழுவதிலும் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் மிகப்பெரும்பான்மையானோர் அரச படைகளாலும் அரச புலனாய்வுப் பிரிவினராலும் கடத்தப்பட்டும், கைது செய்யப்பட்டும், கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

உண்மை நிலை இவ்வாறிருக்கையில், சுமந்திரன் அரசாங்கத்தையும் முப்படைகளையும் பாதுகாக்கும் விதத்திலும் பிரச்சினையின் உண்மையான முகத்தை திசைதிருப்பும் நோக்கிலும் கருத்துக்களை வெளியிடுகின்றார். அண்மையில் காணாமல் போகச் செய்தவர்களே காணாமல் போகச் செய்யப்பட்டவர்களுக்காகப் போராடுகிறார்கள் என்று அவர் வெளியிட்ட மோசமான கருத்து இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

### எமது வரலாற்றுச் சுருக்கம்

வடக்கு-கிழக்கு இணைந்த ஒரு மாகாணத்தை உருவாக்கி பதினெட்டு மாதகாலம் அந்த மாகாண சபை நிர்வாகத்தை நடத்தியதுடன் வடக்கு-கிழக்கு ஒரு அரசியல் நிர்வாக அலகாக இயங்கியதையும் அதை உருவாக்கிய பெருமையும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கு உரித்தானது என்பதையும் வசதியாக மறந்து விட்டு, அந்த நேரத்தில் தானுண்டு தனது படிப்புண்டு என்று இருந்து றோயல் கல்லூரியில் படித்து க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் பல்கலைக் கழகத்திற்கு அனுமதி பெற முடியாமல் மதச் செல்வாக்கைப் பயன்படுத்தி, தமிழகத்தின் சென்னை லயோலா கல்லூரியில் படிப்பதற்கு ஓடிச் சென்ற வருக்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைப் பற்றியும் அதன் அரசியல் பாதையைப் பற்றியும் பேசுவதற்கு எந்தவித அருகதையும் இல்லை. அந்த நேரத்தில் நடைபெற்ற சம்பவங்கள் தெரிந்திருக்க வாய்ப்புமில்லை.

ஆனால் அப்பொழுது நடைபெற்றவைகளைத் தான் பார்த்ததாகக் கூறுவதிலிருந்தே இவர் எவ்வளவு பெரிய பொய்யர் என்பது தெளிவாகிறது.

### தமிழரசுக் கட்சியின் தன்னிச் சையான செயற்பாடு

புதிய அரசியல் சாசனம் தொடர்பாகவும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை பிரச்சினை தொடர்பாகவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்குள் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சுமந்திரனும் சம்பந்தனும் மாத்திரமே தான்தோன்றித்தனமாக முடிவுகளை எடுத்து செயற்பட்டு வருகின்றனர்.

வடக்கு-கிழக்கு இணைப்பு தொடர்பாக, சமஷ்டி அமைப்பு முறை தொடர்பாக, தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமை தொடர்பாக, தமிழ் மக்களின் இறையாண்மை தொடர்பாக, தமிழ் மக்களுக்கான ஒரு சுயாட்சியை ஏற்படுத்துவது தொடர்பாக இலங்கையை ஒரு மதச்சார்பற்ற நாடாக ஆக்குவது தொடர்பாக பல விடயங்களை அரசாங்கத்துடன் பேசி ஒரு தீர்வை எட்டவேண்டியிருந்தது. இதற்காகத்தான் 2015 பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிற்கு ஆணையும் வழங்கியிருந்தார்கள்.

அவ்வாறானதொரு பேச்சுவார்த்தையை அரசாங் கத்துடன் ஆரம்பிக்கும்படியும் அப்பேச்சுவார்த்தைக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக ஒரு குழுவை நியமிக்கும்படியும் இவற்றிற்கு ஒரு மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் அவசியம் என்பதையும் மிக நீண்ட காலமாக வற்புறுத்தியும் கூட அதனை சம்பந்தரோ, சுமந்திரனோ ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக. அரசியல் சாசன உருவாக் கத்திற்காக நிறுவப்பட்ட வழிநடத் தல் குழுவில் இவர்கள் இருவரும் அங்கத்தவர்களாக இருப்பது மட்டு மன்றி, மேற்கூறப்பட்ட விடயங்கள் எதுவும் வழிநடத்தல் குழுவில் குறைந்த பட்சம் ஆராய்வதற்காகக் கூட எடுக்கப்படவில்லை எனவும் அந்தக் குழுவில் அங்கம் வகிக் கின்ற ஏனைய கட்சி ப்பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறுகின்றனர்.

### வடக்கு-கிழக்கு இணைப்பு

வடக்கு-கிழக்கு இணைப்பு என்பது தமிழ் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அடிப்படைகளில் ஒரு முக்கியமான விடயம். இதனை முஸ்லிம்கள் ஏற்றுக் கொள்ளாமையால் தங்களால் எதுவும் செய்ய முடியவில்லை என்று சம்பந்தனும், சுமந்திரனும் கூறுகின்றனர். ஆனால் அதே சமயம், வடக்கு-கிழக்கு இணைவுக்கு தான் எதிரானவன் அல்ல என்று அமைச்சர் ஹக்கீம் கூறுகின்றார்.

வடக்கு-கிழக்கு இணைக்கப் படக்கூடாது என்பதிலும் இணைக்கப்படமாட்டாது என்பதிலும் இந்த நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அமைச்சர்களும் உறுதியாக உள் ளனர். இந்த இடத்திலும் இவர்கள் முஸ்லிம் தரப்பின்மீது குற்றம் சுமத்தி, அரசைக் காப்பாற்றவே முயற்சிக்கின்றனர்.

### அரசியல் கட்சியின் கடமை

ஒரு அரசியல் கட்சிக்கு, மக்கள் கொடுத்த ஆணையை நிறைவேற்றுவதற்கு என்னென்ன வழி முறைகளைப் பின்பற்ற முடியுமோ அந்த வழிமுறைகளைக் கையாண்டு மக்களின் ஆணைகளை நிறைவேற்றுவதே அதன் முக்கியமான செயற்பாடாக இருக்க வேண்டும். இருக்க முடியும். அது மட்டுமன்றி, உரிமைகளுக்காகவும், அபிலாசைகளுக்காகவும், நல்லாட்சிக்காகவும், மக்களின் நலன்களுக்காகவும் போராடுவதென்பது அரசியல் கட்சிகளின் கடமை.

### தமிழரசுக்கட்சியின் அரசியல் கொள்கை என்ன?

ஆனால், வடக்கு-கிழக்கை இணைக்க முடியாது என்ற நொண்டிச் சாட்டைக் கூறி, இப்பொழுது அது சாத்தியமில்லை என்ற பிரச்சாரத்தை மேற்கொள்வதற்கு சுமந்திரனுக்கு அனுமதி அளித்தது யார்? தமிழ் மக்களின் தலையெழுத்தை சம்பந்தனும் சுமந்திரனும் மாத்திரம் தீர்மானிக்க முடியாது.

அதுவும் மக்கள் வழங்கிய ஆணைக்கு அப்பாற் சென்று எல்லாவற்றையும் விட்டுக்கொடுத்து ஒரு உப்புச்சப்பற்ற தீர்வுக்குப் போவது ஏற்றுக் கொள்ளக்கூடியதுமல்ல. ஒற்றையாட்சி என்றால் என்ன? சமஷ்டி என்றால் என்ன? உலகில் எங்கெங்கு எத்தகைய ஆட்சி நடைபெறுகின்றது? பிரத்தியேகமாக இலங்கையில் ஒற்றையாட்சி, சமஷ்டி தொடர்பில் எத்தகைய கருத்தோட்டங்கள் நிலவுகின்றன? என்பவை தொடர் பாக ஒரு பகிரங்க விவாதத்தில் விவாதித்தால் நன்றாக இருக்கும்என்று கருதுகின்றோம்.

### சுமந்திரன் ஒரு சிறந்த சட்டத்தரணியாக இருக்கலாம்.

ஆனால்தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் வல்லமையுள்ள மக்கள் பிரதிநிதியாக அவர் பரிண மிக்கவில்லை என்பதை அவரது செயற்பாடுகள் நாளாந்தம் நிரூபித்து வருகின்றது.

### ஐ.நாவும் சுமந்திரனும்

ஐ.நா.மனித உரிமைப் பேரவை யின் 34ஆவது கூட்டத்தொடர் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதில் இலங் கை பிரச்சினையும் முக்கியவிடயமாக ஆராயப்படுகிறது.

2015ஆம் ஆண்டு செப்டெம்பரில் உங்களால் நீர்த்துப் போகச் செய்யப்பட்டு இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற் றப பட்ட தீர்மானம் இதுவரை இலங்கை அரசால் நிறை வேற்றப்படவில்லை என்பதும் அதிலுள்ள முக்கிய அம் சங்களான போர்க் குற்றம் தொடர் பான விசாரணை, மனித குலத் திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பிலான விசாரணை, காணாமல் போகச் செய்யப்பட்டோர் தொடர்பான விசாரனை போன்ற விசாரணைகளை நடத்துவதற்கு தீர்மானத்தில் குறிப்பிட்டவாறு சர்வதேச நீதிபதிகளையோ, பொது நலவாய நாடுகளின் நீதிபதி களையோ அழைக்க மாட்டோம் என்றும், இராணுவத்திற்கு எதிரான எந்த விசாரணை ஆணைக் குழுக்களும் நியமிக்கப்படமாட்டாது என்றும் அதேபோல் சர்வதேச சட்டத்தரணிகளோ அல்லது சர்வ தேச வழக்கு தொடுநர்களோ அழைக்கப்படமாட்டார்கள் என்றும் இலங்கை அரசாங்கம் திட்டவட்ட மாகக் கூறியுள்ளது.

அவ்வாறான ஒரு சூழ் நிலையில், இலங்கை அரசாங்கம் கால நீட்டிப்பு கேட்பதன் அர்த்தம் என்ன? அந்த கால நீட்டிப்பை சுமந்திரனும் சம்பந் தரும் ஆதரிப்பதன் அர்த்தம் என்ன? அந்த கால நீட்டிப்பு கூடாது என மனித உரிமைகள் ஆணையகத்திற்கு அறிவித்த கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை முட்டாள்களாகவும், ஒற்றுமையைக் குலைப்பவர்களாக வும் இவர் குறிப்பிடுவதுடன், தலைவர் சம்பந்தனுக்கும் அண் ணன் மாவை சேனாதிராஜாவிற்கும் வெளி விவகாரங்களைக் கவனிக்கக்கூடிய எனக்கும் தெரி யாமல் இவர்கள் எவ்வாறு கடிதத் தை அனுப்ப முடியும் என்ற கேள்வியை சுமந்திரன் கேட்டிருக்கின்றார்.

இந்தக் கேள்வியை கூட்டமைப்பின் மக்கள் பிரதி நிதிகளிடம் கேட்பதற்கு முன்னர், சுமந்திரன் தான் முன்னின்று உழைத்து நிறைவேற்றிய தீர்மானத்தை இலங்கை அரசு அமுல்படுத்துவதற்கு கடந்த இரண்டு வருடங்களில் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்பதை வெளியிடுவாரா? இந்த விடயம் குறித்து ஒரு முறையேனும் பாராளுமன்ற குழுக் கூட் டத்திலோ அல்லது ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்திலோ சுமந்திரன் வாய்திறவாதது ஏன்? என சுமந்திரனை நோக்கி சுரேஷ் பல கேள்விகளை அடுக்கி நீண்ட ஊடக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். (இ)

# என்னிடமிருந்து முஸ்லிம்களை நிரந்தரமாக பிரிப்பதற்கு வெளிநாட்டு சக்திகள் சதி முயற்சி

## மகிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு



என்னிடமிருந்து முஸ்லிம்களை நிரந்தரமாக பிரிப்பதற்கு வெளிநாட்டு சக்திகள் சதி செய்கின்றன என தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இந்த சூழ்ச்சிகளில் சிக்கி பலியாக வேண்டாம் எனவும் முஸ்லிம்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண முஸ்லிம் பிரதிநிதிகள் சிலருக்குமிடையேயான சந்திப்பொன்று நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை கொழும்பிலுள்ள மகிந்தவின் இல்லத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்குமேலும் தெரிவிக்கையில்,

எனது ஆட்சிக்காலத்தில் முஸ்லிம்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அத்துடன் அவர்களுக்கான சகலஉதவிகளும் வழங்கப்பட்டன. இதனை எவராலும் மறுக்க முடியாது.

நான் வடக்கு கிழக்கில் பல பள்ளிகளை புனரமைத்திருக்கிறேன். அத்துடன் நாட்டில் புதிதாக 4 பள்ளிகளை நிர்மாணித்துக் கொடுத்திருக்கிறேன்.

இவ்வாறானதொரு நிலையில் இன்று முஸ்லிம்களை என்னிடமிருந்து நிரந்தரமாக பிரப்பதற்கு வெள்ி நாட்டு சக்திகள் சதித்திட்டங்களை தீட்டுகின்றன. அதற்காக பெருமளவில் நிதி ஒதுக்கப்படு கின்றது. முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இந்த சூழ்ச்சிக்கு யாரும் பலியாகி விடக்கூடாது. அவர்கள் இந்த சூழ்ச்சியிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அத்துடன்எனது ஆட்சியில் முஸ்லிம்களுக்கு எதிராக எந்த செயற்பாடுகளும் இடம் பெறவில்லை என உறுதியாக கூறிக்கொள்ள விரும்புகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# லிந்துலையில் மினி சூறாவளி

## 33 வீடுகள் சேதம்





லிந்துலை, மெராயா பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 3.35 மணியளவில் ஏற்பட்ட மினி சூறாவளியினால் 33 வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் சுமார் 150 க்கும் மேற்பட்டோர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

பாதிப்படைந்த வீடுகளில் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரின் வீடும் அடங்குவதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சூறாவளி ஓல்ட்ரிம் தோட்டத்துக்கு சொந்தமான கௌலினா பிரிவும் மற்றும் என்போல்ட் தோட்டப்பகுதியிலும் ஏற்பட்டுள்ளது.

இதில் கௌலினா தோட்டத்தில் 25 வீடுகளும், என்போல்ட் பகுதியில் 8 வீடுகளும் ஒரு கிறிஸ்தவ தேவாலயமும் சேதமடைந்துள்ளன.

மின்கம்பங்கள் மற்றும் பாரிய மரங்கள் முறிந்து வீழ்ந்ததன் காரணமாக இப்பிரதேசத்தில் மின்சாரமும் துண்டிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட 33 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 150 இற்கும் மேற்பட்டோர்களுக்கு நிவாரணங்களை வழங்க பிரதேச செயலகம், தோட்டநிர்வாகம் மற்றும் பொதுமக்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (இ-7)

# சட்டவிரோத தீப்பெட்டி தொழிற்சாலைக்கு சீல்

(கொழும்பு)

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீனின் பணிப்புரைக்கமைய, இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் தரச் சான்றிதழ் அனுமதி பெறாது நிட்டம்புவ, பணாவலவில் சட்டவிரோதமான முறையில் இயங்கி வந்த தீப்பெட்டித் தொழிற்சாலையொன்றை, திடீர் சுற்றிவளைப்பு செய்த நுகர்வோர் பாதுகாப்புச் சபை அதிகாரிகள் அதற்கு சீல் வைத்துள்ளனர்.

தகவலொன்றின் அடிப்படையில், அந்தத் தொழிற்சாலையை நேற்றுக் காலை, முற்றுகையிட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரிகள், 28,080 தீப்பெட்டிகளையும் கைப்பற்றியுள்ளனர். 2012ஆம் ஆண்டு, நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் வர்த்தமானி பிரகடனத்தின் விதிமுறையின் கீழ், இத் தொழிற்சாலைக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதாக அதிகாரசபையின் தலைவர் ஹஸித திலகரத்ன தெரிவித்தார். (இ-7)

# இனி மனிதாபிமான விசா கிடையாது ஐரோப்பிய உயர் நீதிமன்றம் தீர்ப்பு!

தஞ்சம் கோரும் நோக்கில் மனிதாபிமான விசாவுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு இனிமேல் விசா வழங்கப்படத் தேவையில்லை என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய உயர் நீதிமன்றம் (European Court of Justice) அதனுடைய உறுப்பு நாடுகள், மற்றைய நாடுகளிலிருந்து தஞ்சம் கோரும் நோக்கத்துடன் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குள் உள்நுழைவதற்குரிய மனிதாபிமான அடிப்படையிலான விசாக்களை விண்ணப்பிக்கும் பொழுது அவ்வாறான விசாக்களை வழங்கத் தேவையில்லை என்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

அண்மையில் சிரிய அகதி குடும்பம் ஒன்று லெபனான் நாட்டிலுள்ள பெல்ஜிய நாட்டுத் தூதரகத்தில் பெல்ஜியத்திற்குச் சென்று தஞ்சம் கோரும் நோக்கத்துடன் மனிதாபிமான விசாவுக்கு விண்ணப்பித்திருந்தது.

பெல்ஜிய அதிகாரிகள் இந்த விசா வழங்க மறுத்து விட்டார்கள். அவர்கள் பெல்ஜியம் சென்று தஞ்சம் கேட்டு 90 நாட்களுக்கு மேல் நின்று விடுவார்கள் என்று தெரிவித்து இந்த விசாவை மறுத்திருந்தார்கள்.

இதனை ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு இவ்வாறு விசா வழங்கப்படவேண்டிய தேவை இல்லை என்று 7 மார்ச் 2017 அன்று தீர்ப்பளித்துள்ளது.

இலங்கையிலிருந்து தஞ்சம் கோரும் நோக்கத்துடன் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு விசாவுக்கு விண்ணப்பித்தாலும் விசா மறுக்கப்படும் என்பதையே இந்த தீர்ப்பு சுட்டிக்காட்டுகின்றது. (இ-12)

# இராசி பலன்

10.03.2017

(மாசி 26, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.25 மணிக்கு

திரயோதசி முன்னிரவு 9.31 மணிவரை

ஆயிலியம் பிற்பகல் 5.37 மணிவரை

சுபநேரம் 6.23-7.53 மணிவரை

இராகுகாலம் 10.53-12.23 மணிவரை

பிரதோச விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக் புத | செவ் | | |
| சூரி கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் பூராடம், உத்திராடம் மாலை 5.15 இற்கு சிங்-சந் | | சந் |
| | | | ராகு |
| | சனி | | குரு |

**மீனம்:** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய •நாள், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், பல நாட்களாக திட்டமிட்ட காரியம் இன்று கைகூடலாம்.

**மேடம்:** பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்:** சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், மூத்த சகோதரர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், விடாமுயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும்.

**மிதுனம்:** கடினமான வேலையைக்கூட நயமாகப்பேசி சமாளிப்பீர்கள், வெளியூர் பயணங்களால் ஆதாயம் கிடைக்கும், வாக்கு மேன்மையுண்டு.

**கும்பம்:** கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கலாம், கடன்சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கடகம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், நண்பர்கள் நல்ல ஆலோசனைகளைக் கூறலாம், பிள்ளைகளால் சுப விரயங்கள் ஏற்படலாம்.

**மகரம்:** இறைவழிபாட்டால் இனிமை சேரும் நாள், பிரிந்து சென்ற நண்பர்கள் பிரியமுடன் வந்திணைவர், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிம்மம்:** பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், வேலைச்சுமை கூடும், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**தனுசு:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு தேவை, பிரயாண பயமுண்டு.

**விருச்சிகம்:** பிரதோச வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம்.

**துலாம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான வாய்ப்புண்டு.

**கன்னி:** ஒளிமயமான எதிர்காலத்திற்கு உறுதுணை புரியும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும்.

## பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய

# வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு நடைபெற்ற 2வது மீளாய்வுக் கூட்டம்

(பூநகரி)

பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 16 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இது தொடர்பிலான இரண்டாவது மீளாய்வுக் கூட்டம் பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் பூநகரி பிரதேச உதவிச் செயலர் ஆர்.சி.அமலதாஸ் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பி.கோகிலன், பூநகரி கரையோரப் பிரதேச கிராம சேவை அலுவலர்கள், கடற்படையினர், தரைப்படையினர் ஆகியவற்றின் உயர் அதிகாரிகள், பொலிஸ் பிரிவின் உதவிப்பொலிஸ் அத்தியட்சகர்கள் உட்பட வலைப்பாடு, நாச்சிக்குடா, முழங்காவில் ஆகியவற்றின் பங்குத் தந்தையர்கள், பாலைதீவு அந்தோனியார் ஆலய மூப்பர், அல்லைப்பிட்டியைச்சேர்ந்த அஜேசுதாசன் ஆகியோர் பங்கேற்று இறுதி ஒழுங்குகள் தொடர்பில் கலந்துரையாடலை மேற்கொண்டனர்.



அத்துடன்பாதுகாப்பு ஒழுங்குகள் தொடர்பிலும் தொற்று நோய்கள் பொதுவாகப் பரவி வருவதால் அது சம்பந்தமான விழிப்புணர்வை தமது பிரதேசத்தின் யாத்திரிகர்கள் மத்தியில்ஏற்படுத்தவும் அதற்கு சகலதரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து கடற்படை அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில்,

பாதுகாப்பு நடவடிக்கை குறித்து படகுகளின் உரிமையாளர்களுக்கு வேண்டிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் கடல் வழிப் பயணத்தின் போது பாதுகாப்பு அங்கிகள் கொண்டு செல்லப்படவேண்டுமெனவும் சிறிய படகுகளில் குறைந்தது 9 பயணிகளே பயணிக்க வேண்டுமெனவும் அனைத்து தரப்பினரும் தமது அறிவுறுத்தல்களை ஏற்று நடந்து எதுவித அசம்பாவிதங்களும் ஏற்படாதவண்ணம் உற்சவம் சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

ஏனைய ஒழுங்குகளான குடிநீர்வசதி, சுகாதார சேவைகள் சிறந்த முறையில் நடைபெற உரிய தரப்பினர் நடவடிக்கைஎடுத்துள்ளதாக இதன் போது தெரிவிக்கப்பட்டது.

அல்லைப்பிட்டியில்இருந்து ஏற்கனவே பாலைதீவிற்கு சென்றுள்ள ஆலய மூப்பர், பங்கு மக்கள் ஆகியோர் பல்வேறு பணிகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பாலைதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து திருச்செபமாலையும் திருப்பலியும் நடைபெறும்.

எதிர்வரும் 18 ஆம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு பூசை வழிபாடு நடைபெற்று நற்கருணை வழிபாடு நடைபெறும்.


எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு திருச்செபமாலையும் யாழ்.மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அதன் பின் திருச்சொரூப பவனியும் ஆசீர்வாதமும் இடம்பெறும்.

இந்த வழிபாட்டில் ஏறக்குறைய 12 ஆயிரம் பக்தர்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (2-84)




## புகையிரதம்-ஹயஸ் மோதி விபத்து; சாரதி மயிரிழையில் உயிர்தப்பினார்

## முறிகண்டியில் சம்பவம்



முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முறிகண்டி பகுதியில் புகையிரதமும் ஹயஸும் விபத்துக்குள்ளானதில் ஹயஸ் வாகன சாரதி அதிர்ஷ்டவசமாக காயங்கள்எதுவுமின்றி மயிரிழையில் உயிர்தப்பினார்.

வாகனம் பலத்த சேதத்துக்குள்ளானது. இச் சம்பவம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் முறிகண்டி- அக்கராயன் வீதியில் நடைபெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

ஸ்கந்தபுரம் பகுதியில் இருந்து கிளிநொச்சியை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ஹயஸ் வாகனம் முறிகண்டிப்பகுதியில் உள்ள புகையிரதக்கடவையை கடக்க முயன்றபொழுது கடவையில் இருந்த சமிக்ஞை விளக்கு சரியான முறையில் ஒளியைப் பாய்ச்சாமையால் யாழில் இருந்து கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்த புகையிரதத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த ஹயஸ் வாகனத்தில் சாரதி மட்டுமே பயணித்தமையால் உயிர்ச்சேதங்கள் எவையும் இடம் பெறவில்லை.

வடக்கு மாகாணத்தை பொறுத்தவரை பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளினாலும் சமிக்ஞை விளக்குகள் சீரின்மையாலும் பல விபத்துக்கள் இடம்பெற்றுள்ள போதும் இதுவரை மாற்று நடவடிக்கைகள் ஏதும் செய்யப்படவில்லை என பொதுமக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

குறித்த கடவை மு/முறிகண்டி இந்து வித்தியாலயத்திற்கு அருகில் காணப்படுவதால் பாதுகாப்பான புகையிரத கடவையாக அமைக்க வேண்டும் என மாணவர்கள், பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். இவ்விடத்தில் அடிக்கடி விபத்துக்கள் நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (2-312-15)

## 9 ஆவது நாள்

# படை வசமுள்ள காணிகளை விடுவிக்கக்கோரி கேப்பாப்பிலவு மக்களின் கவனயீர்ப்பு தொடர்கின்றது

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கேப்பாப்பிலவு கிராமத்தில் படையினர் வசமுள்ள தமது காணிகளை விடுவிக்கக்கோரி கேப்பாப்பிலவு மக்கள் முன்னெடுத்து வரும் கவனயீர்ப்புப் போரட்டம் நேற்று வியாழக்கிழமை 9 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வன்னியில் நடைபெற்று முடிந்த இறுதிக்கட்ட யுத்தம் நிறைவடைந்து 8 வருடங்களாகியும் தலைமுறை தலைமுறையாக தாங்கள் வாழ்ந்த இடத்தில், தங்களது சொந்த நிலத்தில் மீள்குடியேற அனுமதிக்காது நல்லாட்சி தங்களை ஏமாற்றி வருவதாக தெரிவித்துள்ளனர்.




கடந்த 9 நாட்களாக முன்னெடுக்கப்பட்டு வரும் கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு பல்வேறு தரப்பு மக்களும் தமது ஆதரவை வழங்கி வருகின்றனர். (2-15)

# சுகாதார விதிமுறைகளை மீறி செயற்பட்ட உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கை

## தண்டப்பணமும் விதிப்பு

(மல்லாவி )

மாங்குளம் பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவில் உள்ள திருமுறிகண்டி, மாங்குளம் நகரப் பகுதி ஆகிய இடங்களில் சுகாதாரச் சீர்கேடுகளுடன் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து, விற்பனை செய்த இரண்டு உணவக உரிமையாளர்களுக்கு 40 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்துள்ளதுடன், மறு அறிவித்தல் வரை உணவகங்களை மூடுமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் துணுக்காய் ஆரம்ப நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் புதன் கிழமை காலை மாங்குளம் பொதுச் சுகாதாரப் பிரிவு சுகாதார பரிசோதகரால் துணுக்காய் ஆரம்ப நீதிமன்றத்தில் உணவகங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்ட போது வழக்கை விசாரித்த நீதிபதி இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மாங்குளம் நகரப் பகுதியிலும் மற்றும் திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்திற்கு அண்மையாகவும் சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்கி வந்த இரண்டு உணவகங்கள் சுகாதார விதிமுறைகளை மீறி செயற்பட்டு வந்தமை சுகாதார பரிசோதகர்களின் ஆய்வின் போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து நீதிமன்றத்தில் உணவக உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

நீதிபதி தலா 20 ஆயிரம் ரூபா படி 2 உணவக உரிமையாளர்களுக்கும் மொத்தம் 40 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்துள்ளதுடன் எதிர்வரும் 22 ஆம் திகதிக்குள் உணவகங்களை சீர் செய்ய சுகாதார பரிசோதகர்களின் ஒப்புதலுடன் நீதிமன்றத்தில் சமர்ப்பித்து அனுமதி பெற்றதன் பின்னர் உணவகங்களை மீள திறக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (2-15)

## 2 ஆவது நாள்

# காணாமல் போனோரின் உறவுகள் முல்லையிலும் தொடர் போராட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட நிலையிலும் மற்றும் ஏனைய வழிகளாலும் வலிந்து காணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் தீர்வு கிடைக்கும் வரை கவனயீர்ப்புப் போராட்டத்தை தொடரப் போவதாக தெரிவித்து கவனயீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்து நேற்று வியாழக்கிழமை 2 ஆவது நாளாகவும் முன்னெடுத்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் புதன் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக வீதியின் அருகாமையில் கொட்டகைகள் அமைத்து போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பல இடங்களில் இருந்தும் பொதுமக்கள் வருகை தந்து இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.




தற்போதுகாணாமல்போனோரின் உறவினர்களினால் கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களில் தொடர் கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் நேற்று முன்தினம் முல்லைத்தீவிலும் உறவுகளால் தொடர் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமது கோரிக்கைக்கு தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என அம்மக்கள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர். (2-15)

## 6 ஆவது நாள்

# முகாம்களில் வாழ்ந்த வாழ்க்கையைவிட சொந்த ஊரில் மோசமாக வாழ்கின்றோம்

## பன்னங்கண்டி மக்கள் ஆதங்கம்




(பரந்தன்)

இடம்பெயர்ந்து சென்று முகாம்களில் வாழ்ந்த வாழ்க்கையை விட தற்போது சொந்த ஊரில் மிகவும் மோசமான வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றோம் என கிளிநொச்சி பன்னங்கண்டியில் ஆறாவது நாளாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை ஆறாவது நாளாக காணி அனுமதிப்பத்திரம், வீட்டுத் திட்டம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை கோரி கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களே இவ்வாறு கருத்து தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் குறிப்பிடுகையில்,

தென்னிலங்கையில் ஏற்பட்ட இன வன்செயல்களால் பாதிக்கப்பட்டு இங்கு வந்த நாங்கள் பல்வேறு பிரதேசங்களில் குடியமர்த்தப்பட்டோம்.

அந்த வகையில் பன்னங்கண்டியிலும் 1990 ஆம் ஆண்டு தொடக்கம் வாழ்ந்து வருகின்றோம்.

நாங்கள் இடம்பெயர்ந்து சென்று முகாம்களில் வாழ்ந்த போது கூட நீர் வசதி, மலசலகூட வசதிகள் எல்லாம் ஏற்படுத்தி தரப்பட்டது.

ஆனால் இங்கு எதுவும் இல்லை. 1990 ஆம் ஆண்டு தொடக்கம் இவ்வாறான அவல வாழ்க்கையையே வாழ்ந்து வருகின்றோம்.

எனவே தயவு செய்து எங்களையும் மக்களாக கருதி அரசியல்வாதிகள், அதிகாரிகள் ஆகியோர் உரிய பொருத்தமான நடவடிக்கையை மேற்கொண்டு எங்கள் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்துங்கள் என வினயமாக கோருகின்றோம் எனத் தெரிவித்த பன்னங்கண்டி மக்கள் மீள்குடியேற்றத்திற்கு பின்னர் பல தேர்தல்களை சந்தித்து விட்டோம். இந்தக் காலங்களில் எல்லாம் எங்களின் ஒழுங்கை ஒழுங்கையாக வருகின்ற அரசியல்வாதிகள் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் ஒரு மாதத்தில் மூன்று மாதத்தில் உங்களுக்கான வீட்டுத்திட்டத்தை வழங்குவோம் என வாக்குறுதிகளை வழங்கி விட்டு செல்கின்றனர்.

ஆனால் பின்னர் எதுவும் நடப்பது இல்லை. அதிகாரிகளும் தங்களால் சட்டத்திற்கு புறம்பாக எதுவும் செய்ய முடியாது என்று கைவிரித்து விட்டனர்.

எங்களை எல்லோரும் தங்களின் தேவைகளுக்கு பயன்படுத்தப்படுகின்ற ஒரு சமூகமாகவே வைத்திருப்பதனை எண்ணி மிகவும் மனவேதனை அடைகின்றோம்.

இவர்கள் நினைத்திருந்தால் எங்களுக்கு மாற்று காணிகளும் வீட்டுத்திட்டகளும் வழங்கியிருக்க முடியும்.

ஆனால் அதனை எவரும் செய்யவில்லை. இது எங்களை மிகவும் வேதனையடையச் செய்துள்ளது.

எங்கள் பெற்றோர்கள் இவ்வாறு அவல வாழ்க்கை வாழ்ந்து விட்டார்கள். நாங்களும் அவ்வாறே வாழ்ந்து வருகின்றோம்.

ஆனால் இனி எங்கள் பிள்ளைகளின் வாழ்க்கையிலாவது மாற்றம் வர வேண்டும். அதற்காக பொறுமையிழந்து போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம் எனவும் தெரிவித்தனர். (2-312-15)




## அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய வருடாந்தப் பொதுக் கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய வருடாந்தப் பொதுக் கூட்டம் கரைச்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கரைச்சி அ.சே.ஓ..ந.நிதியத் தலைவர் அ.கனகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக கரைச்சி உதவிப் பிரதேச செயலர் திருமதி.சிவகாமி உமாகாந்தன், கரைச்சி உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ச.பி. அமல்ராஜ், கணக்காளர் ப. லூரேந்திரன், கௌரவ விருந்தினராக ஓய்வு பெற்ற உதவி அரசாங்க அதிபர் பொ. நித்தியானந்தம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். அன்றைய தினம் கரைச்சிப் பிரதேச அ.சே.ஓ.ந.நிதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவும் நடைபெறவுள்ளது.

கரைச்சிப் பிரதேச அரச சேவை ஓய்வூதியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் புதிதாக இணைந்து கொள்ள விரும்புபவர்கள் தங்கள் ஓய்வூதிய அட்டை, தேசிய ஆள் அடையாள அட்டை என்பனவற்றுடன் சமுகமளிக்குமாறு கிளிநொச்சி அரச சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதிய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (2-254)

## புளியங்குளத்தில் சிறுத்தை நடமாட்டம்;மக்கள் அச்சத்தில்

வவுனியா புளியங்குளம் பரசங்குளத்தில் சிறுத்தை ஒன்று நடமாடுவதாக பிரதேச மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். இது பற்றி மேலும் தெரிய வருவதாவது,

கடந்த ஒருமாத காலமாக இக்கிராமத்தில் சிறுத்தை ஒன்று திரிவதாகவும் அச்சிறுத்தை இதுவரை மூன்று மாடுகளைப் பிடித்துக் கொன்றுள்ளதாகவும் கிராம மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை நேற்று முன்தினம் பகல் பசு ஒன்றை சிறுத்தை தாக்கியதாகவும் அதனைக் கண்ட பொதுமக்கள் அதனை துரத்தியதாகவும் தெரிவித்தனர்.

சிறுத்தையின் நடமாட்டத்தினால் மக்கள் அச்சத்தில் உள்ளனர். எனவே சம்பந்தபட்ட அலுவலர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-250)

## கிளிநொச்சியில் காளான் உற்பத்தி



கிளிநொச்சி மாவட்டத்தில் மரத்தூசியில் இருந்து மேற்கொள்ளப்பட்ட காளான் உற்பத்தி வெற்றி பெற்றுள்ளது. கிளிநொச்சி ஜெயந்திநகரில் உள்ள மகாதேவா ஆச்சிரமத்தில் இக் காளான் உற்பத்தி அண்மையில் நடைபெற்று தற்போது 40 நாட்கள் நிறைவடைந்தநிலையில் அறுவடை நடைபெற்று வருகின்றது.(2)

# வடக்கு மாகாண பாடசாலைகளில் நிலவி வருகின்ற ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பில் முதலமைச்சருக்கு கடிதம்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவநேசன் அனுப்பி வைத்தார்

(முல்லைத்தீவு)

வடக்கு மாகாணத்தின் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை பற்றியும் அவற்றை நிவர்த்தி செய்யக் கூடிய நடைமுறைச் சாத்தியமான யாழ்.மாவட்டம் தவிர்ந்த ஏனைய பின்தங்கிய மாவட்டங்களின் கல்வித் தரத்தை மேம்படுத்தக் கூடிய வழிமுறைகள் பற்றியும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தின் பிரகாரம்,

வடக்கு மாகாண ஆசிரிய சேவையில் பட்டதாரிகளை இணைத்துக் கொள்வதற்காக நடத்தப்பட்ட பரீட்சையின் பெறுபேறுகள் பற்றி நிறையவே சந்தேகங்கள் பல மட்டத்திலும் ஏற்பட்ட வண்ணமேயுள்ளது.

2ஆயிரத்து 300 விண்ணப்பதாரிகளில் இருந்து பரீட்சைக்கு தோற்றி, பின் பரீட்சை முடிவுகளின் படி, அண்ணளவாக சுமார் 800 பேர் வரையிலான பட்டதாரிகள், ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப்படவுள்ளனர். அதாவது ஏனையவர்கள் சித்தியடையவில்லை என்று கருத்திலெடுக்கப்படுகின்றது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பக் கூடிய வகையில் வெட்டுப் புள்ளியை தீர்மானிப்பதிலும், சம்பந்தப்பட்ட மாவட்ட பரீட்சார்த்திகளில் சிறப்பான பரீட்சைமுடிவுகளை வெளிக்காட்டுபவர்களை கொண்டு வெற்றிடங்களை நிரப்பவும் விரும்பாது மாகாண கல்வித் துறை தொடர்ந்தும் தவறிழைத்து வருகின்றது.

நடந்து முடிந்த பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் 60% ற்கு மேலானவர்கள் யாழ்.குடாநாட்டை சேர்ந்தவர்கள் தான். ஆனால் யாழ். குடாநாட்டில், தீவக பகுதியின் பாடசாலைகளில் தான் கூடுதலாக ஆசிரியர் பற்றாக் குறை காணப்படுகின்றது.

அதேநேரத்தில் யாழ். குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் மேலதிகமாக ஆசிரியர்கள் உள்ளதும் வடக்கு மாகாண கல்வித்துறையின் வெளிப்படையான இரகசியம் என்பதும் யாவரும் அறிந்த விடயங்கள்தான். இம் மேலதிக ஆசிரியர்களை கொண்டு தீவக ஆசிரியர் தேவைகளை நிரப்ப



முடியும் என்பதுவும் சாத்தியமான தீர்வுகளில் ஒன்று ஆகும்.

நியாயமாக பார்த்தால் வன்னி பெருநிலப்பரப்பின் நான்கு மாவட்டங்களிலும் தீர்க்க முடியாத அளவிலேயே ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுகின்றது.

உதாரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆசிரியர்கள் தேவைப்பாடு 128 ஆக இருக்க, சித்தியடைந்த பட்டதாரிகள் 41 என அறிவிக்கப்படுள்ளது. எனவே மீதமுள்ள வெற்றிடங்கள் வெளி மாவட்ட பட்டதாரிகளினால் நிரப்பப்படவுள்ளது. இவ்வாறான நியமனதாரிகள் அதிகஷ்ட பிரதேச நியமனமாக தங்களை கருதுவதால் அவரகளினது எண்ணங்களும் செயற்பாடுகளும் ஐந்து வருடகாலத்தை ஓட்டுவதும், நியமனங்களை தக்கவைப்பதும், தங்கள் மேற்படிப்புகளை மேற்கொள்வற்கான கல்வி விடுமுறைகளை பயன்படுத்துவதும் என முனைப்பாக செயற்படுத்தி, இறுதியில் வளம் குறைந்த பிரதேச மாணவர்களை இடைநடுவில் கைவிட்டு விட்டு செல்வதுமாக இருக்கும்.

கஷ்டபிரதேசங்கள், இவ்வாறான ஆசிரியர் நியமனங்களினால் தொடர்ந்தும் கஷ்ட பிரதேசங்களாகவே வைத்திருப்பதிற்கான நடைமுறைகளை வடக்கு மாகாண கல்வித்துறை கடைப்பிடிக்கின்றமை மிகவும் கவலைக்குரியதும் கண்டனத்திற்குரியதும் ஆகும்.


எனவே தேவைக்கு ஏற்ப அளவிலான பரீட்சார்த்திகள் பங்குபற்றுவதை உறுதிசெய்வதுடன், தேவையில்லாத மாவட்டங்களிற்கு பரீட்சைகளை தவிர்க்கப்படவேண்டும், தெரிவுப் பரீட்சைகளை மாவட்ட மட்டத்தில் நடத்தப்படல் வேண்டும்.

இவற்றின் மூலம் ஐந்து வருடகால சேவை பற்றிய சுற்றுநிருபத்தை மட்டுப்படுத்தவும், அதிகஷ்ட பிரதேசங்களை இல்லாமற் செய்யவும் முடியும்.

இது போன்ற விடயங்களில் நாம் பின்பற்றக் கூடிய இறுக்கமான நடை முறைகளே வன்னிப் பெரு நிலபரப்பின் நான்கு மாவட்டங்களின் கல்வியினை மேம்படுத்தும் என்பது எமது உறுதியான நம்பிக்கையாகும்.

தேசிய கல்வியியல் கல்லூரிக்கு பயிலுநர்களை உள்வாங்கப்படும்போது கடைப்பிடிக்கப்படுகின்ற மாவட்ட வெற்றிடம் பற்றிய தரவுகளின் அடிப்படையிலான நடைமுறைகளை பாடசாலை ஆசிரியர் நியமனங்களிலும் கடைப்பிடிப்பதன் மூலம் நடைமுறை முரண்பாடுகளையும் தவிர்க்கமுடியும் என நம்புகின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# தென்னைப்பயிர்ச்செய்கை சபையினால் வழங்கப்படும் குறைந்த வட்டியுடனானஅபிவிருத்தி கடன் திட்டம்



இக் கடன் திட்டமானது இலங்கையில் 1998ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டாலும் இத்திட்டமானது வட பகுதியில் யுத்தத்தின் பின்னர் தான் படிப்படியாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, சம்பத் வங்கி, செலான்வங்கி, யூனியன் வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி, வர்த்தக வங்கி ஆகிய நிதி நிறுவனங்கள் பங்கு வகிக்கின்றன.

மற்றைய விவசாயக் கடன் திட்டங்கள் போலன்றி இக் கடன் திட்டமானது நிதிசார்ந்த உதவிகளைச் செய்வது மட்டுமல்லாமல் தொழில்நுட்பம் சார் விரிவாக்க உதவிகளையும் வழங்குகிறது. அத்துடன் தென்னை பயிர் செய்யும் இடங்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல், தென்னை பயிரிடுவோரின் தொழில் வாய்ப்பை அதிகரிப்பதன் மூலம் அவர்களின் வருமானத்தை கூட்டுதல், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் போன்ற நோக்கங்களையும் உடையது

இக்கடன் திட்டத்திற்கு பொருத்தமானவர்கள்

1) மேற்கூறப்பட்ட நிதி நிறுவனங்களின் வாடிக்கையாளர்கள்,

2) தென்னங்காணி உரிமையாளர்கள் (உறுதி அல்லது அனுமதிப்பத்திரம் உடையவர்கள்) அல்லது நீண்டகாலக் குத்தகையாளர்கள்

3) மொத்தத் திட்டத்திற்கான செலவில் குறைந்தது 50 வீதத்தையாவது, செலவழிக்க தயாராக இருக்கக் கூடியவர்கள்.

4) நிதி நிறுவனங்களில் கடன்களை பெற்று, அதை ஏற்கனவே மீளக்கட்டியவராக இருக்க வேண்டும்.

5) 0.5 ஏக்கர் (8பரப்பு) தொடக்கம் 50 ஏக்கர் வரையிலான மேட்டு நிலத்தை உடையவராக இருக்க வேண்டும்,

6) விண்ணப்பதாரி 53 வயதிற்கு மேற்பட்டவராக இருந்தால், அவரிற்கு 18 வயதிற்கு மேற்பட்ட பின்னுரித்தார் ஒருவர் கையொப்பமிட வேண்டும்.

7) வங்கிகளால் ஏற்றுக் கொள்ளக் கூடிய இருவர் பிணையாளராக இருக்க வேண்டும்.

8) ரூ.200,000 இற்கு மேற்பட்ட தொகைக்கு வங்கிகளால் ஏற்றுக் கொள்ளக்கூடிய அசையாத, அசையும் சொத்துக்களை வங்கி தன்னகத்தே வைத்திருக்கும் (அடைமானம்) நிபந்தனைக்கு சம்மதித்தவராக இருக்க வேண்டும்.

இக்கடன் திட்டமானது

- ஒரு ஏக்கரிற்கு (16பரப்பு) ஆகக் கூடிய தொகையாக ரூபா.125,000/= படி இரண்டு மில்லியன் வரை விண்ணப்பிக்கலாம்,
- ஆண்டு வட்டி 9%
- 3 வருடம் அல்லது 5 வருடத்திற்குள் செலுத்தப்பட வேண்டும்.
- வட்டியும் முதல் தொகையும், மாதாந்தமாக அல்லது காலாண்டிற்கு ஒருமுறை கட்டி முடிக்க வேண்டும்,
- வெற்றிகரமாகவும், நிதித் திட்டத்திற்கு ஏற்ற வகையிலும் பயிர்ச் செய்கையை மேற் கொள்பவரிற்கு முதலாம் வருட வட்டித்தொகையானது காணியின் நிலை மற்றும் பயிர்ச் செய்கையின் தன்மை என்ப வற்றிற்கு அமைவாக 100 வீதம் திருப்பிச் செலுத்தப்படும்.
- 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம் வருடங்களில் காணியின் நிலை மற்றும் பயிர்ச் செய்கையின் தன்மை என்பவற்றிற்கு அமைவாக 50 வீத வட்டி திருப்பிச் செலுத்தப்படும்.
- இவ்வாறு வட்டி மீளளிப்புச் செய்யப்படுவதால் வினைத்திறனான வட்டி வீதமானது 3.5 வீதம் ஆகும்.

எவ்வாறு இக்கடன் திட்டத்தை பெறுவது

தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் பிராந்திய காரியாலயத்திலோ அல்லது கமநல சேவைத் திணைக்களத்திலுள்ள தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரின் அலுவலகத்திலோ உரிய விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூரணப்படுத்த வேண்டும். பின்னர் இப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவமானது உரிய வங்கிக் கிளையில் விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்டு வங்கியால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இப்படிவத்தை பிராந்திய காரியாலத்திலோ அல்லது தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரிடமோ கையளிக்க வேண்டும். இக்கடனுக்காக விண்ணப்பிக்கப்பட்ட இடமானது பண்ணைத் திட்டமிடல் அதிகாரியால் பரிசீலிக்கப்பட்டு விண்ணப்பதாரிக்குரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்.

இக்கடன் திட்டத்திற்குரிய சேவைக் கட்டணமானது விண்ணப்பதாரியால் தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் பிராந்திய காரியாலத்தில் செலுத்தப்பட வேண்டும். (அதாவது கடன் பெற விண்ணப்பிக்கும் காணியின் அளவானது 5 ஏக்கரிற்கு உட்பட்டிருப்பின் ரூபா.500 உம் மேலதிகமான ஒவ்வொரு ஏக்கரிற்கும் ரூபா.50 உம் செலுத்தப்பட வேண்டும்.) இதன் பின்னர் பண்ணை திட்டமிடல் அறிக்கை, நிதிக்கூற்று, கடன் திட்ட அறிக்கை என்பன தயாரிக்கப்பட்டு அதன் பிரதிகள் வங்கிக்கும் உரிய விண்ணப்பதாரிக்கும் அனுப்பப்படும். தேவையேற்படின் வங்கிகளால் விண்ணப்பதாரியின் இடமானது பரிசீலிக்கப்படும். இதன் போது விண்ணப்பதாரி உரிய விபரங்களை, உரிய வங்கிக்கு வழங்க வேண்டும். விண்ணப்பதாரியால் அவருடைய காணி சம்பந்தமான சகல ஆவணங்களின் மூலப்பிரதிகள் உரிய வங்கிக்கு பரிசீலனைக்காக வழங்க வேண்டும். விண்ணப்பதாரிக்கும், வங்கிக்கும் இடையிலான ஒப்பந்தம் ஒன்று தயாரிக்கப்படும். கடனானது தவணைகளாக (இரண்டு அல்லது மூன்று) விண்ணப்பதாரிக்கு வழங்கப்படும்.

தென்னைப் பயிர்ச் செய்கை சபை நிதி நிறுவனங்களின் ஊடாகவே கடன்களை வழங்கி வருகின்றது. பிரதேச அபிவிருத்தி வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி இரண்டினூடாகவும் இக்கடன் திட்டத்தை குழுக்கடன்களாக பெறலாம். அதாவது மூவர் கொண்ட குழு தலா ரூ.125,000 ஐ கடனாகப் பெறலாம். கடந்த வருடத்தில் மட்டும் யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த தென்னைப் பயிர்ச் செய்கையாளர்களின் 240 ac தென்னங்காணிகளை அபிவிருத்தி செய்வதற்காக இக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

தென்னைப் பயிர்ச் செய்கையாளர்கள் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து இக்கடனினைப் பெற்று தங்களுடைய தென்னங்காணிகளை அபிவிருத்தி செய்து தங்களினதும் நாட்டினதும் பொருளாதார அபிவிருத்திக்குக் காத்திரமான பங்களிப்பைச் செய்து பயனடைய வேண்டும் என்பதுதான் தென்னைப்பயிர்ச்செய்கை சபையின் இலக்குகளில் ஒன்றாகும்.

## இக்கடன் திட்டத்தின் வகைகளும் கொடுப்பனவுகளும்

| தொ. இல | முன்மொழிவு | நடவடிக்கை | ஒரு ஏக்கருக்குரிய கடன் தொகை |
|---|---|---|---|
| 01 | ஊடு பயிர் வளர்ப்புடன் கூடிய தென்னை புது நடுகை. | புது நடுகை செய்தல், ஊடு பயிர் செய்தல் நீர், பசளை முகாமைத்துவம். | ரூ.125,000.00 |
| 02 | ஊடு பயிர் வளர்ப்புடன் கூடிய தென்னை மீள்நடுகை. | காய்க்காத மரங்களை அகற்றி அவ்விடத்தில் புது மரங்களை நடுதல், ஊடு பயிர் வளர்ப்பு நீர் பசளை முகாமைத்துவம். | ரூ.125,000.00 |
| 03 | ஊடு பயிர் வளர்ப்புடன் கூடிய தென்னங்காணி புனர்நிர்மாணம் செய்தல் | ஊடுபயிர், மண் பாதுகாப்பு , நீர் பசளை முகாமைத்துவம் | ரூ.125,000.00 |
| 04 | தென்னங்காணி புனர்நிர்மாணம் செய்தல் | நீர், பசளை முகாமைத்துவம் மூடு படையிடல் மேலதிக மரங்களை அகற்றி புதுமரங்களை நடல், பீடை நோய் முகாமைத்துவம் | ரூ.50,000.00 |
| 05 | தென்னை புது நடுகை மாத்திரம் | புது நடுகை, மண், நீர் பாதுகாப்பு, பசளையிடல் | ரூ.25,000.00 |
| 06 | குழாய் நீர்ப்பாசனம் செய்தல் | கிணறு கட்டுதல், நீர் இறைக்கும் இயந்திரம், குழாய் நீர்ப்பாசனத்தொகுதி | ரூ.50,000.00 |
| 07 | மாடு, எருமை போன்ற விலங்குகளை முதிர் தென்னைகளிற் கிடையில் வளர்த்தல். | மாட்டுத்தொழுவம் அமைத்தல், விலங்குகள், உபகரணங்கள் வாங்குதல் (இதற்கு கட்டாயமாக ஒரு ஏக்கர் நிலமும் இரண்டு பசுக்களும் வளர்க்கப்பட வேண்டும்) | ரூ.150,000.00 |
| 08 | ஆடு, செம்மறி போன்ற விலங்குகளை முதிர் தென்னைகளிற்கிடையில் வளர்த்தல் | கொட்டில் அமைத்தல், விலங்குகள் , உபகரணங்கள் வாங்குதல்(இதற்கு கட்டாயம் 01 ஏக்கர் நிலமும் 01 கிடாய் 06 மறி வளர்க்க வேண்டும்) | ரூ.150,000.00 |

ஈஸ்வரன் சற்குணன்
பண்ணைத்திட்டமிடல் அதிகாரி,
தென்னைப் பயிர்ச்செய்கை சபை,
யாழ்ப்பாணம்.

# போராட்டத்தை சீர்குலைக்க முயற்சித்தால் சென்னையிலுள்ள இலங்கை தூதரகத்தில் பலியான மீனவரின் உடலை ஒப்படைப்போம்

## போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் எச்சரிக்கை

இலங்கை கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழக மீனவரின் உடலை வாங்குவதற்கு மறுப்பு தெரிவித்து நேற்று மூன்றாவது நாளாகவும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தமது போராட்டத்தை சீர்குலைக்க முயற்சித்தால் சென்னையிலுள்ள இலங்கை தூதரகத்தில் உயிரிழந்த மீனவரின் உடலை ஒப்படைப்போம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கச்சதீவுக்கு அருகில் கடந்த திங்கட்கிழமை மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இராமநாதபுரத்தைச் சேர்ந்த 21 வயதுடைய பிரிட்சோ என்னும் மீனவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் இந்திய மீனவர்கள் மத்தியில் பெரும் பரபரப்பையும் பதற்றத்தையும் தோற்றுவித்துள்ளது.

இந்நிலையில் உயிரிழந்த மீனவரின் உடலை வாங்க மறுத்துள்ள அவரது உறவினர்கள் தமக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றும் துப்பாக்கிச்சூடு நடத்திய இலங்கை கடற்படையினர் கைது செய்யப்பட வேண்டும் என்றும், இனிவரும் காலங்களில் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறாது என்பதற்கு இந்திய அரசு சார்பில் நேரில் உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி தங்கச்சிமடத்தில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுடைய போராட்டத்திற்கு தமிழகம் முழுவதிலும் பெருமளவானோர் ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

இதற்கிடையில், இராமநாதபுரம் மாவட்ட நிர்வாகம் சார்பில் அதிகாரிகளும் பொலிஸாரும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதுடன் போராட்டத்தைக் கைவிடுமாறும் கேட்டுக்கொண்டனர்.

எனினும் அதனை ஏற்க மறுத்துள்ள மக்கள், போராட்டத்தை சீர்குலைக்க முயற்சித்து கட்டாயப்படுத்தினால் பலியான மீனவர் உடலை, சென்னையில்உள்ள இலங்கை தூதரகத்தில் ஒப்படைத்து போராட்டத்தை தொடர்வோம் என எச்சரிக்கை விடுத்தனர். இதனால் தங்கச்சிமடத்தில் தொடர்ந்தும் பதற்றமான சூழ்நிலையே நிலவுகின்றது. (இ-12)

# ஈராக்கில் திருமண வீட்டில் தற்கொலைத் தாக்குதல்

## 26 பேர் உயிரிழப்பு



ஈராக்கின் திக்ரித் நகருக்கு அருகே ஹஜாஜ் கிராமத்தில் இடம்பெற்ற திருமண நிகழ்வில் இலக்கு வைத்து நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத்தாக்குதலில் 26 பேர் உயிரிழந் துள்ளதாக மருத்துவ மற்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற தாக்குதலுக்கு இதுவரை எந்தவொரு அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

குறித்த தாக்குதலை அடுத்து, தாக்குதல் இடம்பெற்ற பகுதியை பாதுகாப்பு படையினர் சுற்றிவளைத்துள்ளனர்.

அதேவேளை, மேலும் தாக்குதல்கள் இடம்பெறலாம் என்ற அச்சம் நிலவிய நிலையில் அப்பகுதியில் ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருமண நிகழ்வு இடம்பெற்ற பகுதியில் இரு தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டதாகவும், அதனை தொடர்ந்து பாதுகாப்பு படையினரை இலக்கு வைத்து மேலும் இரு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் பொலிஸ் தரப்பு தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, குறித்த பகுதியில் பாதுகாப்பு படையினருக்கும் தாக்குதல்தாரிகளுக்கும் இடையே மோதல் கள் தொடர்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐ.எஸ்.இன் கட்டுப்பாட் டில் இருந்த திக்ரித் நகரை, ஈராக் பாதுகாப்பு படையினர் கடந்த 2015ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மீண்டும் கைப் பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-12)


இந்திய விபூதி விற்பனைக்கு

எம்மிடம் இந்திய ஸ்ரீ சக்தி விலாஸ் ஜவ்வாது வாசனை விபூதியை (1kg), மொத்தமாகவும் (ரூ.100), சில்லறையாகவும் (ரூ.110) பெற்றுக்கொள்ளலாம்.

(இ-7766)

சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரத்துச் சந்திக்கு அருகில்) - 021 222 2567


# பெண்கள் நேர்மையானவர்கள் ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

அரச சேவையில் பெண்களின் நேர்மையானது வெளிப்படையாக தெரிவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற சர்வதேச பெண்கள் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

திறைசேரி பிணை முறிப் பத்திர விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவில் வழங்கிய சாட்சியங்கள் மூலம் பெண்களின் நேர்மையானது வெளிப்படையாக தெரியவந்துள்ளது எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அதேவேளை இங்கு உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க,



இலங்கையின் அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (இ-7)

# பெண்கள் சமூகத்திலுள்ள சவால்களை எதிர்கொண்டு வெற்றிபெற முடியும்

## மனித உரிமை ஆணைக்குழு இணைப்பாளர் நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

எமது நாட்டில் பெண்களுக்கு பொருளாதார கலாசரா உரிமைகள் அதிகளவில் கிடைத்தால் மாத்திரமே அவர்கள் சமூகத்தில் உள்ள சவால்களை எதிர்கொண்டு வெற்றிபெற முடியும் என இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ், தெரிவித்துள்ளார்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் பெண்களை வலுவூட்டும் செயற்றிட்ட நிகழ்வு ஒன்று யாழ்ப்பாணம் தொடர்பகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

மனித உரிமை எனும் வகைக்குள் சிவில் உரிமைகள், அரசியல் உரிமைகள், சமூக, பொருளாதார, கலாசார உரிமைகள் என்பன உள்ளடக்கப்படுகின்றன.

அந்தவகையில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பாக அதனை பலப்படுத்த சர்வதேசம் அதிகமான அழுத்தங்களை கொடுத்து செயற்படுத்தி வருகிறது. ஆனால் சமூக, பொருளாதார, கலாசார உரிமைகளில் கவனம் செலுத்துவது மிக குறைவாகவுள்ளது.

இலங்கையினுடைய அரசியல் அமைப்பிலும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கு மாத்திரம் அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளதே தவிர சமூக, பொருளாதார, கலாசார உரிமைகளுக்கான சலுகைகள் அதிகளவில் வழங்கப்படவில்லை.

பெண்கள் உரிமை என்ற வகையில் நோக்கும் போது சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் ஓரளவு கிடைத்த வண்ணம் உள்ளன.

ஆனால் அவர்கள் பல் வேறுபட்ட வன்முறைகளுக்கு உட்படுவதற்கு அவர்கள் பொருளாதார ரீதியில் பொருளாதார உரிமைகளை பெற்றிராதது தான் காரணமாக அமைந்துள்ளது.

ஆகவே பெண்கள் தைரியமாக ஒரு விடயத்தை எதிர்கொள்வதற்கு பொருளாதார, கலாசரா உரிமைகள் அதிகமாக கிடைக்க வேண்டும் . அவ்வாறு கிடைத்தால் மாத்திரமே ஆணுக்கு நிகரான பெண்ணாக இச்சமூகத்தில் முழுமையான பால் சமத்துவத்துடன் வாழக்கூடியதாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா:24<br>உயரம்: 5'4"<br>தகைமை/<br>தொழில்:MAஅரசதொழில்<br>தொ.இ: B/3336 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 43சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BSc<br>தொ.இ: G/4521 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 45<br>உயரம்: 5'11"<br>தகைமைதொழில்:BScபொறியியலாளர்<br>சிங்கப்பூர்<br>தொ.இ: B/3347 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 41<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:சித்தவைத்தியர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/4525 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 52சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமைதொழில்:MBBSவைத்தியர்<br>தொ.இ: B/3363 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 34சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:Diplomaஆசிரியர்<br>தொ.இ: G/4534 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்:உத்தராடம்<br>கி.பா: 56செவ் 2 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்BBA/தனியார்தொழில்<br>தொ.இ: B/3366 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 11<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/4552 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:-kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.



# வலந்தலை, மடத்துக்கரை ம
# தேர்த்தரிப்பிட திறப்பு வி
# காரைநகர்



### ஆசிச்செய்தி

இலங்கையில் தலைசிறந்து விளங்கும் பல கோயில்களில் வலந்தலை மடத்துக்கரை முத்துமாரி அம்மன் கோயிலும் ஒன்றாகும். காரைநகருக்கு வரும் அனைத்து மக்களையும் வரவேற்று அவர்களுக்கு நல்லாசியையும் அருளையும் வழங்கும் பொருட்டு காரைநகர் பிரதான வாசலில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் முத்துமாரி அம்மன் ஆலயம் 2014 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இன்று தேர்த்திருவிழா மூன்றாவது முறையாக சிறப்பாக நடைபெறுகின்றது. இந்த வேளையில் எல்லா மக்களும் இன்புற்று இருக்கவேண்டும். அவர்கள் வேண்டும் வரங்களை அருளவேண்டும். இந்த இலங்கைத் திருநாட்டில் வாழும் மக்களுக்கு மாத்திரமல்ல அந்நியப் பிரதேசத்தில் இருக்கும் எல்லா மக்களுக்கும் இன்னருள் பாலிக்கவேண்டும் என்று அம்பிகையின் அருள்வேண்டி ஆசி கூறுகின்றோம்.

இந்தத் தேர்த்திருவிழாவை தலைமை தாங்கி நடத்த எனக்கும் ஓர் அருட் பலனைத் தந்த அம்பிகையின் அருட்கடாட்சத்தை என்னென்று சொல்வது, அவள் அருள் எல்லோருக்கும் கிடைக்க அன்னையைப் பிரார்த்தித்து எல்லோருக்கும் ஆசி கூறுகிறோம்.

**மகோற்சவ பிரதம குரு**
**கிரியாயோதி ஈசான சிவாச்சாரியார்**
**சிவஸ்ரீ.பா.பாலகிருஷ்ணக்குருக்கள்**
**பிரதம குரு, ஈச்சமோட்டை ஞானவைரவர் தேவஸ்தானம்,**
**கொழும்புத்துறை.**



### ஆதீன குருவின் ஆசிச் செய்தி

எமது காரைநகரின் நுழைவாயில் அமர்ந்து இருந்து தன்னை நாடி வரும் அடியவர்களுக்கு அருளை வாரி வழங்கி கொண்டு பிரயாணம் செய்பவர்களுக்கு வழித்துணையாகவும் விளங்கும் அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்பிகைக்கு இன்று 10.03.2017 மூன்றாவது தேர்த்திருவிழா வெகு சிறப்பாக நடைபெறுகின்றது.

உண்மையில் இது அம்பிகையின் பேரருள் என்று தான் கூறலாம். உலகில் எத்தனையோ பேரிடம் நிதி வளம் இருக்கின்றது. ஆனால் எல்லோரினதும் பணமும் பொருளும் இவ்வாறான தெய்வ திருப்பணிக்கு தர்ம கைங்கரியத்துக்கு பயன்படுவதில்லை. சண்முகம் சிவஞானம் அவர்கள் ஒரு வருடத்துக்குள் தேரையும் அடுத்த வருடத்தில் தேர் முட்டியையும் அம்பிகையின் அருளால் அமைந்துத் தந்துள்ளார்கள். இத் தேரையும் தேர் முட்டியையும் வடிவமைத்தவர்கள் சிற்பாசாரி திரு.ச.ஜெயரத்தினம்அவர்களும் கட்டடக்கலைஞர் திரு.ஆ. அருள்ராசா அவர்களும் ஆவார்கள். அம்பிகைக்கு அவர்களின் பணி மேன்மேலும் தொடர வேண்டும்.

இப் பணியை மேற்கொண்ட எல்லோருக்கும் அம்பிகையின் ஆசியும் அருளும் கிடைக்க வேண்டி நிற்கின்றேன். அன்னையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்.

**பிரம்மஸ்ரீ. கு. சரவணபவானந்தசர்மா**
**(ஆதீனகுருவும் நம்பிக்கை பொறுப்பாளரும்)**
**மடத்துக்கரை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்.**

### உபயம் செய்தவருக்கு வாழ்த்து

காலத்தால் அழியாத காவியமண் காரைநகரினிலே
சண்முகத்தார் தந்தனரே சிவஞானச் செம்மல் தனை
தன்னூர் பணியாவும் தக்கவனாய் செய்துவரும்
காரை பாரிவள்ளல் பல்லாண்டு வாழியவே
பூத்தவள் புவனம் பதின்னான்கை காப்பவள்
வலந்தலை மாரியம்மா திருவீதி வந்திடவே
தேருடனே தரிப்பிடத்தை தாயார்க்கு தந்தனரே
சண்முகம் மனோன்மணி விண்ணுலகில் மகிழ்ந்தனரே
சங்கரனார் மகிழ்ந்திடவே சைவப்பணி செய்துவரும்
கலைமாடக் கோணார் காலமெல்லாம்
வாழியவே!
தாயார் நினைவாக தர்மப்பணி செய்துவரும்
நல்லதோர் பாரிவள்ளல் சிவஞானச்
செம்மலன்றோ!
முத்துமாரி ஆதீனகர்த்தா
சரவணபவானந்தா குருக்களய்யா
தந்தனரே காரை பாரிவள்ளல் பட்டமதை
பட்டமதை பெற்றவரே பல்லாண்டு வாழியவே
நித்தம் நித்தம் நிலை உயர நீடூழி வாழியவே

### கட்டட கலைஞர்க்கு வாழ்த்து


பார் போற்றும் காவியமண் காரைநகர்
பதிதனிலே
மேன்மையுறு மேஸ்திரியார் அற்புதனார்
அருள்ராசா
கட்டடக் கலைஞராகி காலமெல்லாம்
வாழியவே!
முத்துமாரி பணியினிலே முதன்மையுடன்
வாழியவே!
சிவகாமி அருளுடனே அருளய்யா
வாழியவே!
குடும்ப சுகமதனை குதூகலமாய் பெற்று
பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு
வாழியவே!

### வாழ்த்துப் பத்திரம்

எமது ஆலயத்தின் தேர்த் தரிப்பிட ஆசாரி வேலைகளை சிறப்பாக நிறைவேற்றிய வலந்தலை காரைநகரை சேர்ந்த திரு.ச.விஜயரத்தினம் ஆசாரி அவர்களின் பணிகளைப் பாராட்டி மென்மேலும் அவரின் பணி முதன்மைபெற எல்லாம் வல்ல அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகி காரைநகர் மடத்துக்கரை முத்துமாரி அம்பாளை வேண்டுகிறோம்.

வாழ்க வளமுடன்

வாழ்த்துபவர்
**பிரம்மஸ்ரீ கு.சரவணபவானந்தசர்மா**
**ஆதீன குரு, நம்பிக்கைப்**
**பொறுப்பாளர்**



### ஆலய வரலாறு

தெட்சணகைலாசம் என்று ப
போற்றப்படுகின்ற ஈழவள நாட்டி
மேல் திசையில் சைவமும் தமிழும்
தான தர்மமும் சிறப்புற்று விளங்குகி
காரைநகர் நுழைவாசலில் என்றும்
பாலித்து வரும் முத்துமாரி அம்மனுச்
பொலிவுடன் திருப்பணி வேலைக
வுற்று மூன்றாவது முறையாக 10.03.20
திருவிழா. அம்பாள் மிகவும் பழைமை
சக்தியாகும். தம்மை நாடி வருகின்
யார்களுக்கும், நம்பிக்கையுடையவ
என்றும் அருள் பொழிவாள். வழிக்க
மன் மடத்துக்கரை தாயே சக்தியின்
என்று மனம்குளிர எமது மூதாதையர்
பாடு செய்தனர். தாயின் பெருமைக
கூறமுடியாது.


மாபெரும் சக்தியாக கிழக்குப் பக்க
கிய படியே கருணை மழை பொழியு
கடாட்சம் ஆனது காரைநகர் மக்கள்
பாக்கியம். கலங்கரை விளக்குப் போ
வீசுகின்ற முத்துமாரி அம்மனுக்கு வருட
வைகாசி மாத புனர்பூச நட்சத்திரத்
நாட்கள் முன்னதாக விளக்கு வைத்
யேற்றி பொங்கல் வேள்வி செய்து
குலைகள் கட்டி நேர்த்திக் கடன்களை
செய்து தங்கள் மனக்குறைகளை நீக்கு

இவ்வாறு பெருமையோடு விள
இவ்வாலயம் ஆனது இற்றைக்கு 2
டங்கள் பழைமை வாய்ந்தது. ஏறத்த
ஆம் ஆண்டளவில் இவ்வாலயம்
பெற்று மண் குடிசையில் அம்மன்
பெயர் வடிவமைக்கப்பெற்ற முகவடி
முத்துமாரி அம்மன் என்ற பெயர்
தோடு மக்களால் பெரும் பக்தியோடு
கப் பெற்று வந்தது. அன்பர்களுக்கு

**உபயம்**
**அமரர் சண்முகம் மனோன்மணி அவர்களின் நினைவாக**
**திருவாளர் "கலைமாடக்கோன்" சண்முகம் சிவஞானம் அவர்களால்**
**அமைக்கப்பட்டது.**

றூபா வர்த்
யாழ்

# ீமுத்துமாரி அம்பாள் ஆலய
# ழாவும் இரதோற்சவமும்
# 10.03.2017





மலர் வடிவமைப்பு:-
ஸ்ரீமதி.ச.சிவானந்தி

நேர்கையில் பல அற்புதங்கள் நிகழ்த்திய வரலாறுகள் செவி வழியாக பல உண்டு. காரைநகர் மண்ணில் பரவிய கொள்ளை நோயினால் பலரும் மடிவதைக் கண்டு பதைப்புற்ற மக்கள் தாயின் தயவினை வேண்டித் தொழுதனர்.

அன்னை தாயே சரணம் என்று பணிந்து நோயில் இருந்து நிவாரணம் வேண்டி பெரும் சோற்று மடை வைத்து வணங்கினர்.

அருட்கடல் ஆகி கருணாகரி நோய் துயரில் இருந்து மக்களை விடுவித்து மழை வளம் கொடுத்து ப்யிர்வளம் கொழித்து மகிழ் வோடு இருக்கும் வரம் அளித் தாள். ஊர் காவல் வேண்டி காவல் தெய்வங்களான சூல வடிவை வைத்துக் காவல் சேவகர் களாக வணங்கி வரும் வழிபாடு தொன்று தொட்டு இருந்து வருகின்றது.

இவ் ஆலயம் ஆனது பன்நெடுங் காலமாக தம்பிரான் பரம்பரை யினரால் பராமரிக்கப்பட்டு வந் தது. 1983 ஆம் ஆண்டு வரை வீரகத்திப்பிள்ளை தம்பிரான் அவர்களால் மேற்பார்வை செய் யப்பட்டு வந்தது. அத்துடன் பூசை வழிபாடுகளை பிரம்மஸ்ரீ சோ. குகனேசசர்மாவின் பரம்பரை யினர் செய்து வந்தனர். பின்பு மேற்பார்வைப் பொறுப்பை மொந்திப்புலத்தைச் சேர்ந்த நா.குமாரசாமியிடம் தம்பிரான் ஒப்படைத்தார். இடப் பெயர் வின் பின்பு குமாரசாமி அவர் கள் நோய் வாய்ப்பட்டதனாலும் ஆலயத்தின் பூசை வழிபாடுகளு டன் ஆலயத்தைப் பராமரிக்கும் பொறுப்பையும் பிரம்மஸ்ரீ குக நேயசர்மாவிடம் ஒப்படைத்தார். அவர்கள் குமாரசாமியின் புதல்வர் களின் ஒத்துழைப்புடன் ஆலய த்தை திறம்பட நடத்தி வந்தனர். அத்துடன் 2004 ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தார்.

குகனேசசர்மா நோயுற்ற காரணத்தினால் தனது இளைய மகனார் பிரம்மஸ்ரீ கு.சரவணப வானந்தசர்மாவிடம் தனது பூசைப் பொறுப்பையும் கோயிற் பராமரிப் பையும் 2009 ஆம் ஆண்டு ஒப்ப டைத்தார். இதன் பின்பு ஆலயக் கட்டடங்கள் பழுதடைந்த கார ணத்தினால் ஆலயம் 2014 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்டு மகா கும்பாபிஷேக பெருவிழா நடை பெற்றது. தேர்த்திருவிழா 2015, 2016 ஆம் ஆண்டு நடை பெற்றது.

இன்று 10.03.2017 மூன்றாவது முறையாக தேர்த்திருவிழா நடைபெறுகின்றது. அம்பிகை அடியார்கள் அவற்றைக் கண்டு களித்து சகல சௌபாக்கியங் களும் பெற்று பெரு வாழ்வு வாழ அம்பிகையின் பாதங்களை வணங்கி எங்கள் நல்லாசிகளை கூறுகின்றோம்.

## ஆசிச்செய்தி



இலங்கைத் திருநாட்டில் யாழ்ப்பாணத்தின் காரைநகரில் மடத்துக்கரை முத்துமாரி அம்மன் என்னும் நாமம் கொண்டு வீற்றிருந்து திருவருள் பாலித்து வரும் அம்பிகைக்கு கோவில் புன ரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் 2014 இல் நடைபெற்றது.

இன்று 10.03.2017 இல் தேர்த்திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற அம்பிகையின் திருவருளோடு குரு அருளும் கிடைக்க ஆசி கூறுகின்றேன்.

**சர்வே ஜனகா சுகினோ பவந்து**
**கு.சண்முகராசா குருக்கள்**
**சக்தியோத சிவாச்சாரியார்**
**(பயிரில் கூடல் முருகன் தேவஸ்தானம்)**

## அவளின்றி ஓர் அணுவும் அசையாது



அவளின்றி ஓர் அணுவும் அசையாது. காரை நகர் நுழைவாயிலில் அமர்ந்து அருள்பாலிக்கின் றாள் காரைநகர் மடத்துக்கரை ஸ்ரீமுத்துமாரி அம் பாள். திருப்பணி செய்வது பெரும் புண்ணியம், பாக்கியம், திருப்பணி செய்த கல், மரம் அந்த ஆல யத்தில் எத்தனை வருடங்கள் உள்ளதோ, அத் திருப்பணி செய்தவருக்கு அத்தனை ஆயிரம் வருடங்கள் கைலாசத் திலோ வைகுண்டத்திலோ வாசம் செய்யும் புண்ணியம் உண்டாம்.

ஓர் அற்புதக் காட்சியாக அவனருளாலே எத் திருக்கோயில்க ளிலும் இல்லாதவாறு அம்பாளை வசந்த மண்டபத்திலே நீரின் மேல் இருத்தி சதா அருள்பாலித்துக் கொண்டிருக்கச் செய்தவர் சண்முகம் சிவஞானம். திருப்பணியில் பெயருக்கு ஏற்றவர்.

*சிவனோடொக்கும் மனிதர் ஊரில் தேடினும் இல்லை*
*அவரொடொப்பர் இங்கு யாவரும் இல்லை*
*நாடும் நகரமும் நற்திருக் கோயிலும்*
*தேடித் திரிந்து திருப்பணி செய்பவர்*

ஞானத்தின் மிக்க தொண்டு ஊரில் இல்லை. இக்கோயிலில் தானாகத் தோன்றிய நாகம்மாளுக்கு சிறு திருக்கோயில் அமைத்தவர்.

21.02.2016 இல் சுந்தரத்தேர் ஒன்றை அம்பாளுக்கு தம் தாய் சண்முகம் மனோன்மணி நினைவாக உபயம் செய்தார்கள். 10.03.2017 இன்று தேர்த் திருவிழாவின்போது அதற்குரிய அழகிய தேர்முட்டியையும் உபயம் செய்துள்ளார்கள். அம் பாளுக்கு வசந்த மண்டம், நாகம்மாளின் சிறுகோயில், தேர், தேர்முட்டி போன்ற திருப்பணிகளை தானே ஏற்று நிறைவு செய்த சண்முகம் சிவஞானம் அவர்களை அன்று முல்லைக்கு தேர் கொடுத்த பாரி போன்றவர் என வாழ்த்துவது மிக மிகப் பொருத்தமானதே.

*சீற்றத்தின் சின்னம்மன்- தேர், தேர்முட்டி கொடுத்த*
*சிவஞானத்தின் பெரியம்மன்*
*ஓடுகின்ற தேரும் மேற்கில் பதவி பதவி என்று*
*ஒடுங்கி நிற்பது ஏன்?*
*ஆடுகின்ற ஆட்டமது நின்று போனால்- நமக்கு*
*அவளருளும் கிட்டாது*
*இருக்கின்ற நாள்வரைக்கும் சிவஞானத்தைப்போல் பணி செய்து*
*இறைவியையே போற்றி செய்வோம்*

**ஆ.பாலகிருஷ்ணன்,**
**ஓய்வுநிலை அதிபர் SLPS -I**

ச நிலையம்,
ணம்

S.V.M. நிறுவனம்,
யாழ்ப்பாணம்

K.K.K.
யாழ்ப்பாணம்

# பிரித்துவிடக் கூறியோர் இணைந்தே சென்றனர்

## பிரதமர் ரணில் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

"நாடாளுமன்றத்துக்குள் தனிக்கட்சியாகச் செயற்படுவதற்கு அனுமதியளிக்குமாறு, கூச்சலிடும் விமல் வீரவன்ச உள்ளிட்டவர்கள் குழுவாக வெளியேறி தாம் பிரியவில்லை என்று சபைக்குக் காட்டிவிட்டனர்" என, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்ற சபை நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து இடையூறு விளைவித்ததுடன், சபாநாயகரின் கட்டளையைப் புறக்கணித்தமை காரணமாக ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளின் தலைவர் தினேஷ் குணவர்த்தனவுக்கு, சபை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள ஒரு வாரகாலத் தடை விதிக்கப்பட்டது.

அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஒன்றிணைந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.


இதன்போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"தனியாகச் செயற்பட அனுமதி கோரியவர்கள் கூட்டாக வெளியேறுகின்றனர். இவ்வாறு கூச்சலிட்டால் இன்னுமொருவரின் பெயரையும் சபையில் கூற நாங்கள் தயாராக உள்ளோம்"

கூட்டமைப்பில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்கு தெரிவான, விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி உறுப்பினர்கள் 5 பேரும் நாடாளுமன்றத்தில் சுயாதீன உறுப்பினர்களாக செயற்பட முடியும்.

அவர்கள் சுயாதீன குழுவாக செயற்பட முடியாது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# விமலின் பிணைமனு தொடர்பான தீர்ப்பு எதிர்வரும் 21 ஆம் திகதி




பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் பிணைமனு தொடர்பான தீர்ப்பு எதிர்வரும் 21 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

பிணை வழங்குமாறு விமல் வீரவன்ச நீதிமன்றத்தில் முன்வைத்த மீள் திருத்த பிணைமனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது

கடந்த ஆட்சிக் காலத்தில் அரசாங்கத்திற்கு சொந்தமான வாகனங்களை தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பில், இவர் நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தை அமெரிக்க நிறுவனத்துக்கு விற்பனை செய்ய தீர்மானம்



(கொழும்பு)

ஸ்ரீலங்கன்விமானசேவை நிறுவனத்தை அமெரிக்காவின் ரி.பி.ஜி. விமான நிறுவனத்துக்கு விற்பனை செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக பிரதி அமைச்சர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

கடந்த 1992 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தை தனியார் மயப்படுத்த முயற்சிக்கும் போதும் இந்த அமெரிக்க நிறுவனம் தனக்கு வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தது.

இருப்பினும், அப்போதிருந்த அரசாங்கம் இதனை எமிரேட்ஸ் விமான நிறுவனத்துக்கு வழங்கியது.

ரி.பி.ஜி. விமான நிறுவனத்துக்கும் பர்பேச்சுவல் ட்ரசரிஸ் நிறுவனத்துக்கும் இடையில் எந்தவித தொடர்பும் இல்லை. ரி.பி.ஜி. விமான நிறுவனம் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனம் எனவும் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

இந்த நிறுவன விற்பனை தொடர்பில் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ள குழுவினால், ரி.பி.ஜி. நிறுவனத்துக்கு அடுத்த மாதமளவில் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வாக்கெடுப்பில் 3 ராஜபக்ஷர்களும் இல்லை

(கொழும்பு)

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் எம்.பியான தினேஷ் குணவர்த்தனவுக்கு, அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள ஒருவார கால தடை விதிக்குமாறு, அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட பிரேரணை மீதான வாக்கெடுப்பில் மூன்று ராஜபக்ஷர்களும் பங்கேற்கவில்லை.

இந்த வாக்கெடுப்பு, பெயர் குறிப்பிட்டு நடத்தப்பட்டது.

இதன்போது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எம்.பி., முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ எம்.பி., நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் பங்கேற்கவில்லை.

அந்த மூவரின் பெயர்களும் கூப்பிடப்படும் போது, அவையிலிருந்து ஆளும் தரப்பினர், கோ... கோ... (எங்கே... எங்கே... ) என்று கோஷமிட்டனர். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### மறுக்கத் தெரியாதவர்கள்

என்ன கேட்டாலும், எதற்கு அணுகினாலும் மறுத்தே பேசும் சுபாவத்தினர் ஒருபுறமிருக்க,

என்ன கேட்டாலும், எதற்கு அணுகினாலும் மறுத்துச் சொல்லவே தெரியாமல் இளிச்சவாய்த்தனமாக அனைத்திற்கும் கோயில்மாடுமாதிரித் தலையாட்டிவிட்டு, பிறகு ஏகமாய் வருந்துபவர்களும் இருக்கிறார்கள்.

இதைப் படித்துவிட்டு நாம் சுயநலமாய் நடந்து கொள்ள வேண்டும் போல் இருக்கிறது என்று யாரும் முடிவுக்கு வந்துவிட வேண்டாம். மறுக்க வேண்டியவற்றை மறுக்கத்தான் வேண்டும்.

முன்பெல்லாம் நான் யார் கூப்பிட்டாலும் வெளியூர் போய்க் கொண்டிருந்தேன். நேரம், பணம் விரயமாகிக் கொண்டிருந்தன. வேலைகள் கெட்டன. பயணம் செய்து செய்து இடுப்பே கழன்று போயிற்று. இனி எந்த ஊருக்கும் போகக் கூடாது என்று முடிவு கட்டுவேன். ஆனால் வருகிறவர்களின் பேச்சில் மயங்கி எப்படிப் பிரியமாகக் கூப்பிடுகிறார்கள்! இவர்களுக்கு மறுப்புச் சொன்னால் மனம் நோகுமே என நெருப்பிலிட்ட மெழுகாவேன் பிறகு என்ன? பிரசவ வைராக்கியம் தான். தலையை ஆட்டிவிடுவேன்.

இப்போதெல்லாம் என் நடை முறைச் சிரமங்களை எடுத்துச் சொல்லப் பழகிவிட்டேன். வருகிறவர்களும் புரிந்து கொள்கிறார்கள்.

மறுத்துச் சொல்வது என்பது மற்றவர் விரோதத்தைச் சம்பாதித்துக் கொள்வது என்பதாகப் பலரும் தவறாக எண்ணுகிறார்கள். இது உண்மையல்ல ; முடியாது, கிடையாது , இல்லை, மாட்டேன், நடக்காது வேறு ஆளைப் பார் போன்று நெருப்புச் சொற்களை மட்டும் தவிர்த்துவிட்டுப், பண்போடு இதமாக மறுக்கலாம், மற்றவர்கள் புரிந்து கொள்வார்கள். அப்படியும் புரிந்து கொள்ளாதவர்கள் போகட்டும்.

"யோசிச்சுச் சொல்றேன்" என்று இழுக்கக் கூடவா தெரியாது?

மறுத்தால் என்ன நினைப்பார்களோ என்ற கவலை நமக்கு மட்டும் இருந்து என்ன புண்ணியம்?

கேட்டால் என்ன நினைப்பார்களோ என்ற நினைப்பு அவர்களுக்கு இருக்க வேண்டாமா? இதை வேறு எப்படி ஏற்படுத்துவது?

நம் இனிய சுபாவம் பொதிந்து நம் தலையில் மிளகாயை அரைக்க நினைக்கிறவர்களுக்கு நாம் ஒரேயடியாக இடம்தரக் கூடாது. நம் சுபாவம் நமக்கே வினையாக அமைந்துவிடக் கூடாது பாருங்கள்!

மறுக்கத் தெரியாதவர்கள் அனைத்தையும் இழந்துவிட்டு நிற்க வேண்டியதுதான். அல்லது காலப் போக்கில் பைத்தியக்காரப் பட்டம் சூட்டிக் கொள்ள வேண்டியது தான்.

ஒரு வகையில் சொல்லப் போனால் மறுக்கத் தெரியாதவர்கள்–


வாழத் தெரியாதவர்களும் கூட.

**லேனா தமிழ்வாணன்**

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் -பகுதி 1


♦ 1ஆம், 2ஆம் வினாக்களுக்கு முதலில் தரப்பட்டுள்ள படத்துடன் மிக நெருக்கமான சொற்கூட்டத்தைத் தெரிவுசெய்க.

01.



1) பார்த்தல், இயற்கை, வீடு.
2) கேட்டல், பார்த்தல், செயற்கை
3) வீடு, கேட்டல், இயற்கை




02.




1) காற்று, செயற்கை, விண்
2) மழை, விண், செயற்கை
3) இயற்கை, காற்று, விண்

♦ 3ம், 4ம் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களுக்கு மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

03. மின்சாரம் - ஒளி - வெப்பம்

1.  2.  3. 

04. முலையூட்டி - மாமிச உண்ணி - மிருகம்

1.  2.  3. 

♦ கீழேதரப்பட்ட பாடலடிகளைக் கொண்டு 5 ஆம், 6 ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிந்து கோடிடுக.

நதியில் நீச்சல் அடித்திடுமே
நாக்கால் பூச்சி பிடித்திடுமே
அதிகம் பேசி ஆடிடுமே
அழிவை அதுவே தேடிடுமே.

05. பாடலில் கூறப்பட்ட பிராணி எது?
1. தவளை 2. பல்லி 3. ஓணான்


06. பாடலில் கூறப்பட்ட பிராணி இரையை எவ்வாறு பிடிக்கின்றது?
1. காலால் 2. சொண்டால் 3. நாக்கால்


07. ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ள செயற்பாட்டினை ஒழுங்குபடுத்தும்போது சரியாக அமையும் விடைத்தொகுதியைத் தெரிவுசெய்க.
A - தானியத்தை விதைத்தல் B - அறுவடை செய்தல்
C - நிலத்தைப் பண்படுத்துதல் D - பயிர்களைப் பராமரித்தல்


1. CABD 2. CADB 3. CDAB

08. மரதன் ஓட்டப் போட்டியில் குமரன் முதல் தடவை தோல்வியடைந்தான். அவன் விடாது பயிற்சியில் ஈடுபட்டு பின்னர் நடைபெற்ற மரதன் ஓட்டப்போட்டியில் வெற்றி பெற்றான். இச்சம்பவத்துடன் தொடர்புடைய பழமொழியைத் தெரிவுசெய்க.
1) ஆழமறியாமல் காலை விடாதே.
2) இளங்கன்று பயமறியாது.
3) முயற்சி திருவினையாக்கும்.

09. தரப்பட்டுள்ள எண்கோலங்களை அவதானித்து 9 ஆம், 10 ஆம் வினாக்களில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவுசெய்க.


1. 


2. 


3. 


1) 5 2) 15 3) 8

10.










1) 70 2) 48 3) 49

11. இவ் உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?



1) 8 2) 6 3) 5

12. தரப்பட்ட உருவில் உள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?



1) 6 2) 7 3) 10

## 2017-03-08 புதன் அன்று வெளியான பகுதி-2 வினாக்களுக்கான விடைகள்

01) 1. சுத்தம் பேணல் / நித்தம் நித்தம் சுத்தம் பேணல்
2. உடலில் உறுதி உடையவர்கள்
3. இன்பம் 4. நித்தம் நித்தம்
5. நீ 6. நோயாளி

02) அ) 1. வேலை 2. பரந்து
ஆ) 1. மணிவிழா / வைரவிழா 2. நடத்துநர் 3. அந்தப்புரம்

03) 1. தயவுசெய்து எனக்கு ஒரு பேனை தாருங்கள்
2. மாலை வணக்கம்

04) I. Mango II. Umbrella

05) அ) 1. அப்பா வந்தாரா?
2. நாங்கள் பாடசாலைக்குப் போவோம்.
ஆ) I. குருத்துமா II. சருங்கலய

06) 1.II 2. I 3. III

07) 1. போருக்கு அழைத்தல். 2. மகிழ்ச்சி அடைதல்.

08) 1. சிறியதின் வலிமை (பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக)
2. பிற்போடக் கூடாது.

| | | | |
|---|---|---|---|
| 9. 1 | 17. 1 | 25. 3 | 33. 2 |
| 10. 3 | 18. 2 | 26. 1 | 34. 1 |
| 11. 2 | 19. 2 | 27. 3 | 35. 1 |
| 12. 1 | 20. 2 | 28. 2 | 36. 1 |
| 13. 1 | 21. 1 | 29. 1 | 37. 2 |
| 14. 2 | 22. 2 | 30. 3 | 38. 2 |
| 15. 1 | 23. 1 | 31. 1 | |
| 16. 2 | 24. 2 | 32. 2 | |

39) பொருத்தமான வாக்கியங்கள்
40) ஒன்பதாயிரத்து எண்பத்திரண்டு
41) 013000 km
42) 3005, 2995
43) I. 4, 6 II. 6, 8
44) I. 9, 3 II. 7
45) 3.5 cm
46) I. வெள்ளை இனிப்பு 5.50 II. சிவப்பு இனிப்பு 6.50
47) 18 l 725ml / 18725 ml
48) 11 /12
49) 16, 24, 32, 40
50) 32, 34, 36, 38, 40
51) 3 m 35 cm
52) I. 15.00 மணி II. பி.ப 12.30 மணிக்கு
53) 48m
54) 283 km


# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் -பகுதி 1

13. சரியான கோவையைத் தெரிவுசெய்க.
    1) 6 X 5 + 5 = 25
    2) 12+8 - 10 = 30
    3) 4 X 3+ 4 = 16

14. பிழையான கோவையைத் தெரிவுசெய்க.
    1) 333+ 33+ 3 = 369 2) 444+ 44+ 4 = 482 3) 555+ 55+ 5 = 615

15. மைதானத்தில் ஆசிரியரை மையமாகக் கொண்டு பிரதான திசைகள் நான்கிலும் சம எண்ணிக்கையில் மாணவர்கள் நின்றனர். அங்கு நின்ற மாணவர்களின் கால்களின் எண்ணிக்கை முப்பத்து இரண்டு ஆகும். ஒரு திசையில் நிற்கும் மாணவர்கள் எத்தனை பேர்?
    1) 16 2) 4 3) 8

16. 200 லீற்றர் கொள்ளளவுடைய தொட்டி ஒன்றிற்கு நிமிடத்திற்கு 40 லீற்றர் நீர் ஊற்றப்படும். அதேவேளை அத்தொட்டியிலிருந்து 20 லீற்றர் நீர் பூந்தோட்டத்திற்கு இறைக்கப்படுகின்றது. அத்தொட்டி முழுமையாக நிரம்புவதற்கு எத்தனை நிமிடங்கள் தேவைப்படும்?
    1) 9 நிமிடங்கள் 2) 12 நிமிடங்கள் 3) 16 நிமிடங்கள்



17. அருகில் உள்ள சமபக்க முக்கோணியில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் சுற்றளவைப் போன்று முழு உருவின் சுற்றளவு எத்தனை மடங்கு ஆகும்?
    1) நான்கு மடங்கு 2) ஐந்து மடங்கு 3) இரண்டு மடங்கு

♦ 18 ஆம், 19 ஆம் வினாக்களில் சரியான கருத்தைத் தரும் வாக்கியத்தைத் தெரிவுசெய்க.

18. 1) மீன்கள் நீரில் நீந்தியது
    2) முயல் துள்ளித் துள்ளி ஓடின
    3) மாணவர்கள் மைதானத்தில் விளையாடினார்கள்

19. 1) கண்டங்களில் பெரியது அவுஸ்திரேலியா ஆகும்.
    2) லீப் வருடத்தில் 366 நாட்கள் உண்டு.
    3) இலங்கை பசுபிக் சமுத்திரத்தில் அமைந்துள்ளது.

20) 2016 ஜனவரி மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை ஆகும். இவ் வருடத்திலுள்ள சனிக்கிழமைகளின் மொத்த எண்ணிக்கை.
    1) 52 2) 54 3) 53

21. இரு பகுதிகளும் சமனாக உள்ளதைத் தெரிவுசெய்க.
    1) 3BA9C848 - 3BAC94 க 8
    2) DB345 த 9 ம - DB354 த 96
    3) கச 359AC2 - கச 359AC2

22. மோட்டார் கார்களைக் கழுவும் ஒரு பொறி 30 நிமிடங்களில் இரண்டு மோட்டார் கார்களைக்கழுவும். அதே பொறி அதே வேகத்தில் மூன்று மணித்தியாலங்களில் எத்தனை மோட்டார் கார்களைக் கழுவும்?
    1) 10 2) 12 3) 18

23. கண்ணன் பிற்பகல் 3 மணி 30 நிமிடத்திற்கு உறவினர் வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தபோது அவனது நிழல் அவனுக்கு இடதுகைப்பக்கம் விழுந்தது எனின், அவன் எத்திசையை நோக்கி நடக்கின்றான்?
    1) தெற்கு 2) கிழக்கு 3) மேற்கு

24. ஒவ்வொரு மணித்தியாலமும் 5 நிமிடங்கள் முந்திக் காட்டும் கடிகாரம் ஒன்று மு.ப 6.00 மணிக்கு சரியான நேரத்திற்கு சீர் செய்யப்பட்டு வைத்தால் நண்பகல் 12.00 மணிக்கு கடிகாரம் காட்டும் நேரம்.
    1) 12.30 2) மு.ப 11.30 3) மு.ப 12.30

25. இராமனின் வயது 27 வருடங்கள். மணி இராமனிலும் இரண்டு வருடங்கள் வயதில் கூடியவன். சுகுணன் மணியைக் காட்டிலும் 5 வருடங்கள் குறைந்தவன். மூவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை யாது?
    1) 34 2) 59 3) 80

26. எனது அண்ணனின் மகள் எனது அம்மாவை என்ன உறவுமுறை சொல்லி அழைப்பார்?
    1) பாட்டி 2) பெரியம்மா 3) மாமி

27. ஒரு பண்ணையிலுள்ள பிராணிகளின் கால்களின் எண்ணிக்கை 60 ஆகும். அங்குள்ள பிராணிகளின் தலைகளின் எண்ணிக்கை 25 ஆகும். அங்குள்ள ஆடுகளினதும் கோழிகளினதும் எண்ணிக்கை முறையே.
    1) 20, 5 2) 5, 20 3) 10, 15


28. பாதுகாப்பு நிலையமொன்றில் இருசக்கர, முச்சக்கர வாகனங்கள் 22 நின்றன. அவற்றின் சில்லுகளின் எண்ணிக்கை 52 ஆகும். அங்குள்ள முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை யாது?
    1) 14 2) 8 3) 10

**2017-02-22 புதன் அன்று வெளியான,**
**ஆசிரியர் திரு.மு.வே அன்பழகனின் பகுதி-1 வினாக்ளுக்கான விடைகள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1)-2 | 6)-2 | 11)-3 | 16)-1 | 21)-2 | 26)-3 | 31)-1 | 36)-3 |
| 2)-1 | 7)-3 | 12)-1 | 17)-3 | 22)-3 | 27)-3 | 32)-1 | 37)-1 |
| 3)-2 | 8)-2 | 13)-1 | 18)-1 | 23)-3 | 28)-3 | 33)-3 | 38)-2 |
| 4)-1 | 9)-D | 14)-3 | 19)-1 | 24)-2 | 29)-1 | 34)-1 | 39)-1 |
| 5)-1 | 10)-D | 15)-2 | 20)-2 | 25)-3 | 30)-2 | 35)-1 | 40)-2 |

29. மதனும் சேகரும் சேர்ந்து ரூபாய் 1000.00 வைத்திருந்தார்கள். மதனுடைய பணம் சேகருடைய பணத்திலும் நான்கு மடங்காயின் சேகரின் பணம் எவ்வளவு?
    1) ரூபா 400.00 2) ரூபா 300.00 3) ரூபா 200.00


♦ தரப்பட்டுள்ள எழுத்தட்டையை அவதானித்து 30 ஆம் 31 ஆம் வினாக்களுக்கு விடையைத் தெரிவுசெய்க.



30. தரப்பட்டுள்ள அட்டையைத் தளவாடியில் பிடிக்கும் போது "S" என்ற எழுத்து எத்தனையாவது நிரலில் தெரியும்?
    1) 1வது 2) 2வது 3) 3வது

31. தளவாடியில் பார்க்கும் போது மாற்றமின்றி தெரியும் எழுத்துக்கள் எவை?
    1) ACW 2) OAW 3) LKS


♦ சதுரமுகியொன்றின் மூன்று வேறுபட்ட நிலைகள் தரப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்து 32 ஆம், 33 ஆம் வினாக்களுக்கு விடை தருக.




32. இலக்கம் 3 இற்கு எதிரே இருக்கும் இலக்கம் எது?
    1) 2 2) 5 3) 4

33. இலக்கம் 6 இற்கு எதிரே இருக்கும் இலக்கம் எது?
    1) 3 2) 2 3) 4

♦ கீழேதரப்பட்டுள்ள தராசில் இரு பக்கங்களிலும் வைக்கப்பட்டுள்ள நிறைகள் சமனானவை.




34. வட்டத்தின் நிறைக்குச் சமனாக உள்ளவை.





35. ஒருவர் தன்னிடமுள்ள பணத்தில் 1/4 பங்கை புத்தகம் வாங்கச் செலவழித்தார். எஞ்சிய பணத்தில் 1/2 பங்கை தனது தம்பிக்குக் கொடுத்தார். எஞ்சியுள்ள பணம் ரூபா 150.00 எனின் அவரிடம் ஆரம்பத்தில் இருந்த பணத்தொகை எவ்வளவு?
    1) ரூபாய் 300.00 2) ரூபாய் 450.00 3) ரூபாய் 400.00

♦ ஒருவர் தனது வீட்டிலிருந்து பாடசாலைக்குச் சென்ற வரிப்படம் கீழே தரப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி 36 ஆம் வினாவிற்கு விடை அளிக்க.




36. வீட்டிலிருந்து பாடசாலை செல்லும் போது எத்தனை தடவைகள் இடது பக்கத்தால் திரும்பியுள்ளார்?
    1) 8 2) 6 3) 10

♦ வரிப்படத்தை அவதானித்து 37 ஆம், 38 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க.




37. கணிதத்தை விரும்பும் மாணவர்கள் எத்தனை பேர்?
    1) 7 2) 15 3) 11

38. தமிழ் பாடத்தையும் ஆங்கில பாடத்தையும் மட்டும் விரும்பும் மாணவர்கள் எத்தனை பேர்?
    1) 5 2) 6 3) 3

♦ பின்வரும் நெய்யரியைப் பயன்படுத்தி விடையளிக்க.

| | | | |
|---|---|---|---|
| ல் | டி | ர | ணி |
| வ | ஒ | ச | த |
| ம | சி | அ | ட் |

39. நெய்யரியில் உள்ள 5 எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆக்கக்கூடிய பிராணி ஒன்றின் பெயர்.
    1) கரடி 2) மரவணில் 3) ஒட்டகம்

40. மூன்றாவது நிரலில் இரண்டாவது நிரையில் உள்ள எழுத்து எது?
    1) சி 2) த 3) ச

## புதுச்சேரியில் புகையிரத மறியல் போராட்டத்தில் ஈடுபட்டோர் கைது



தமிழக மீனவரின் கொலைக்கு நீதிகோரி புதுச்சேரியில் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட நூற்றுக்கு மேற்பட்டோரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்திய மீனவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று வலியுறுத்தி புதுச்சேரி-கடலூர் சாலையை அண்மித்துள்ள புகையிரதக் கடவை அருகில் மீனவர் விடுதலை வேங்கைகள் என்ற அமைப்பினர் நேற்று முன்தினம் புதன் கிழமை ரயில் மறியல் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது பொலிஸார் மற்றும் போராட்டக்காரர்களுக்கு இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனையடுத்து ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நூற்றுக்கணக்கானோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். கடந்த திங்கட்கிழமை கச்சதீவு கடற்பரப்பில் இலங்கை கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த தமிழக மீனவருக்கு நீதி கோரி தமிழகத்தில் எதிர்ப்புப் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-12)

## மீனவரின் உடலை வாங்க மறுத்து ராமேஸ்வரத்தில் தொடர் போராட்டம்



(டில்லி)

இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக்கொலப்பட்ட தமிழக மீனவரின் உடலை வாங்க மறுத்து ராமேஸ்வரத்தில் நேற்று வியாழக்கிழமை மூன்றாவது நாளாகவும் போராட்டம் நீடித்தது.

தமிழக மீனவரை சுட்டுக்கொன்ற இலங்கை கடற் படையினரைக் கைது செய்து தமிழக சிறையில் அடைக்க வேண்டுமென்றும், இதுபோன்ற சம்ப வங்கள் எதிர்காலத்தில் நடை பெறாது என வெளியுறவுத் துறை அமைச்சர் நேரில் வந்து உறுதியளிக்க வேண் டும் என வலியுறுத்தி இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

கச்சதீவு அருகில் கடந்த திங்கட்கிழமை மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 22 வயதுடைய பிரிட்ஜோ என்னும் மீனவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தமிழகத்தில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்நிலையில், அவரது உடலை வாங்க மறுத் து மூன்றாவது நாளாக நேற்றும் ராமேஸ்வரம் தங்கச்சி மடத்தில் போராட்டம் தொடர்ந்தது.

தங்கச்சிமடம் மீனவர்களுக்கு ஆதரவாக பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களும் போராட்டக்களத்தில் இணைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-12)

## ஆட்சிக்கு வந்த பின்னர் ஏமாற்றி விட்டனர்

### பிரதமர், ஜனாதிபதி மீது சந்தியா எக்னெலிகொட

### ஜெனிவாவில் கடும் விசனம்



(ஜெனிவா)

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக தனது கணவரது பெயரை விளம்பரம் செய்த பிரதமரும், ஜனாதிபதியும் ஆட்சிக்கு வந்த பின்னர் தங்களை ஏமாற்றி விட்டதாக சந்தியா எக்னெலிகொட ஜெனிவாவில் விசனம் வெளியிட்டுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் இந்த வருடத்திற்கான கூட்டத் தொடர் கடந்த பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகியது.

இதனிடையே அங்கு சிறு கூட்டத் தொடரும் இடம்பெற்று வருகின்றது. இதில் கலந்து கொண்ட காணாமல் போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் பாரியார் சந்தியா எக்னெலிகொட இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் தனது கணவர் பற்றிய எந்த தீர்வையும் பெற்றுத் தரவில்லை என்றும் சந்தியா எக்னெலிகொட தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தனது கணவரின் பிரச்சினையை பிரசாரத்தின் போது கையிலெடுத்திருந்தாலும், தற்போது தன்னை கைவிட்டுவிட்டனர் என குற்றம் சாட்டியுள்ளார் (இ-7

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1010

Search for people, places and things Nagendram Home

**நிமால்**

கிராமத்து பொண்ணுங்க
புருஷன் பெயரை
சொல்ல மாட்டாங்க
But
சிட்டி பொண்ணுங்க
புருஷன் இருக்கிறதையே
சொல்ல மாட்டாங்க.

**ஜனா**

என் பையன் 100 இற்கு 90 இற்கு
மேல எடுத்திடுவான்.




என் பையன் அப்படியில்லை...
பொக்கட்ல எவ்வளவு இருந்தாலும்
20 இற்கு மேல எடுக்க மாட்டான்.

**சங்கவி**

மாட்டை பிடிக்கிறவருக்கு என் மூத்த
பெண்ணைக் கட்டிகொடுப்பேன்...



உங்க வீட்டு கன்றுகுட்டியை பிடிச்சா
இளைய பெண்ணை கட்டி தருவீங்களா..

**ரஜனி**

சிந்தனைத் துளி



செல்வம் மனித உடலின்
உறுப்புப் போன்றது.
சரியான வழியில்
பயன்படுத்துங்கள்.
இல்லையெனில் உறுப்பு
மெல்ல மெல்லச் செயல்
இழந்து அழிந்துவிடும்.

ஹென்றிஃபோர்டு

**பிரசாந்த்**

என்னங்க இது வீட்டைச் சுத்தி
ஒரே மதுக்கடையா இருக்கு?



நீங்க தானே தண்ணி வசதி
இருக்கிற ஏரியாவுல வீடு
வேணும்னு கேட்டீங்க...

**விதுசா**

நின்ற இடத்தில சுற்றினா
"கடிகாரமுன்னு" அர்த்தம்



நிற்க முடியாம சுற்றினால்
"குடிகாரன்னு" அர்த்தம்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தீவிபத்தில் சிக்கிய 20 சிறுமிகள் பலி!

## 41 பேர் படுகாயம்



குவாத்தமாலாவில், பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுமிகளுக்காக அரசினால் நடத்தப்பட்டுவரும் இல்லத்தில் ஏற்பட்ட தீயில் 20 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, காயமடைந்த 13 வயது முதல் 17 வயதுடைய 41 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்ற அதேவேளை, அவர்களில் சிலரது நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், சோகத்தில் ஆழ்ந்துள்ள உயிரிழந்த சிறுமிகளின் உறவினர்கள் குறித்த இல்லத்தின் முன்னால் கூடி தங்களது ஆதங்கத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இச் சம்பவம் தொடர்பில் குவாத்தமாலா சமூகநல அமைப்பின் தலைவர் கூறுகையில், "சனநெரிசல் மிகுந்த குறித்த இல்லத்தில் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம் பெறுவதாகவும், அங்கு வாழ்க்கை நிலை மிக மோசமாக உள்ளதாகவும் பல்வேறு முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டு வந்தன.

இந்நிலையில், மேற்படி இல்லத்திலிருந்து தப்பிச் செல்லும் முயற்சியில் அங்கிருந்த சிறுமிகள் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் வன்முறையில் ஈடுபட்டனர்.

வன்முறை தீவிரமடைந்த நிலையில், நேற்று முன்தினம் குறித்த சிறுமிகள் அங்கிருந்த மெத்தைகளை தீ வைத்துள்ளனர். இதன் விளைவாகவே மேற்படி அனர்த்தம் ஏற்பட்டுள்ளது" எனத் தெரிவித்தார். இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

400 பேர் தங்கக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ள குறித்த இல்லத்தில் 500 பேர்வரை தங்க வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-12)

# இராணுவ வைத்தியசாலையில் தாக்குதல் 30பேர் உயிரிழப்பு; ஐ.எஸ்.பொறுப்பேற்பு



(காபூல்)

ஆப்கான் தலைநகர் காபூலில் வைத்திய உடையில் இராணுவ வைத்தியசாலைக்குள் நுழைந்த தாக்குதல்தாரிகளுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் இடையே பல மணி நேரங்கள் நீடித்த மோதலில் சுமார் 30 பேர் உயிரிழந்ததுடன் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

இராணுவ வைத்தியசாலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற குறித்த படுகொலை சம்பவத்திற்கு ஐ.எஸ். தீவிரவாதிகள் பொறுப்பேற்றுள்ளனர்.

அரச எதிர்ப்பு கிளர்ச்சியாளர்களின் அச்சுறுத்தல்கள் அண்மைய காலமாக அதிகரித்து வருகின்ற நிலையில், பொதுமக்களையும் ராணுவத்தையும் இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட பாரிய தொடர் தாக்குதலாக இது நோக்கப்படுகிறது.

தலைநகரிலுள்ள அமெரிக்க தூதரகத்திற்கு அண்மையில் அமைந்துள்ள சர்தார் தாவுத் கான் வைத்தியசாலையின் நுழைவாயில் பகுதியில் நேற்று முன்தினம் காலை முதலில் தற்கொலை குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து வைத்தியசாலைக்குள் நுழைந்த தாக்குதல்தாரிகள் அங்கு துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். பின்னர் சம்பவ இடத்திற்கு விசேட அதிரடிப் படையினர் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவ்வாறாக பாதுகாப்பு படையினருக்கும், தாக்குதல்தாரிகளுக்கும் இடையே மோதல் இடம்பெற்றுவந்த வேளையில் வைத்தியசாலைக்குள் மீண்டும் வெடிப்புச் சம்பவமொன்று இடம் பெற்றதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் தலிபான் தீவிரவாதிகளாலேயே இவ்வாறான கொடூரத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்நிலையில், தற்போதைய தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிரவாதிகள் பொறுப்பேற்றுள்ளனர். (இ-12)

# ஆட்கடத்தல் கும்பல்களிடையிலான கடும் மோதலில் 22 பேர் உயிரிழப்பு!



லிபியாவில் ஆட்கடத்தல் கும்பல்களிடையே ஏற்பட்ட மோதலில் 22 ஆபிரிக்க அகதிகள் உயிரிழந்ததுடன், சுமார் நூற்றிற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி தகவலை, குடியேற்றவாசிகள் தொடர்பான சர்வதேச அமைப்பின் பேச்சாளர் ஜோல் மெல்மன் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்டார். மேலும், உயிரிழந்தவர்களும், காயமடைந்தவர்களும் பெரும்பாலும் குடியேற்றவாசிகளே எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, 2017ஆம் ஆண்டு கடல் மார்க்கமாக ஐரோப்பாவிற்கு குடியேறுவோரின் எண்ணிக்கை 50 வீதத்தினால் அதிகரித்துள்ளது. இந்த உயர்வானது ஆட்கடத்தல்காரர்களுக்கு ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது.

இந்த ஆட்கடத்தல் செயற்பாடுகளின் விளைவாக வன்முறைகள் தூண்டிவிடப்பட்டுள்ளன. அவ்வாறானதொரு தாக்குதலிலேயே தற்போது 22 பேர் உயிரிழந்துள்ளனர். (இ-12)

# இலங்கைக்கு கடுமையாக எச்சரிக்கை செய்யுங்கள்


## சுஷ்மா சுவராஜுக்கு ஸ்டாலின் வலியுறுத்தல்



(சென்னை)

மீனவர்கள் கொல்லப்படுவதை இனியும் பொறுத்துக் கொள்ள முடியாது என்றும், இலங்கைக்கு கடுமையான எச்சரிக்கை செய்யுங்கள் என்றும் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜுக்கு, தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் எழுதியுள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார். (இ-12)

# ட்ரம்பிற்கு எதிராக மீண்டும் பேரணி




(வோஷிங்டன்)

மகளிர் தினத்தை முன்னிட்டு உலகளாவிய ரீதியில் பல்வேறு போராட்டங்களும் பேரணிகளும் இடம்பெற்று வந்த நிலையில், பெண்களுக்கு சம உரிமை கோரியும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கு எதிராகவும் நியூயோர்க்கில் பாரிய போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்று முன்தினம் புதன்கிழமை மகளிர் தினத்தில் பொருளாதார நியாயத்தன்மையை வலியுறுத்தி பெண்கள் பணிப்புறக்கணிப்பிலும் ஈடுபட்டு இருந்தனர்.

கருக்கலைப்பு மற்றும் சுகாதாரப் பராமரிப்பு ஆகியவை குறித்த ட்ரம்பின் கொள்கைளை கண்டித்து ஏற்கனவே கடந்த ஜனவரி மாதம் 21ஆம் திகதியும் பெண்கள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியிருந்தனர்.

தங்களது போராட்டம் குறித்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறுகையில், "பெண்கள் இன்றேல் உலகம் இல்லை. எனவே பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இதற்காகவே இன்றைய தினத்தில் ஒன்று கூடியுள்ளோம்" என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஒருவர் தெரிவித்தார்.

அத்தோடு, பெண்களுக்கான உரிமைப் பிரச்சினை என்பது இங்கு மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் காணப்படுகின்றது என மற்றுமொருவர் தெரிவித்துள்ளார். (இ-12)

# இந்திய பெரும் கோடீஸ்வரர்கள் பட்டியலில் முதலிடத்தில் நீடிக்கிறார் முகேஷ் அம்பானி



இந்திய பெரும் கோடீஸ்வர்கள் பட்டியலில் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் த்லைவர் முகேஷ் அம்பானி முதலிடத்தில் நீடிக்கிறார்.

ஹுரன் ரிப்போர்ட் இந்தியா நிறுவனம் இந்தியாவின் பெரும் பணக்காரர்கள் பட்டியல் ஒன்றை வெளியிட்டுள்ளது. இதில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 132 பேர் இடம் பெற்றுள்ளனர். இவர்கள் அனைவரும் நூறு கோடி டொலர் மற்றும் அதற்கு மேல் நிகர சொத்து மதிப்பு உடையவர்கள் ஆவர். இவர்களில் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனர் முகேஷ் அம்பானி முதலிடத்தில் உள்ளார்.

கடந்த ஆண்டு நவம்பர் 8 ஆம் திகதி அன்று பழைய 500 மற்றும் 1,000 ரூபாய் நாணயத்தாள்கள் செல்லாது என பிரதமர் மோடி அறிவித்தார். அந்த நிலையில், 11 இந்திய மெகா கோடீஸ்வரர்களின் சொத்து மதிப்பு 100 கோடி டொலருக்கும் கீழே இறங்கியது. ஆனால் முகேஷ் அம் பானி இந்த பட்டியலில் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார். அவரது சொத்து மதிப்பு ரூ.1.75 இலட்சம் கோடி (2,600 கோடி டொலர்) ஆகும்.

அடுத்து ரூ.1.01 இலட்சம் கோடி (1,400 கோடி டொலர்) சொத்துடன் அசோக் லேலண்டு குழுமத்தின் எஸ்.பி. இந்துஜா மற்றும் குடும்பத்தினர் இரண்டாவது இடத்தில் உள்ளனர். (இ-12)

# நான் தீர்ப்பையும் மாற்ற மாட்டேன் சண்டித்தனத்துக்கும் சளைக்கேன்

# சபாநாயகர் கருஜயசூரிய சவால்



சபாநாயகர் கடும் உத்தரவுகளையும் கட்டளைகளையும் பிறப்பித்தார். அவைக்குள் பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். இதேவேளை, நாடாளுமன்றத்தில் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவரான தினேஷ்குணவர்தன, அவையிலிருந்து வெளியேற்றுவதற்கு பெயர் குறிப்பிடப்பட்டமை போன்றவை இலங்கை நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் பதிவாகியிருந்தன.

நாடாளுமன்றம் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில், நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணிக்கு கூடியது. சபாநாயகரின் அறிவிப்பின் போது, விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியை நாடாளுமன்றத்தில் தனிக்கட்சியாக அங்கீகரிக்கமுடியாது என்று பல உதாரணங்களையும் விளக்கங்களையும் அளித்து தனது தீர்ப்பை அறிவித்தார்.

இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டதன் பின்னர் எழுந்த விமல் எம்.பி, ஏதோவொன்றை கூறுவதற்கு முயன்றார். எனினும், சபாநாயகர் அதற்கு அனுமதியளிக்கவில்லை. இந்த விவகாரம் தொடர்பில் வாதவிவாதங்கள், கருத்துகளை தெரிவிக்க இடமளிக்கமாட்டேன். எழுத்துமூலம் முறையிடுமாறு விமலிடம் கேட்டுக் கொண்டார்.

இதன்போது எழுந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஏற்கனவே கூறியதைப் போல, விமல் வீரவன்ச தலைமையிலான எம்.பிக்கள் நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்க முடியும். எனினும் குழுவாக இயங்க இடமளிக்க முடியாது என்றார். குறுக்கிட்ட விமல், இந்த விவகாரம் தொடர்பில் பிரதமர் கருத்துரைத்துள்ளார். ஆகவே, தனக்கும் சந்தர்ப்பம் வேண்டுமெனக் கோரி ஒன்றைக் காலில் நின்றார்.

## எப்போது இடமளிப்பீர்கள்

சபாநாயகர் எவ்வளவு எடுத்துரைத்தும், விமல் வீரவன்ச கருத்துத் தெரிவிப்பதாக நின்றார். "எனக்கான சந்தர்ப்பம் நாளையா அல்லது நாளை மறுதினமா என்று அறிவிக்கவேண்டும்" எனக் கேட்டார். இதற்கு பதிலளித்த சபாநாயகர், இவ்வாரத்துக்குள் சந்தர்ப்பம் தருவேன் என்றார். இவ்வாரமல்ல, எப்போது இடமளிப்பீர்கள் என வீரவன்ச வினவினார். அதற்கு பதிலளித்த சபாநாயகர், வாரம் முடிவதற்கு இன்னும் நான்கு நாட்கள் இருக்கின்றன. அந்த நான்கு நாட்களுக்குள் இடமளிப்பேன் என்றார்.

இதனிடையே, தினேஷ் குணவர்த்தன எம்.பியும் ஒழுங்குப் பிரச்சினையை கிளப்பி, ஏதேதோ கூறிக் கொண்டே போனார். அவருடன் இணைந்து கொண்ட விமல் வீரவன்ச, அந்தத் தீர்ப்பை ஏற்க முடியாது என்று கூச்சலிட ஆரம்பித்தார். "எமது வாயை மூடவா முயலுகின்றீர்கள்? நாடாளுமன்றத்தில் ஏகாதிபத்தியம் முன்னெடுக்கப்படுகின்றது. நான் இங்கு கருத்து வெளியிட வேண்டும். அதற்கு சந்தர்ப்பம் கொடுங்கள்" என்று கோரிக்கை விடுத்தார். இதற்குப் பதிலளித்த சபாநாயகர், "முக்கியமான பிரேரணை எடுத்துக் கொள்ளப்படவுள்ளமையால் உங்களின் கருத்துகளுக்கு என்னால் நேரம் ஒதுக்க முடியாது. நீங்கள் எழுத்து மூலமாக உங்களின் ஆட்சேபனையை அனுப்பினால் நான் அது



தொடர்பில் நடவடிக்கை எடுப்பேன்" என்றார். எனினும் அதனை ஏற்றுக்கொள்ளாத விமல், தொடர்ந்தும் சத்தமிட்டதுடன் சபை நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தார்.

## தொலைக்காட்சிக்கு பேசுகிறார்

அவரின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்த சபை முதல்வாரான லக்ஷ்மன் கிரியெல்ல, "இவர் தொலைக்காட்சி விளம்பரத்துக்காகவே இவ்வாறு கூச்சலிடுகிறார்" என்று தெரிவித்தார். பின்னர், ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய விமல் எம்.பி, "நான் சபாநாயகரின் கருத்துக்கு எதிர்ப்பினை வெளியிடவில்லை. எனக்கு இது தொடர்பில் கருத்து வெளியிட நேரம் ஒதுக்குமாறு கேட்கிறேன். இதற்கு முறையான பதிலொன்றை சபாநாயகர் வழங்க வேண்டும்"என்றார்.

இதனைத் தொடர்ந்து எழுந்த, ஒருங்கிணைந்த எதிர்க்கட்சியின் தலைவரான தினேஷ் குணவர்த்தன, "ஒருங்கிணைந்த எதிரணி உறுப்பினர் எனும் வகையில், சபாநாயகர் கூறிய கருத்துகள் பொய்யானவை எனக் கூறிக் கொள்கிறேன். விமல் எம்.பி. இது தொடர்பில் இதற்கு முன்னர் சுட்டிக்காட்டியிருந்தாலும் இதுவரை இதற்கு ஒழுங்கான ஒரு பதில் வழங்கப்படவில்லை" என்றார்.

இதனிடையே, ஒன்றிணைந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒரேடியாக எழுந்து நின்று கொண்டு சபையில் பெரும் கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர். சபாநாயகர், அவர்களை அமைதியாக இருந்து சபை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பலமுறை கேட்டுக்கொண்டும் அவர்கள் தொடர்ச்சியாக கூச்சலிட்டுக்கொண்டிருந்தனர்.

"நான் வரலாற்றை பிழையாக்கி கருத்துத் தெரிவிக்கவில்லை. நாடாளுமன்ற நிலையியற் கட்டளைக்கமையவே நான் இந்த முடிவை கூறினேன்" என்றார். "கூட்டணியிலிருந்து இதற்கு முன்னர் கட்சிகள் பிரிந்து சென்றுள்ளன. அதற்கெல்லாம் அனுமதி கிடைத்துள்ளது. ஆனால் எமக்கு மட்டும் இப்போது ஏன் அனுமதி இல்லை?" என் விமல் வீரவன்ச தொடர்ச்சியாக எழுந்து நின்று கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்.

## கௌரவம் முக்கியம்

இதனால், சபையில் மீண்டும் குழப்பம் ஏற்பட்டமையால், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கௌரவத்துடன் நடந்துகொள்ளவேண்டும் என்று சபாநாயகர் அறிவித்தார்.


எனினும் அவரது அறிவித்தலை கவனத்தில் எடுக்காத, விமல் வீரவன்ச, தினேஷ் குணவர்தன, கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட எதிரணியின் உறுப்பினர்கள் தொடர்ந்தும் உரத்த குரலில் கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர். "மிகவும் வெட்கமாக உள்ளது. தயவு செய்து அனைவரும் அமருங்கள. தினேஷ் எம்.பி, நீங்கள் ஒரு சிரேஷ்ட உறுப்பினர். நீங்கள் இவ்வாறு கூச்சலிடுவது ஏனையோருக்கு பிழையான முன்னுதாரணமாகிவிடும்" என்று சபாநாயகர் பலமுறை அறிவித்தும் சபையில் கூச்சல் குழப்பம் ஓயவில்லை. "நான், தீர்ப்பை அறிவித்து விட்டேன்.

இதுதான் இறுதித் தீர்ப்பு. சண்டித்தனத்தை என்னிடம் காட்டமுடியாது. அதற்கெல்லாம் நான் சளைத்தவன் அல்ல. எதிர்க்கட்சி உறுப்பினராக நான் இருந்தபோது, நான் கொண்டுவந்த தகவலறியும் சட்டமூலத்தை கொண்டுவராமல் விடச்செய்தவர்கள் நீங்கள்" என, தினேஷை சுட்டிக்காட்டினார். இந்நிலையில் எழுந்த விமல் எம்.பி., சபாநாயகரை நோக்கி, வெட்கமாக உள்ளது, வெட்கமாக உள்ளது என்று கூறி சபாநாயகரை நோக்கி நடந்துவர, அவரை பின்பற்றி தினேஷ் எம்.பியும் எழுந்து வந்தார்.

## ஒன்று கூடி கதைத்தனர்

அவர்கள் சபையின் நடுவில் வந்தமையால் படைக்கல சேவிதர்களும் அவர்களுக்கு இருபுறமும் வந்து நின்று கொண்டனர். தொடர்ந்து அவையில் அமைதியின்மை ஏற்பட்டதால், சபை நடவடிக்கைகளை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைப்பதாக அறிவித்து, சபாநாயகர் அக்கிராசனத்திலிருந்து எழுந்து சென்றுவிட்டார். சபாநாயகர் சென்றதுடன், எதிரணி உறுப்பினர்கள் தத்தமது ஆசனங்களில் அமராது ஒன்றுகூடி கதைத்துக் கொண்டே இருந்தனர்.


ஒத்திவைக்கப்பட்ட சபை, 1.50 மணியளவில் மீண்டும் கூடியது. நான் நிலையியற்கட்டளைகளின்படிதான் செயற்படுகிறேன். எனவே, உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக இருக்கவும் என சபாநாயகர் விநய



மாகக் கேட்டுக் கொண்டார். இதற்கு, "நாம் எமக்கு வாய்ப்பு வழங்க வேண்டும்என்று தான் கேட்கிறோம்" என்று விமல் எம்.பி., சபாநாயகரைப் பார்த்துக் கோரிக்கை விடுத்தார்.

(தொடர்ச்சி நாளை...)

# மகிந்தவின் பெயர்ப்பலகை சேதம்




தெஹிவளை மேம்பாலம் திறந்து வைத்தமைக்கான நினைவுப் பலகை இனம் தெரியாதவர்களினால் உடைக் கப்பட்டுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் குறித்த மேம்பாலம் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிலையில் கடந்த ஒரு சில தினங்களுக்கு முன்னர் மகிந்த ராஜபக்ஷவின் பெயர் பொறிக்கப்பட்ட குறித்த பாலத்தின் நினைவுப் பலகை உடைத்து எறியப்பட்டுள்ளதாகப் பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷான் பிரேமரத்ன தெரிவித்துள்ளார். (இ-7)

# இந்த ஆட்சியை மக்கள் உருவாக்கியது வீதியில் இறங்கிப் போராடுவதற்கல்ல

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி கண்டனம்

அரசாங்கத்திற்கு எதிராகப் போராட முடிகிறது. வெள்ளை வான் வராது. பயங்கரவாதத் தடைச்சட்டம் பாயாது என்று சொல்கின்றனர். கடந்தகால கொடுங்கோல் குடும்ப ஆட்சியைத் தோற்கடித்து இந்த ஆட்சியை உருவாக்கியது மக்கள் வீதிகளில் இறங்கி போராடுவதற்காகவல்ல. மாறாக இந்த நாட்டு மக்களின் பிரச்சினைகளைப் புரிந்து அவர்களுக்கு துரிதகதியில் நிவாரணம் வழங்குவதற்காகவே. நாமும் எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க எமது மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொடுத்து இந்த அரசாங் கத்தை ஆட்சிப்பீடம் ஏற்றினோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

ஏற்றுமதி, இறக்குமதி கட்டளைகள் திருத்தச்சட்ட மூலத்தில் நேற்று முன்தினம் (07.03) பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

நாடு பொருளாதார ரீதியில் பாரிய சவால்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்ற நிலைமையில் தான் நாங்கள் இந்த சட்ட மூலம் தொடர்பில் பேசிக் கொண்டிருக்கின்றோம். இறக்குமதிகள் அதிகரிப் பதனால் தீர்வைகளும் அதிகரித்தே செல்கின்றன.

இந்த சுமைகள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சாதாரண பொதுமக்களையே தான் பாதிப் பதாகவுள்ளது. ஆகவே இறக்குமதிகளுக்கு நிகரான ஏற்றுமதிகளை மேற்கொள்வதற்கு உரிய நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற வேண்டும்.

ஆனால் தற்போது வரையில் அதற்குரிய நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மனிதவுரிமை, மனிதாபிமான சட்ட மீறல்களால் பாதிக்கப்பட்ட சமூகத் திற்கு நீதியை வழங்கும் முகமாக கடந்த 2015ஆம் ஆண்டு அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் இலங்கை அரசாங்கமும் இணை அனுசரணையை வழங்கி நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 18 மாதங்கள் கடந்திருக்கின்றன. தற்போது வரையில் தீர்மானத்தில் கூறப்பட்ட விடயங்களை நடைமுறை ரீதியாக முன்னெடுப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக் கைகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை.

பாராளுமன்றம் அரசியலமைப்பு சபையாக மாற்றப்பட்டு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுவதாக உலகத்திற்கே அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சியான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந் திரக்கட்சியானது புதிய அரசியலமைப்பை முழுமையாக எதிர்க்கின்றது.

முன்னாள் ஜனாதிபதி உள்ளிட்ட 51 உறுப்பினர்கள் அரசியலமைப்பில் சிறு திருத்தத்தை மேற்கொள்வதற்கு கூட இடமளிக்கக் கூடாது என்ற தோரணையில் கடுமையான பிரசாரத்தை மேற்கொண்டவண்ண மிருக்கின்றார்கள். இவ்வாறான நிலையில் புதிய அரசியலமைப்பு என்ற நீண்டதொரு விடயப்பரப்பு உடனடியாக நடைமுறைச் சாத் தியமாகுமா?

அவ்வாறு சாத்தியமானாலும் அந்த அரசியலமைப்பு தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூரணப் படுத்தும் வகையில் அமையுமா? பிரிக்கப்படாத நாட்டில் இணைந்த வடகிழக்கில் பகிரப்பட்ட இறையாண் மையின் அடிப்படையில் தங்களின் விடயங்களை தாமே தீர்மானிக்கும் வகையிலான ஏற்பாடுகள் இடம் பெறுமா என்ற பாரிய வினாக்கள் எல்லாம் எம்முன்னே இருக்கின்றன.

இவ்வாறான நிலையில் அந்த வொரு விடயத்திற்கான பாதிக்கப்பட்ட மக்களிற்கான நீதியை பெற்றுக் கொடுப்பதற்கான விடயத்தை கைவிட முடியாது. காணிகள் அபகரிப்பு, கைதிகள் விடுதலை, காணாமல் போனோர் விடயங்கள், நேரில் கையளிக்கப்பட்டவர்கள எங்கே போனார்கள் போன்ற பல்வேறு விடயங்களை மறந்து செயற்பட முடியாது.

தற்போது ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 34ஆவது கூட்டத்தொடரில் இலங்கை இணை அனுசரணை வழங்கி நிறைவேற்றி தீர்மானத்தை முழுமையாக நடை முறைப்படுத்துவதற்கு மேலும் 2 வருடங்கள் கால அவகாசத்தை வழ ங்குவதற்கு பிரித்தானியா முயற்சித்து வருகின்றது.

இந்த காலஅவகாசமே வழங்கக் கூடாது என்ற நிலைப்பாட்டில் நாங் கள் இருக்கின்ற நிலையில் தற்போது வெளிநாட்டு நீதிபதிகள், சட்டத்தரணிகள், சட்ட வரைஞர்கள் ஆகியோர் நீதிக்கான விசாரணை பொறிமுறையில் பங்கேற்கத்தேவையில்லை என்பதை கால அவகாச தீர்மானத்தில் அல்லது அதற்கு மேலதிக தீர்மான மொன்றில் உட்புகுத்தி நிறைவேற்றுவதற்குரிய முயற்சிகளை அர சாங்கம் ஜெனிவாவில் மேற் கொண் டு வருகின்றது.

இதற்கு சில வல்லாதிக்க சக்திகளும் சிவில் அமைப்புக்களும் துணை போவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது. அனைத்தையும் இழந்து நிற்கும் தமிழ்ச் சமூகம் சர்வ தேசத் தையே தனது நீதிக்காக எதிர் பார்த்திருக்கின்றது. அவ்வாறான நிலையில் தமது நலன்களுக்காக தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை சிதறடித்து தமிழ் மக்களுக்கு துரோகத்தை இழை க்கும் செயற்பாட்டில் மேற்குலக நாடுகள் ஒரு போதும் ஈடுபடக்கூடாது என இந்த உயரிய சபை ஊடாக கேட்டுக் கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-250)

# பெண்களை ஒன்றுகூட்டி சக்திமிக்கவர்களாக உருவாக்க வேண்டும்

## முன்னாள் எம்.பி. பத்மினி வலியுறுத்து

தமிழ்ச் சமூகத்தை அடிமட்டத்திலிருந்து கட்டி வளர்க்க வேண்டும். குறிப்பாக இன்று தனித் தனியாக ஆக்கப்பட்டிருக்கும் பெண்களை ஒன்று கூட்டி சக்தி மிக்கவர்களாக உருவாக்க வேண்டும். இவ்வாறு ஒன்றுகூடு வதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்க வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பெண்கள் விவகாரக் குழுத் தலைவியுமான பத்மினி சிதம்பரநாதன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச பெண்கள் தினம் தொடர்பில் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

உலகப் பெண்களின் தொடர்ச்சியான உரிமைப் போராட்டத்தின் விளைவாக பெற்ற வெற்றியைக் கொண்டாடும் நாளாக சர்வதேச பெண்கள் தினம் மார்ச் மாதம் 8 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது.

உலகளவில் பெண்களின் மேம்பாட்டிற்கும் பாதுகாப்புக்குமாக பல முயற்சிகள் முன் னெடுக்கப்பட்டு வருகின்றன. ஐ.நா அமையத்திலும் பெண்களுக்கெதிரான பாரபட்சத்தை ஒழிக்கும் குழல் பெண்களுக்குரிய பல பாதுகாப்பு ஏற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

எமது தேசத்தைப் பொறுத்தவரையில் தமிழ்ப் பெண்கள் காலங் காலமாக பல ஒடுக்கு முறைகளுக்கு ஆட்பட்டு வந்தபோதும் 2009 இன் பின்னர் இது மிகவும் மோசமான நிலைக்கு சென்றுள்ளது.

2009 இல் தமிழ் மக்கள் மீது பெரும் யுத்த அழிவு ஏற்படுத்தப்பட்டதன் பின் தமிழ் மக்களின் எதிர்காலம் சூன்யமான நிலைக்கு தள் ளப்பட்டது. தமிழ் மக்கள் மீது யுத்தத்தை நடத்தி தமிழ் மக்களுக்கு பெரும் அழிவை ஏற்படுத்திய சர்வதேச ஆளும் வர்க்கம் தொடர்ந்தும் தமிழ் சமூகம் மீது தலையீடுகளை கொண்டிருக்கின்றது. அவர்களது முகவர்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற நிலைக்கு உருவாக்கப்பட்டார்கள். இன்று தமிழ்ச் சமூகம் பொறுப்புவாய்ந்த தலைமையற்ற சமூகமாக விளங்குகின்றது.

யுத்தத்தால் பல குடும்பத் தலைவர்கள் கொல்லப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டதாலும் 90,000 இற்கு மேற்பட்ட பெண் தலைமைக் குடும்பங்கள் வெறு விலிகளாக தமது குடும்பத்தை சுமக்க முடியாமல் பல்வேறு துன்பங்களை எதிர் கொள்கின்றனர்

இந்த நிலையில் பல சீரழிவுகள் ஏற்படுகின்றன. குடும்பங்களில், தொழில் நிலையங்களில், பாடசாலைகளில், பொது இடங்களில், வீதிகளில் என்று எல்லா இடங்களிலுமே பெண்களும் சிறுவர்களும் பல மோசமான பாதிப்புக்குள்ளாகின்றனர். தங்கி வாழ்ந்து பழக்கப்பட்ட நம் பெண்கள் பொருளாதார ரீதியாகவும் பாதிக்கப்பட்டு கடன் சுமைகளால் குடும்பப் பாரத்தை தாங்க முடியாமல் அல்லற்படுகின்றனர். இதனால் தற்கொலைகளும் அதிகரிக்கின்றன.

இவ்வாறு பல்வேறு துன்பங்களுக்கு ஆட்பட்ட பெண்கள் குரலற்றுப் போகின்றனர். தங்களது மன ஆதங்கங்களை வெளிப் படுத்த முடியாத அளவிற்கு சுருங்கிப்போகின்றனர். தனித்துப் போகின்றனர். இது ஒரு ஆபத்தான நிலை. இது சமூகத்தை சிதைக்கும் தமிழினத்தை அழிக்கும்.

ஆனால் பெண்களிடம் பேராற்றல் உண்டு. பெண் சக்தி மிக்கவள். அந்த சக்தியை வெளிக் கொண்டுவர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# கொள்ளை ஐவர் கைது



வர்த்தக நிலையங்கள் மற்றும் வீடுகளில் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களை ஹற்றன் பொலிஸார் வீடொன்றிலிருந்து மீட்டுள்ளனர்.

ஹற்றன் பிரதேச வீடொன்றிலிருந்து நேற்று முன்தினம் இரவு இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களை கைப் பற்றியதுடன், சந்தேக நபர்கள் ஐவரும் கைது செய்துள்ளனர்.

2016 ஆம் ஆண்டு முதல் பல்வேறு கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் தேடி வந்த நிலையில் குறித்த சந்தேக நபர்களை பொலிஸ் குழுவினரின் திடீர் சுற்றிவளைப்பின் மூலம் கைது செய் துள்ளனர். (இ-7)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 50 | 40 | 40 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 90 | 100 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 120 | 120 | 140 | 200 |
| தக்காளி | 50 | 100 | 40 | 50 | 50 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 70 | 60 | 80 | 80 |
| கோவா | 20 | 100 | 20 | 30 | 40 | 60 |
| கரட் | 40 | 100 | 40 | 60 | 50 | 100 |
| பூசணி | 50 | 80 | 35 | 50 | 50 | 60 |
| புடோல் | 60 | 80 | 40 | 80 | 50 | 80 |
| வாழைக்காய் | 60 | 80 | 50 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 150 | 100 | 80 | 90 | 120 |
| பெரிய வெங்காயம் | 90 | 120 | 80 | 100 | 90 | 100 |
| பாகற்காய் | 140 | 300 | 80 | 100 | 150 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 50 | 80 | 80 | 160 |
| கருணைக்கிழங்கு | 50 | 100 | 100 | 50 | 50 | 120 |
| பயற்றங்காய் | 60 | 100 | 40 | 60 | 60 | 120 |
| லீக்ஸ் | 40 | 100 | 60 | 80 | 60 | 80 |
| பீற்றூட் | 50 | 100 | 40 | 50 | 60 | 80 |
| கறிமிளகாய் | 140 | 100 | 90 | 100 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 400 | 300 | 400 | 500 |
| போஞ்சி | 100 | 200 | 60 | 80 | 100 | 200 |
| கத்தரிமுள்ளி | 20 | 40 | 40 | 40 | 40 | 30 |
| கீரை-1பிடி | 30 | 20 | 20 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 60 | 60 | 50 | 100 | 80 | 100 |
| தேங்காய் ஒன்று | 60 | 60 | 20-50 | 60 | 60 | 50-60 |
| இராவள்ளி | 180 | 300 | 160 | 180 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 60 | 60 | 40 | 60 | 60 | 100 |
| முள்ளங்கி | 40 | 60 | 30 | 40 | 50 | 600 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 15 | 30 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 15 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 60 | 50 | 60 | 60 | 50 |

கொடிய விசப் பாம்பையும் நல்ல பாம்பு என்றே அழைப்பர்.

– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்களின் பிரதிநிதிகளே! நீதியோடு செயற்படுங்கள்

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இலங்கை பாராளுமன்றத்திலும் மாகாண சபைகளிலும் இருக்கக்கூடிய மரியாதைக்குரிய உறுப்பினர்களே! இக் கடிதம் உங்களுக்கு அவசரமாக எழுதப்படுகிறது.

கொடும்போரில் பாதிக்கப்பட்ட தமிழினத்திற்கு நீதியும் உரிமையும் கிடைக்காமல் செய்வதற்கான சதித்திட்டம் ஐ.நா மனிதவுரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் நடந்தேறவுள்ளது.

கால அவகாசம் வழங்குதல் என்ற பெயரில் இந்த சதி அரங்கேறுவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

நல்லாட்சி என்று பெயர் சூட்டி, போர்க் குற்ற விசாரணைகளில் இருந்தும் தமிழ் மக்களிற்கு உரிமை வழங்குவதிலிருந்தும் தப்பித்துக் கொள்வதற்கான முயற்சிகள் ஜெனிவாவில் நடந்து வருகின்றன.

இதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கொழும்புத்தலைமை ஆதரவாக செயற்பட்டு வருவது தமிழ் மக்களுக்கு தீராத ஆத்திரத்தையும் தாளாத வேதனையையும் தருகிறது.

இக்கட்டத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இலங்கைப் பாராளுமன்றத்திலும் வடக்கு மாகாண சபையிலும் இருக்கக்கூடிய கௌரவ பிரதிநிதிகள் தர்மத்தோடும் நீதியோடும் நடந்து கொள்வது மிகவும் அவசியமானதாகும்.

மதிப்புக்குரிய தமிழ்ப் பிரதிநிதிகளே!

தங்கள் பிள்ளைகளை, பெற்றவர்களை, குடும்பத்தலைவர்களை, குடும்பத்தலைவியை, உடன்பிறந்த சகோதரர்களை பறிகொடுத்து கதறுகின்ற எங்கள் தமிழ்க்குடும்பங்களின் அவலங்களை ஒரு கணம் திரும்பிப்பாருங்கள்.

காணாமல்போனவர்களின் உறவுகள் இன்று வரை கதறிக் கண்ணீர் விட்டு வீதியில் விழுந்து புலம்பி அழுது மன்றாடி எங்கள் பிள்ளைகள் எங்கே என்று கெஞ்சிக்கேட்டும் இன்று வரை எந்தப்பதிலும் வழங்காத நல்லாட்சியின் போக்கைப்பாருங்கள்.

தமிழ் அரசியல் கைதிகளுக்கு இன்று வரை விடுதலை வழங்கமறுக்கின்ற எங்கள் நாட்டு ஆட்சியின் நீதிபரிபாலனத்தின் அசமந்தத்தை நினைத்துப்பாருங்கள். சொந்த நிலத்தில் குடியமரக்கூட அனுமதி மறுக்கும் படையினரின் ஆக்கிரமிப்பின் கொடுமைத்தனத்தை காணுங்கள். இதுவே எங்கள் நிலைமை எனும்போது இலங்கை அரசுக்கு ஐ.நா கூட்டத்தொடரில் கால அவகாசம் வழங்குவது எந்த வகையில் நீதியாகும்?

ஆக, அன்புக்குரிய தமிழ்ப் பிரதிநிதிகளே! தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையை கைப்பற்றிவைத்திருக்கக்கூடிய ஒரு சிலர் செய்கின்ற அநியாயத்திற்கு, அநீதிக்கு நீங்கள் உடன் போய் விடாதீர்கள்.

மாறாக, முடிந்தால் அவர்களுக்கு நீதியை எடுத்துச் சொல்லுங்கள். தர்மத்தை எடுத்தியம்புங்கள். தமிழ் மக்களின் அவலத்தை புரிய வையுங்கள். விலைபோன அவர்களை மீட்கப் பாருங்கள்.

முடியாவிடின் நீங்கள் உங்கள் கரங்களை உயர்த்தி, ஐ.நாவே! இலங்கை அரசுக்கு கால அவகாசம் கொடுக்காதே என்று கோசம் போடுங்கள். உங்களை நம்பியிருக்கும் அப்பாவித் தமிழ் மக்களுக்கு நீங்கள் செய்கின்ற அறம் – தர்மம் – நீதி இதுவாகவே இருக்கும்.

# இரணைதீவு பகுதியில் மக்களை மீளவும் குடியமர்த்த வேண்டும்

## பிரதமரிடம் இராஜாங்க அமைச்சர் விஜயகலா கோரிக்கை

கிளிநொச்சி, பூநகரி, இரணைதீவு பகுதியில் மக்களை மீளக் குடியேற்ற அனுமதி வழங்கப்பட வேண்டும். கடற்படையினரால் சுவீகரிக்கப்பட்டுள்ள அந்தப் பகுதியை விடுவித்து மீளவும் மக்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் நேரில் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த இராஜாங்க அமைச்சர் இரணைதீவு மக்களின் கோரிக்கை தொடர்பாக எடுத்துக் கூறியதுடன் மீளவும் அந்த மக்களை அப்பகுதியில் மீளக் குடியேற்ற வேண்டிய அவசியம் குறித்தும் வலியுறுத்தியுள்ளார். இதனையடுத்து கடற்படைத் தளபதி மற்றும் அமைச்சர் சாகல ரத்நாயக்கவின் கவனத்துக்கு இந்த விடயத்தை கொண்டுவந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்விடயம் குறித்து உடனடி நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுத்தார்.

எதிர்வரும் திங்கட்கிழமை பாதுகாப்புச் சபை கூட்டத்தில் இவ்விடயம் குறித்து ஆராய்ந்து தீர்வு காணுமாறும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

தங்களின் பூர்வீக நிலமான இரணைதீவில் தம்மை மீளக் குடியமர்த்துமாறு கோரி இரணைதீவிலிருந்து இடம்பெயர்ந்துள்ள மக்கள் பூநகரியில் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தியதுடன் பிரதேச செயலாளர் கிருஷ்ணானந்தராஜாவிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்றையும் கையளித்திருந்தனர். 1992ஆம் ஆண்டு முதல் இரணைதீவு பகுதி கடற்படையினரின் முழுமையான கட்டுப்பாட்டிலிருந்து வருகிறது. இந்த மக்கள் இடம்பெயர்ந்து இரணைமாதா நகரில் வசித்து வருகின்றனர். 240 குடும்பங்கள் இரணைதீவிலிருந்து இடம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றன.

இரணைதீவு மக்கள் தம்மை தமது சொந்த இடத்தில் மீளக் குடியேற்றுமாறு கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ் வரனிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். இதனையடுத்து அப்பகுதிக்கு விஜயம் செய்த இராஜாங்க அமைச்சர் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக அறிந்ததுடன் இவ்விடயம் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு அறிவித்திருந்தார்.

ஆனாலும் இரணைதீவு பகுதியில் மக்களைக் குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்படாததையடுத்து நேற்று முன்தினம் மீண்டும் பிரதமரை நேரில் சந்தித்து இந்த மக்களின் பிரச்சினை தொடர்பில் இராஜாங்க அமைச்சர் விளக்கிக் கூறியுள்ளார். இரணைதீவு பகுதி மக்கள் இடம்பெயர்ந்து வாழ்ந்து வருவதனால் அவர்கள் தமது மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். தற்போது இவர்கள் இரணைமாதா நகரில் வசித்து வருவதனால் இவர்கள் படகு மூலம் இரணைதீவுப் பகுதிக்கு சென்று மீன்பிடிப்பதாயின் 20 லீற்றர் பெற்றோல் செலவிடவேண்டியுள்ளது. அத்துடன் பல்வேறு பிரச்சினைகளுக்கும் இவர்கள் முகம்கொடுத்து வருகின்றனர்.

எனவே இரணைதீவில் இவர்கள் மீளக் குடியேற்றப்பட்டால் அவர்கள இலகுவாக தமது தொழிலை மேற்கொள்ள முடியும். இந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியேறவே விரும்புகின்றனர். எனவே இதற்கான நடவடிக்கையினை எடுக்க வேண்டும் என்று பிரதமரிடம் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கோரியுள்ளார். (இ-3)

## அபிஷேக பெருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து சமய பேரவையின் ஸ்ரீசிவாகம சுந்தரி சமேத ஸ்ரீமத் நடராஜர் கோவில் மாசி மாத நடராஜர் அபிஷேகப் பெருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை இடம்பெறும். (இ)

## ஹோமப்பெருவிழா

(யாழ்ப்பாணம்)

உசன் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய மூல மந்திர ஜபயக்ஞ ஸ்கந்த ஹோமப் பெருவிழா நேற்று முன்தினம் 8 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமானது. நாளை மறுதினம் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு ஸ்கந்த ஹோமம் இடம் பெறும். பிற்பகல் ஒரு மணிக்கு அன்னதானம் வழங்கப்படும். (இ-3)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய யாழ்ப்பாணப் பிரதேச செயலக பிரிவுச் சங்கப் பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சங்கத் தலைவர் ஞா.றோ.ராஜசிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பொ. தயானந்தன், சிறப்பு விருந்தினராக பிரதேச செயலக கணக்காளர் அ.நிர்மல், கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட சங்கத் தலைவர் பொ. கமலநாதன், செயலாளர் க.கதிரமலை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## கௌரவிப்பு விழா

சரவணை கிழக்கு வேலணை பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலைய கௌரவிப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சரவணை பள்ளம்புலம் அருள்மிகு முருகமூர்த்தி திருக்கோவில் நாவலர் மணி மண்டபத்தில் இடம் பெறும்.

இந் நிகழ்வில் நிலைய தலைவர் சொக்கலிங்கம் சிவயோகலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## சர்வதேச மகளிர் தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். விழிப்புலற்றோர் சங்கம் நடத்தும் சர்வதேச மகளிர் தின விழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் கைதடி விநாயகர் மண்டபத்தில் ரெ.மேரி வனிதா தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண சமூக சேவைகள் பணிப்பாளர் வனஜா செல்வரட்ணம், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட சமூக சேவை ஒருங்கிணைப்பாளர் கிருசாந்தி விக்னேஸ்வரன் மற்றும் கௌரவ விருந்தினராக விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர் சந்திரிகா நவரத்தினம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-12)

## விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்த வண்ணார் பண்ணை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு , விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ( A.R.V ) கீழ்வரும் இடங்களில்வைத்து வழங்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

13.3.2017 காலை 9 மணி – மு.ப 11 மணிவரை பிறவுண் றோட் , கலட்டி சந்தி, மு.ப 11-பி.ப 1 மணிவரை வீரகத்தி பிள்ளையார் கோவிலடி சீனியர் ஒழுங்கை ,பி.ப 2.30-பி.ப 4 காமாட்சி பாலர் பாட சாலை,14.03.2017 காலை 9-மு.ப 11 மணிவரை மெதடிஸ்த மிஷன் பாடசாலை கலட்டி இராமநாதன் வீதி,மு.ப 11-பி.ப1.00 சைவ பரிபாலன சபை, நீராவியடி ,பி.ப 2.30-பி.ப4 ஆரோக்கியமாதா கோவிலடி கஸ்தூரியார் வீதி, 15.03.2017 காலை 9-மு.ப 11 கனகசபை வீதி, மு.ப 11-பி.ப 1.00 சிவ குருநாதர் கோவிலடி சிவகுருநாதர் வீதி,பி.ப 2.30-பி.ப 4.00 குமாரசாமி வீதி Gs office,16.03.2017 காலை 9-மு.ப 11 மணிவரை ஆத்தி சூடி சனசமூக நிலையம் , மு.ப11-பி.ப 1 மணிவரை ஞானக் குழந்தை பாலர் பாடசாலை அரசடி வீதி , பி.ப 2.30- பி.ப 4 கலாஜோதி சனசமூக நிலையம் 17. 03. 2017 மு.ப 11 முருக மூர்த்தி வீதி , மு.ப 11-பி.ப 1 மணி வரை கலைவாணி சனசமூக நிலையம் ,பி.ப 2.30-பி.ப 4 மணிவரை தாமரை வீதி, 20. 03.2017 காலை 9-மு.ப 11 மணிவரை பெரிய தம்பிரான் வீதி ,மு.ப 11-1 மணிவரை வள்ளுவன் சனசமூக நிலையம் ,பி.ப 2.30-பி.ப 4 கலைமகள் சனசமூக நிலையம், கே.கே. எஸ்.வீதி, 21.03. 2017 காலை 9-மு.ப 11 பிறவுண் வீதி, 2 ஆம் ஒழுங்கை ,மு.ப 11- பி.ப 1 மணி வரை பிற வுண் வீதி 1 ஆம் ஒழுங்கை , பி.ப 2.30- பி.ப 4 மணி வரை அன்னசத்திரலேன் நாவலர் வீதி, 22. 03.2017 காலை 9 மணி- மு.ப 11 மணி மணிக்கூட்டு ஒழுங்கை ,மு.ப 11-பி.ப ஒரு மணி சபாபதி ஒழுங்கை,பி.ப 2.30 -பி.ப 4 மணிவரை பூநாறி ஒழுங்கை, 23.03. 2017 காலை 9 - மு.ப 11 பலாலி வீதி 4 ஆம் ஒழுங்கை, மு.ப 11 - பி.ப 1 ஐயனார் கோவிலடி, பி.ப 2.30-பி.ப 4 அனைத்துப் பகுதியும் நடமாடும் சேவை என யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.(இ)

## முதலீட்டு வாய்ப்புக்கள் விளக்கக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பங்குச் சந்தையின் சமகாலப்போக்கு மற்றும் முதலீட்டு வாய்ப்புக்கள் விளக்கக்கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை பங்குப்பரிவர்த்தனை கேட்போர் கூடத்தில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் சிரேஷ்ட நிதிப்பகுப்பாய்வாளர் சு.ரகுராம் கருத்துரை வழங்கவுள்ளார். ஆர்வலர்கள் இல.147-2/3 கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள யாழ். கிளையில் முன்பதிவுகளை மேற்கொள்ள முடியும். அல்லது 077 782 2014, 021 222 1455 எனும் இலக்கங்களினூடாகப் பதிவுகளை மேற்கொள்ள முடியும். அனுமதி இலவசம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## சாஸ்திரங்கள்

✦ சூரிய உதயத்திற்கு முன் இடி முழங்குவதும் விழுவதுமானால் அன்றையதினம் நற்காரிய நிமித்தம் பிரயாணம் செய்வதைத் தவிர்க்கவும். இப்படி உண்டாகும். இடியும் அதன் கர்ஜிக்கும் சப்தங்களும் எந்தத் திசையை நோக்கிச் செல்கின்றனவோ அந்தத் திசையில் கெடுதி வரும். -பிருஹக் சம்ஹிதை

✦ உணவு வகைகளில் இறைச்சி, உழுந்து ஆகியவைகள் வசிய மருந்தை கிரகித்து மனித உடலில் ஏற்றி அதை நீண்ட நாளைக்கு நிலை நிறுத்தும் சக்தி பெற்றவைகளாகும். -நச்சர்

# அரசுக்கு கால அவகாசமா ...

க்கமைவான பொறுப்புக்கூறல், மற்றும் நீதிப்பொறிமுறைகளுக்கான அடித்தளமொன்றை இடுவதற்கான சந்தர்ப்பத்தை இழந்து, தெளிவற்ற வாசகங்களுடன் கூடிய கலப்பு நீதிப்பொறிமுறை ஒன்றிற்கு விட்டுக்கொடுப்பு செய்யப்பட்டு 30/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இலங்கையின் கட்டமைப்புகள், உண்மையைக் கண்டறிந்து நீதியை வழங்குவதற்கான அரசியல் விருப்பை கொண்டிராதமையால், இலங்கை அரசாங்கத்தின் உள்ளக நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் அமைகின்ற எந்தவொரு கலப்பு பொறிமுறையும் எமக்கான நீதியைப் பெற்றுத்தராது என நாம் அப்போதே குறிப்பிட்டிருந்தோம். குறிப்பாக, ஐ.நா மனித உரிமை பேரவையின் 30/1 தீர்மானம் நிறைவேற்றபபட்ட பின்பு இலங்கை நீதித்துறையால் வழங்கப்பட்ட குமாரபுரம மற்றும் அமரர் ரவிராஜ் வழக்குகளின் தீர்ப்புகள், இலங்கை நீதித்துறையில் ஆழமாக வேரூன்றியிருக்கின்ற, குறிப்பாக பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்களாக இருக்கும் பட்சத்தில், குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ளும் வழமையை உறுதிப் படுத்துகின்றன. அத்தோடு, உண்மையான பொறுப்புக் கூறலில் அரசியல் விருப்பில்லாத இலங்கையின் கட்டமைப்புகளுள், சில வெளிநாட்டு நீதிபதிகளை மட்டும் சேர்த்துக்கொள்வதன் மூலம் மட்டும் பொறுப்புக் கூறல் நடைபெறுவதற்கான சாத்தியம் இல்லைஎன்பதனை இது வெளிக்காட்டிநின்றது.

ஆயினும், ஐ.நா மனித உரிமை பேரவையின் 30/1 தீர்மானத்தின் மூலம் பொறுப்புக்கூறலிற்காக (இலங்கை அரசினால்) ஒத்துக் கொள்ளப்பட்ட ஆகக்குறைந்த கடப்பாடுகளிலிருந்து கூட தற்போது இலங்கை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக முழுமையாக விலகியுள்ளது. தாமேஇணை அனுசரணையாளர்களாக இருந்து நிறைவேற்றிய, ஐ.நா மனித உரிமைபேரவையின் 30/1 தீர்மானம், குறிப்பாக நிறைவேற்றுப்பந்தி 6 இல் குறிக்கப்பட்ட கடப்பாடுகள் (வெளிநாட்டு நீதிபதிகள், வழக்குத் தொடுநர்கள் உள்ளடக்கப்படவேண்டும் என்றகடப்பாடுகள்), எந்தவகையிலும் தம்மை கட்டுப்படுத்தாது என இலங்கை அரசாங்கம், இந்ததீர்மானம் நிறைவேற்றப்பட்ட மறுநாளிலிருந்தே தொடர்ச்சியாக பல தடவைகள் எண்ணத்திலும் செயற்பாட்டிலும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இந்தகடப்பாடுகள் தம்மைக் கட்டுப்படுத்த மாட்டாதவை என காட்டும் செயற்பாடுகளுக்கு இலங்கை ஜனாதிபதி அவர்களே தலைமை தாங்குகிறார். மிகக்குறைந்தளவானகலப்புபொறிமுறையைபரிந்துரை செய்திருந்த இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்கத்துக்கான கலந்தாய்வுச் செயலணியின் அறிக்கையை நேரடியாகப் பெற்றுக்கொள்வதைக் கூட இலங்கை ஜனாதிபதியும் பிரதமரும் தவிர்த்திருந்தனர் என்பதும் இங்குகுறிப்பிடத்தக்கது. எனவே ஐ.நா மனிதஉரிமைபேரவையின் கூட்டத்தொடரில், 28.02.17 அன்று உரையாற்றிய இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் உரையானது, வெற்று வார்த்தைகளால் புனையப்பட்டதும், இலங்கை அரசாங்கத்தின் உண்மையான நிலைப்பாட்டுடன் எந்த விததொடர்பற்றதென்பதோடு, அடிப்படையில் அனைவரையும் பிழையாக வழிநடத்துகின்ற ஒன்றாகும்.

இலங்கை அரசாங்கமானது, 30/1 தீர்மானத்தின் 06ஆம் செயற்பாட்டுபந்தியில் குறிப்பிடப்பட்டவற்றை மட்டுமல்லாது, அத்தீர்மானத்திலிலுள்ள வேறு பல கடப்பாடுகளையும் நிறைவேற்றத் தவறியுள்ளது உதாரணமாக:-

1) கணிசமான எண்ணிக்கையான அரசியல் கைதிகள் இன்னமும் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். விடுவிக்கப்பட்ட சிலர் கூட இலங்கை ஆயுதப்படைகளால் நிர்வகிக்கப்படும், ஈவிரக்கமற்ற சித்திரவதைகளுடன் கூடிய மனிதத்துவமற்ற தரம் தாழ்த்தும் கொடூரமான புனர்வாழ்வு முகாம்களுக்கென அனுப்பப்படுகின்றனர். இவற்றிலிருந்தெல்லாம் விடுவிக்கப்பட்டவர்களும் கூட கடுமையான கண்காணிப்பு மற்றும் தொடர்ச்சியான தொந்தரவுகளிற்கு உட்படுத்தப்படுகின்றனர்.

2) இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் 1/5 நிலங்கள் கூட இன்னும் விடுவிக்கப்படவில்லை. சிலகாணிகள் (ஆக்கிரமிப்பிலிருந்து) விடுவிக்கப்பட்டிருக்கின்ற போதிலும், அப்பகுதியிலிருந்த இராணுவம், அருகிலிருக்கும் நிலப்பகுதிக்கு குடிபெயர்ந்துள்ளதேதவிர, இராணுவமயாமக்கலை நீக்கி, முழுமையான மீள்குடியமர்வுக்கான ஒரு சூழலை உருவாக்கவில்லை. இராணுவநீக்கம் இல்லாதகாணிவிடுவிப்புகள், இயல்புநிலை உருவாக்கத்துக்கு முட்டுக்கட்டையாகவே தொடர்ந்து இருக்கின்றன. இதை விட, பெருமளவிலான நிலப்பகுதிகள் தற்போதும் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என்பதோடு, வெவ்வேறு முகமூடிகளோடு, தற்போதைய அரசின் கீழும் இலங்கை இராணுவத்தால் காணி அபகரிப்பு தொடர்கிறது. வடக்குகிழக்கில் இராணுவக் குறைப்பு செய்யப்படவில்லை என இலங்கை அரசாங்கம் தானே ஒத்துக் கொண்டு அறிவித்துமுள்ளது.

3) காணாமல் போனோருக்கான அலுவலகம், தனது அடிப்படையில் பிழையான நடைமுறைகளுடனேனும், நடைமுறைச் செயற்பாட்டிற்கு வராது, இன்னமும் எழுத்துவடிவிலேயே இருக்கிறது.

4) வடக்குகிழக்குமக்களின் பொதுவாழ்க்கை மீதான இராணுவமற்றும் பொலிஸ் கண்காணிப்பு, இந்தஅரசாங்கத்திலும் தொடர்கிறது ஆதலால், தற்போதைய 'இயல்புநிலை' எனும் தோற்றப்பாட்டை பயன்படுத்தி செயற்பாடுகளை முன்னெடுக்கும் செயற்பாட்டாளர்கள், தற்போதைய சூழ்நிலை எதிர் காலத்தில் மோச மடையும் பட்சத்தில், அரசாங்கத்தினால் தாம் இலக்குவைக்கப்படக்கூடும் என அஞ்சுகின்றனர். 2001-2004 சமாதான செயன்முறைகள் குலைவடைந்த போதும் செயற்பாட்டாளர்கள் இவ்வாறாகவே குறிவைத்துக் கொல்லப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசு 'உண்மையைக் கண்டறிதலை' முன்னிறுத்தி குற்றவியல் நீதியை, அல்லது நீதியை புறந்தள்ள முயற்சிப்பது தொடர்பில் நாம் மிகுந்த கரிசனை கொண்டுள்ளோம். ஆனால் இப்போது இவை இரண்டையுமே பின்தள்ளி அரசியலமைப்பாக்கத்தை முன்னிறுத்தி நீதி, உண்மையைக் கண்டறிதல் ஆகிய இரண்டையும் பிற்போடவேண்டும் என அரசாங்கம் கூறுகின்றது. புதியஅரசியலமைப்பு உருவாக்க செயன்முறையை முன்னிறுத்தி உண்மையையும், நீதியையும், பொறுப்புக் கூறலையும் புறந்தள்ளுதல் காலத்தை இழுத்தடிக்கும் செயலாகநாம் கருதுகிறோம். நீதியும் சமாதானமும் (நிரந்தரத் தீர்வும்), இரு வேறான தூண்கள் அல்ல. அவை இரண்டுமே ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டது. சமாதானத்தை முன்னிறுத்தி நீதியைபுறந்தள்ளல் அரசியலமைப்பாக்க முயற்சியின் நேர்மைத்தன்மையை கேள்விக்குட்படுத்துகின்றது. சமாதானத்தையும், நீதியையும் இருதுருவங்களாக அரசாங்கம் அணுகுவது அபாயகரமானதும் இவ்விரண்டிலும் அரசாங்கத்திற்கு அரசியல் விருப்பமில்லை என்பதனை வெளிப்படுத்திநிற்கின்றது. எது எவ்வாறாயிருப்பினும் அரசியலமைப்புமுயற்சிகளில் பெரிதளவில் முன்னேற்றங்கள் இல்லை என்பதே உண்மை. அரசியலமைப்பாக்கசபையின் வழிகாட்டும் குழு தன்னுடைய இடைக்கால அறிக்கையை இன்னும் சமர்ப்பிக்கவில்லை. இவ்வறிக்கையை அரசாங்கத்தின் ஓர் பகுதியினரே தடுத்துவைத்துள்ளனர். இது புதிய அரசியல் திட்டசெயன்முறையில் இடையூறு ஏற்பட்டு விட்டதை சுட்டிநிற்கின்றது. புதிய அரசியலமைப்புத்திட்டம் தொடர்பிலான உரையாடல் இலங்கையின் ஒற்றையாட்சிமுறையை கேள்விக் குட்படுத்தவில்லை. முன்னரைப் போல சிங்கள - பௌத்த மேலாதிக்கவாதம் தொடர்ந்தும் பேணப்படும் என்றுபொது வெளியில் தெற்கின் அரசியல்வாதிகள் உறுதிப்படுத்துகிறார்கள். தமிழ் மக்கள் மீது புதிய அரசியல் திட்டம் எனும் வெற்று வெறிதான நம்பிக்கைக்குப் பதிலாக பொறுப்புக் கூறலை கைவிடுமாறு அழுத்தம் பிரயோகிக்கப்படுகின்றது. இறுதியில் அரசியல் தீர்வும் இல்லை நீதியும் இல்லை எனும் நிலைப்பாட்டிற்கே இது இட்டுச் செல்லும்.

ஐ.நா மனிதஉரிமை பேரவையில் கொண்டுவரப்பட்டதீர்மானம் 30/1 என்பது இலங்கையின் மீதான சர்வதேச சமூகத்தின் பார்வையை திசைதிருப்புவதற்காக என்பது மேற்சொன்னவற்றில் இருந்து தெளிவாகின்றது. கடுமையான நடவடிக்கையில் இருந்து இலங்கையை பாதுகாத்துக் கொள்வதற்கே இத்தீர்மானம் கொண்டு வரப்பட்டதாக தற்போது சிரேஸ்ட அமைச்சர்கள் விளக்கம் கொடுக்கின்றனர். எனவே அரசாங்கத்தைப் பொறுத்தவரை மனித உரிமைப் பேரவைத் தீர்மானம் அவர்களின் சாணக்கியமான வெளியுறவு கொள்கை உத்தியின் ஓர் அங்கமே அன்றிவேறொன்றுமில்லை.

ஐ.நா மனித உரிமைபேரவையில் கொண்டுவரப்பட்டதீர்மானம் 30/1 க்கு பின்னரான இலங்கை அரசின் நடவடிக்கைகள் ஐ.நா மனித உரிமை பேரவையின் நம்பகத்தமையை கேள்விக்குட்படுத்துகின்றது. கலப்பு நீதிமன்ற முறை இலங்கையின் இறையாண்மையை பாதிக்குமென்று கூறி இலங்கை அரசு தனது வாக்குறுதியை நிறைவேற்றாது தட்டிக் கழித்து வந்திருக்கின்றது என்பது ஐ.நா செயன்முறையோடு நாம் ஒத்துழைத்துப் போகவிரும்புகிறோம் என்ற அரசின் பொய்யான வேடத்தை அம்பலப்படுத்துகின்றது. அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்க முன்னர் ஐ.நா மனித உரிமை பேரவையில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில்,எவ்வளவு தூரம்தாக்கத்தை செலுத்தியுள்ளது என்பதை கணிக்க வேண்டியகடப்பாடு ஐ.நா மனித உரிமை பேரவைக்கும் அதன் உறுப்பு நாடுகளுக்கும் உண்டு. தமிழ் மக்களின் கணிப்பின்படி இலங்கை அரசு பாதிக்கப்பட்ட மக்கள் நலன் சார்ந்து செயற்பட அரசியல் விருப்பற்று அதே நேரத்தில் சர்வதேசதளத்தில் அவ்வரசியல் விருப்பு உள்ளது போல் காட்டிக் கொள்ள முயல்கின்றது. மீண்டும் அதேதீர்மானத்தை நிறைவேற்ற இலங்கை அரசாங்கத்திற்கு நேர அவகாசம் வழங்கக் கொண்டு வரப்படும் தீர்மானமானது ஏமாற்றுத் தன்மையானது. ஐ.நா மனித உரிமை பேரவையில் கொண்டு வரப்பட்டதீர்மானத்தை நிறை வேற்றமாட்டேன் என ஓர் அரசு தெளிவாக சொல்லுமிடத்து அவர்களுக்கு அதே தீர்மானத்தை நிறைவேற்ற கால அவகாசம் வழங்குவது ஐ.நா உரிமைபேரவையின் நம்பகத்தன்மையை கேள்விக்குட் படுத்தும். அவ்வாறுகால அவாசகம் வழங்குதல் நீதிக்கான தேடலை நீர்த்துப் போகச் செய்யும். வடக்கு கிழக்கில் வாழுகின்ற தமிழ் மக்கள் சுயாதீனமான சர்வதே சவிசாரணையைவலுயுறுத்தி வந்துள்ளனர், தொடர்ந்து வலியுறுத்துகின்றனர். இலங்கை அரசு கலப்பு நீதிமன்ற முறையை நிராகரித்தமையானது உள்நாட்டில் தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பதை இன்னும் சாத்தியமற்றதாக்கின்றது. தமிழ் மக்களுக்கு உண்மையான நீதிகிடைக்க வேண்டுமெனில் இலங்கை அரசு இழைத்த பாரியகுற்றங்கள் தொடர்பில் விசாரிக்க தனியான சர்வதேச தீர்ப்பாயம் அமைக்கப்பட வேண்டும். அல்லது சர்வதேசகுற்றவியல் நீதிமன்றில் விசாரிக்கப்படவேண்டும். இது தொடர்பில் முன்னெடுப்புக்களை முடுக்கிவிடுதல் ஐ.நா அமைப்பின் கடமையாகும். அதுவரைக்கும் ஐ.நா மனிதஉரிமை மீறல்களை கண்காணிக்க மனித உரிமை செயலாளர் நாயகம் அவர்களின் அலுவலகங்கள் வடக்கு -கிழக்கில் உருவாக்குதல் அவசியமாகின்றது.

இலங்கைஅரசு தனது வாக்குறுதிகளை நிறைவேற்றஅதன் மீது கடுமையானஅழுத்தமே இன்றையதேவை. அழுத்தத்தைக் குறைப்பது அரசுதனது வாக்குறுதிகளைத் தொடர்ந்து செயலிழக்கவைக்க ஊக்குவிக்கும். அவ்வாறான நேர்மையான சர்வதேச அழுத்தம் தான் வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் மீதான உரிமைமீறலைக் குறைப்பதற்கு சர்வதேச சமூகம் எடுக்கக் கூடிய குறைந்தபட்ச நடவடிக்கையாகும். இக்கோரிக்கை சர்வதேச சமூகம் இலங்கை தொடர்பில், இங்கு நிலவும் மனித உரிமை சூழல தொடர்பான அரசியல் கணிப்பிற்கு முரண்பட்டதாக இருக்கலாம். ஆனால் வடக்குகிழக்கில் வாழும் மக்கள் அனுபவ வாயிலாக கண்டு கொண்ட, நாளாந்தம் அனுபவிக்கும் யதார்த்தத்தையே நாம் இவ்விண்ணப்பத்தில் வெளிப்படுத்துகின்றோம். இலங்கை அரசு ஒரு போதும் பொறுப்புக்கூறல் தொடர்பில் நம்பகத்தன்மையான பொறிமுறைகளை வழங்காது என்பது மீண்டும் உறுதியாகியுள்ள நிலையில் தமிழ் மக்களுக்கு நீதிகிடைப்பதாயின் இவ்விண்ணப்பத்தில் சொல்லப்பட்டுள்ளவையே தீர்வாகும என நாம் கருதுகிறோம்.

என்பதாக இந்த மகயரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இம்மகயரில் ஒப்பமிடும் சிவில் சமூக அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள் வருமாறு.

**மக்கள் அமைப்புகள்**

தமிழ் மக்கள் பேரவை, தமிழ் சிவில் சமூகம், தமிழ் சட்டத்தரணிகள் சங்கம், யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம், யாழ்ப்பாணம் பல்கலைக் கழக விஞ்ஞானபீட ஆசிரியர் சங்கம், யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம், யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர் சங்கம், வலிந்து காணாமற் போனவர்களின் குடும்பங்கள் சங்கம், மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் மனித உரிமை பாதுகாப்புக்கும் மேம்பாட்டுக்குமான நிலையம் திருகோணமலை இலங்கை ஆசிரியர் சங்கம், "இணையம் " மட்டக்களப்பு தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஒன்றியம் நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக் குழு யாழ் மறை மாவட்டம் யாழ் பொருளியலாளர் சங்கம் இந்து இளைஞர் பேரவை மட்டக்களப்பு நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழு யாழ்ப்பாணம், மன்னார் பிரஜைகள் குழு, மீனவர சங்கங்களின் சமாசம் முல்லைத் தீவு கிராமிய உழைப்பாளர் சங்கம் யாழ்ப்பாணம், சுயம் மகளிர் அமையம், மாற்றத்துக்கான நிலையம் மட்டக்களப்பு கத்தோலிக்க இளைஞர் சம்மேளனம் யாழ்ப்பாணம்

**அரசியல் கட்சிகள்**

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்), தமிழ் தேசிய மக்கள் முன்னணி தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, நீதியரசரும் வட மாகாண முதலமைச்சருமான சி.வி. விக்னேஸ்வரன் (இணைத் தலைவர் தமிழ் மக்கள் பேரவை), சிவசக்தி ஆனந்தன் (நாடாளுமன்ற உறுப்பினர்), செல்வம் அடைக்கலநாதன் (நாடாளுமன்ற உறுப்பினர்), த.சித்தார்த்தன் (நாடாளுமன்ற உறுப்பினர்), க.சுரேஸ் பிரேமச்சந்திரன் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் - செயலாளர் ஈ.பி.ஆர்.எல்.எப்), கஜேந்திரகுமார் பொன்னம்பலம் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், தலைவர் - த.தே.ம.மு), பேராசிரியர். சி.க.சிற்றம்பலம் (வரலாற்றுத்துறை யாழ்.பல்கலைக்கழகம் / சிரேஷ்ட உப தலைவர் தமிழரசுக்கட்சி), கோடீஸ்வரன் (நாடாளுமன்ற உறுப்பினர்), பொ.ஐங்கரநேசன் - விவசாய அமைச்சர் வடமாகாண சபை, பா.கஜதீபன் (வட மாகாணசபை உறுப்பினர்), வித்தன் கனகரத்தினம் (வட மாகாணசபை உறுபபினர்), க.சர்வேஸ்வரன் (வட மாகாணசபை உறுப்பினர்), க.சிவநேசன் (வடமாகாணசபை உறுப்பினர்), ஆ.புவனேஸ்வரன் (வடமாகாணசபை உறுப்பினர்), செ.மயூரன் (வடமாகாணசபை உறுப்பினர்), க.சிவாஜிலிங்கம் (வட மாகாணசபை உறுப்பினர்), வைத்திய கலாநிதி ஞா.குணசீலன் (வடமாகாணசபை உறுப்பினர்), சு.பசுபதிப்பிள்ளை (வடமாகாணசபை உறுப்பினர்), து.ரவிகரன் (வடமாகாணசபை உறுப்பினர்), ரா.துரைரட்ணம் (கிழக்கு மாகாணசபை உறுப்பினர்), திருமதி பத்மினி சிதம்பரநாதன் (முன்னாள நாடாளுமன்ற உறுப்பினர்), செ.கஜேந்திரன் (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்), வைத்திய கலாநிதி சு.பிறேமகிருஷ்ணா (உணர்வழியியல் சிகிச்சை நியுணர்), வைத்திய கலாநிதி பூ.லக்ஸ்மன் (இருதய சிகிச்சை நிபுணர், தமிழ் மக்கள் பேரவை இணைத் தலைவர்), வைத்திய கலாநிதி க.சுரேஸ்குமார் ( பெண் நோயியல் மகபேற்று வைத்திய நிபுணர்), வைத்திய கலாநிதி க.இளங்கோஞானியர், வைத்திய கலாநிதி சி.சிவன்சுதன் (பொது வைத்திய நிபுணர்), வைத்திய கலாநிதி சி.குமரவேள், வைத்திய கலாநிதி எஸ்.சிவபாலன், வைத்திய கலாநிதி தி.பாலமுருகன், வைத்திய கலாநிதி சி.யமுனாநந்தா, பேராசிரியர் வி.பி.சிவநாதன் (பொருளியல் துறை யாழ் பல்கலைக்கழகம்), கலாநிதி ஆ. சரவணபவன் (வர்த்தக முகாமைத்துவ பீடம் யாழ் பல்கலைக் கழகம்), கலாநிதி வி.சிறிதரன் (வர்த்தக முகாமைத்துவ பீடம் யாழ் பல்கலைக்கழகம்), கு.குருபரன் (தலைவர் சட்டத்துறை யாழ்.பல்கலைக்கழகம்),

4ஆம் பக்கம் பார்க்க)

## திசை மாறி பயணித்த இரு மீனவர்கள் கைது

(கரணவாய்)

பருத்தித்துறையில் இருந்து மீன்பிடிப்பதற்காக கடலுக்குச் சென்ற இரண்டு மீனவர்கள் திசை மாறிப் போன நிலையில் இந்திய கடலோர காவல் படையினரினால் கைது செய்யப்பட்டுள்ளதாக உறவினர்களிற்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

வியாபாரிமூலைப் பகுதியில் உள்ள மயிலிட்டி துறையில் இருந்து நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை தொழிலுக்குச் சென்ற ஐந்து பிள்ளைகளின் தந்தையான அந்தோனிப்பிள்ளை ஸ்ரீராஜ் (வயது 43) மற்றும் சாந்த வடிவேல் ஜசாந்தன் (வயது 18) ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளவர்களாவர்

தொழிலுக்குச் சென்ற அவர்களின் படகில் எரிபொருள் தீர்ந்த நிலையில் படகு கடல் நீரோட்டத்தில் இந்தியக் கரையை அடைந்ததையடுத்து அடுத்து நேற்றுக் காலை இந்திய கடலோர காவல் படையினரினால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

தாம் கைது செய்யப்பட்ட விடயத்தை அங்கிருந்து அவர்களே உறவினர்களிற்கு தொலைபேசி வழியாக தெரியப்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து கடற்றொழிலாளர் சங்கத்தினால் நீரியல் வளத் திணைக்களத்துக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. (செ-60)

## ஜெனிவா நோக்கிய ஒன்றுகூடல் நாளை

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நீள்விழிபெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் "வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் ஜெனிவா நோக்கிய குரல்" என்ற தொனிப்பொருளில் நாளை சனிக்கிழமை காலை 09 மணிக்கு கரைச்சி பிரதேச சபையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் அமைப்பின் தலைவி திருமதி இராசேந்திரம் சூரியகுமாரி தலைமையில் கருத்தமர்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் கலந்துரையாடி அதனை அறிக்கை இட்டு ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பி வைக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து மாதர் சங்க நிர்வாகிகள், பெண்கள் சமூக அமைப்புக்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் உட்பட பெண்கள் நலனில் அக்கறை கொண்ட அனைவரும் ஒன்றாக சேர்ந்து இந்த கருத்தமர்விற்கு வலுச்சேர்க்கும் வகையில் அணிதிரளுமாறு ஏற்பாட்டாளர்களால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (செ-15)

# ஐ.நா தீர்மானத்தை நிறைவேற்றக் கோரிய பத்திரிகை ஆசிரியர் பணி நீக்கப்பட்டார்

## எதிர்ப்புத் தெரிவித்து நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஜெனிவா தீர்மானத்தை நிறைவேற்றுமாறும், முன்னைய ஆட்சியில் இடம்பெற்ற ஊழல்கள் மற்றும் படுகொலைகள் தொடர்பிலான உண்மையை வெளிப்படுத்துமாறும் கோரிக்கை விடுத்தமைக்கு பழி வாங்கும் நோக்கிலேயே தாம் உள்ளிட்டவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக ஹிருதின பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் விமலநாத் வீரரத்ன தெரிவித்துள்ளார்.

தாம் உள்ளிட்ட ஒரு குழு பணி நீக்கம் செய்யப்பட்டதன் பின்னணியில் அரசியல் காரணங்கள் காணப்படுவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

தென்பகுதி ஊடகமான ஹிருதின பத்திரிகையின் ஆசிரியர் உள்ளிட்ட ஏழு பேர் கடந்த 28ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் முன்னறிவித்தல் இன்றி பணிநீக்கம் செய்யப்பட்டனர்.

இந்நிலையில் இந்த நடவடிக்கைக்கு எதிராக விமலநாத் வீரரத்ன இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, தொழிற் திணைக்களம் மற்றும் கல்கிஸ்ஸ பொலிஸ் ஆகியவற்றில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்நிலையில் நேற்றைய தினம் விமலநாத் வீரரத்ன உள்ளிட்ட ஏழு பேர் பணிநீக்கம் செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், "எங்களை வெளியில் அனுப்புவதற்கு எவ்வித காரணமும் இல்லை. எழுதுவதற்கும்கருத்துவெளியிடுவதற்கும் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகவே இதனை பார்க்கின்றோம்.

நாங்கள் உண்மையான நல்லாட்சி ஒன்றினை எதிர்ப்பார்த்தோம். பொய்யான நல்லாட்சி ஒன்றிற்கு உதவுமாறு எமக்கு அழைப்பு விடுத்தார்கள். எனினும் நாம் அதற்கு எதிர்ப்பினை வெளியிட்டோம்.

அதனைவிட புதிய அரசியல் யாப்பு பணிகள் தொடர்பிலும், ஜெனிவா பிரேரணையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றுமாறும், முன்னைய ஆட்சியில் நடைபெற்ற ஊழல் மோசடிகளை வெளிப்படுத்துமாறும், கடந்த ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளுமாறும், தொடர்ச்சியாக பத்திரிகை ஊடாக எழுதினோம். இதனால் எமக்கும் நிறுவனத்தின் முகாமைத்துவத்திற்கும் இடையில் பிரச்சினைகள் எழுந்தன. அதன் பிரதிபலனாகவே நாங்கள் வெளியேற்றப்பட்டுள்ளோம் என்றார்.

இதேவேளை இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய ஊழல் எதிர்ப்பு குரலின் ஒருங்கிணைப்பாளர் வசந்த சமரசிங்க, நாட்டில் சட்டம் பொதுமக்களுக்காகவா அல்லது அரசாங்கத்திற்கு சார்பாகவா செயற்படுகிறது என கேள்வி எழுப்பினார்.

வசந்த சமரசிங்க மேலும் கூறுகையில், "இந்த நாட்டில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என நாம் அரசாங்கத்திடம் கேட்க விரும்புகின்றோம். ரவி கருணாநாயக்க, ரணில் விக்ரமசிங்கவின் பணத்திற்காகவா அல்லது சாதாரண மனிதர்களின் உரிமைகளுக்காகவா சட்டம் செயற்படுகின்றது என கேட்க விரும்புகின்றோம். ஒரே நாளில் பத்திரிகை ஒன்றின் பிரதம ஆசிரியர் உள்ளிட்ட பலரை வெளியேற்றி இருக்கின்றார்கள். ஆகவே அவர்களுக்கு நட்டஈட்டை வழாங்குவதோடு பணியில் இணைத்துக்கொள்ள வேண்டும் என்றார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், நிறுவனமொன்று ஊடகவியலாளர் ஒருவரை பணிநீக்கம் செய்தமைக்கு எதிராக ஊடகத்துறை அமைச்சர் முன்நிற்க வேண்டுமென வலியுறுத்தினார்.

தொடர்ந்து பேசிய ஜோசப் ஸ்டாலின் "இன்று ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாகியுள்ளது.

ஊடகவியலாளர் ஒருவரை நிறுவனமொன்று பணி நீக்கம் செய்ததும் அதற்கு எதிராக ஊடகத்துறை அமைச்சர் முன்நிற்க வேண்டும். அமைச்சர் கயந்த கருணாதிலக அமைதியாக இருக்கின்றார். அமைச்சர் பொறுப்பற்று நடப்பதையே இது காட்டி நிற்கின்றது என தனது உரையில் குற்றஞ்சாட்டியிருந்தார். (செ-11)

## வர்த்தகர் மீது தாக்குதல்

(கரணவாய்)

கடையில் இருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த வர்த்தகர் மீது மூவர் கொண்ட குழு கடும் தாக்குதல் மேற்கொண்டதில் பாதிக்கப்பட்ட வர்த்தகர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றிரவு 8.30 மணியளவில் மந்திகை துறையாமூலைப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதேபகுதியைச் சேர்ந்த எஸ். செந்தில்குமரன் (வயது-32) என்பவரே தாக்குதலுக்குள்ளானவராவார்.

மந்திகைப் பகுதியில் உள்ள தமது வர்த்தக நிலையத்தில் இருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த அவரை துறையாமூலைப் பகுதியில் வைத்து வழிமறித்து இனம் தெரியாத மூவர் அவர் மீது தாக்குதல் மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் பருத்தித்துறை பொலிஸிலும் இது தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (செ-60)

## 150 கிலோ கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மிருசுவில் பகுதியில் நேற்றிரவு பொலிஸார் மேற்கொண்ட திடீர் தேடுதல் வேட்டையில் 150 கிலோ கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன. (செ)

## பெயர் வளைவு திறப்பு விழா

திரு. திருமதி நாகலிங்கம் அருணாசலம்-கமலாதேவி ஆகியோரின் நிதியுதவியால் அமைக்கப்பட்ட அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தின் பெயர் வளைவு இன்று காலை 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. (செ)

# வடக்கு கல்வித் துறையில் முறைகேடு எதுவுமில்லை

## உறுப்பினர்களின் குற்றச்சாட்டை கல்வி அமைச்சர் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தின் கல்வித் துறையில் முறையற்ற நியமனங்கள், பதவி உயர்வுகள், வழங்கப்படுவதாக உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை நிராகரித்துள்ள வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா,

மாணவர்களின் நலன்களை மட்டும் நோக்காக கொண்டே இவ்வாறான நியமனங்கள், பதவி உயர்வுகள் வழங்கப்படுவதாகவும் தெரவித்துள்ளார். மேலும் இவை தொடர்பான விரிவான பதில்களை, மாகாண சபையின் அடுத்த அமர்வில் அல்லது கல்வி ஆலோசனை குழுக்கூட்டத்தில் கூறுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் மாதாந்த அமர்வு நேற்றைய தினம் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன்போது வடக்கின் கல்வி நிர்வாகத்தில் முறையற்ற நியமனங்கள், பதவி உயர்வுகள் இடம்பெறுகின்றன என்ற நீண்ட ஒரு குற்றச்சாட்டை உறுப்பினர்களான ஆர்.இந்திரராஜா, க.சர்வேஸ்வரன் ஆகியோர் முன்வைத்தனர்.

இதேபோன்று ஏனைய சில உறுப்பினர்களும் மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்திருந்தனர். இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் போதே கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது பதிலில்,

வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் முறையற்ற அதிபர் நியமனங்கள் வழங்கப்படுவதாக உறுப்பினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். சில பாடசாலைகளுக்கு மாணவர்களின் நலன்களை கருத்திற்கொண்டு பொருத்த மானவர்களை நியமனம் செய்ய வேண்டிய பொறுப்பு கல்வி அமைச்சுக்கு உண்டு.

அதிபர்கள் சிலருக்கு கல்வித் தகைமை இருந்தாலும், குறிப்பிட்ட பாடசாலையை கொண்டு நடத்துவதற்கு பொருத்தமானவர்களாக இருக்க வேண்டும். அதனால் தான் கல்வி தகைமை இருந்தாலும் அதனை மட்டுமே தகுதியாக கொண்டு எம்மால் நியமனம் வழங்கப்படுவதில்லை. மேலும் மூடிய சில பாடசாலைகளை மீண்டும் திறந்ததற்கு காரணம், அதன் மூலம் அதிபர் நியமனங்களை ஒருசிலருக்கு வழங்க முடியும் என்பதுதான். பாடசாலைகள் தரமுயர்த்தப்படுவது மாணவர்களின் நலன்களுக்காகதான்.

அதனை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். கல்வி அமைச்சு யாருடைய நலன்களுக்காகவும் செயற்பட போவதில்லை. உறுப்பினர்கள் பல குற்றச்சாட்டுக்களை கல்வி அமைச்சு மீது முன்வைத்துள்ளனர்.

எனது செயலாளர் தற்போது பயிற்சி ஒன்றுக்காக வெளிநாடு சென்றுள்ள நிலையில் மேற்படி குற்றச்சாட்டுக்களுக்கு தகுந்த பதிலை அடுத்த அமர்வில் அல்லது கல்வி ஆலோசனை குழுக் கூட்டத்தில் வழங்குவேன் என கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (செ-4)

## 85 தமிழக மீனவர்...

கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இதில் பிரிட்ஜோ என்ற 21 வயது மீனவர் குண்டுபாய்ந்து பரிதாபமாக உயிரிழந்தார். சரோன் என்ற இன்னொரு மீனவர் படுகாயம் அடைந்தார்.

இதனால் தமிழகம் முழுவதும் மீனவர்கள் இடையே கடும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. பல்வேறு இடங்களில் இலங்கை அரசை கண்டித்து மீனவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அரசியல் கட்சிகளும் போராட்டத்தில் குதித்துள்ளன.

தமிழக மீனவர் சுட்டுக்கொல்லப்பட்டதற்கு, இந்திய அரசும் இலங்கைக்கு கண்டனம் தெரிவித்தது.

அதேநேரம், தங்களுடைய கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தவில்லை என்று இலங்கை அரசு தொடர்ந்து மறுத்து வருகிறது. இது தொடர்பாக விசாரணை நடத்துவதற்கும் இலங்கை அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழக மீனவர் சுட்டுக்கொல்லப்பட்ட விவகாரம் விஸ்வரூபம் எடுத்திருப்பதால் பதற்றத்தை தணிப்பதற்கு இந்திய அரசும் இலங்கை அரசும் உடனடியாக நடவடிக்கையில் இறங்கின. இதைத் தொடர்ந்து கொழும்பு நகரில் நேற்று இரு நாடுகளின் உயர்மட்ட அதிகாரிகள் அளவில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

அப்போது இரு தரப்பிலும் பரஸ்பரம் தங்களது சிறைகளில் உள்ள மீனவர்களை விடுதலை செய்வதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டது.

அதன்படி இலங்கை சிறையில் அடைக்கப்பட்டு இருக்கும் தமிழக மீனவர்கள் 85 பேர் விடுதலை செய்யப்படுவார்கள்.

இதேபோல் இந்திய கடற்பகுதிக்குள் நுழைந்து மீன்பிடித்ததாக கைதாகி இந்திய சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்கள் 19 பேரை இந்திய அரசு விடுதலை செய்யும்.

"தற்போது உருவாகியுள்ள பதற்றத்தை தணிப்பதற்காக இந்த தமிழக மீனவர்கள் எப்போது இலங்கை சிறைகளில் இருந்து விடுதலை ஆவார்கள் என்பது உடனடியாக தெரிய வரவில்லை.

எனினும் இவர்கள் ஓரிரு நாட்களில் விடுதலை செய்யப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-12)

யாழ்ப்பாண பொதுநூலகம்



## இம்மாத இறுதியில்...

விராஜ் காரியவசம் நேற்று அறிவித்துள்ளார்.

பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

2016 ஆம் ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சை கடந்த டிசம்பர் மாதம் 6 ஆம் திகதியிலிருந்து 17 ஆம் திகதி வரை 5 ஆயிரத்து 669 நிலையங்களில் நடைபெற்றது.

கடந்த முறை சாதாரண தரப் பரீட்சைக்காக சுமார் 7 இலட்சம் பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர். (செ-11)

## பாலத்துடன் மோ...

டுள்ளதாக ஓமந்தை பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை அதிகாலை ஏ9 வீதி ஓமந்தை மகா வித்தியாலத்துக்கு அண்மையில் இடம் பெற்றுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவது,

முச்சக்கரவண்டியில் பயணித்த கொழும்பு மோதரையைச் சேர்ந்த கந்தையா மாரியாயி (வயது 56) என்ற குடும்பப் பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், அவரின் மகளின் பிள்ளைகளான எஸ். டிலானி (வயது 02), எஸ்.டெனுசன் (வயது 07) ஆகிய இரு சிறுவர்களும் படுகாயமடைந்து வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, முச்சக்கரவண்டியில் பயணித்த சாரதியும், காயமடைந்த இரு சிறுவர்களின் தாயாரும் சிறு காயங்களுடன் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

விபத்து தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு சென்ற ஓமந்தைப் பொலிஸார் விபத்துக்குள்ளான முச்சக்கரவண்டியை மீட்டு பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருவதாக தெரிவித்துள்ளனர்(செ-15-250)

## விழித்துக் கொள்...

போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளமை உட்பட 2015ல் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு இலங்கை அரசாங்கம் இணை அனுசரணை வழங்கிய போது அதனால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளமை தொடர்பாக தற்போது ஐக்கிய நாடுகள் சபையால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கம் காலத்தை இழுத்தடிப்பதானது நாட்டில் நிலையான அமைதிக்கு அச்சுறுத்தலாக எழுந்துள்ளதாக இலங்கை அரசாங்கத்தை இந்த அறிக்கை எச்சரித்துள்ளது.

உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து எட்டு ஆண்டுகள் கடந்த நிலையிலும் கூட, வன்முறையை அதிகளவில் பிரயோகித்தல், சித்திரவதை, பலவந்தக் கைதுகள் போன்றன தற்போதும் இலங்கையில் தொடர்வதாகவும் தற்போது ஐக்கிய நாடுகள் சபையால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை தற்போதைய ஜனாதிபதி ஆட்சிக்கு வரும்போது நாட்டில் சட்ட ஆட்சியை ஏற்படுத்துவேன் எனவும் அனைத்துலக சமூகத்தை உள்வாங்குவதுடன் சிறுபான்மைத் தமிழ் மக்களுடன் நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கான நகர்வுகளை முன்னெடுப்பேன் எனவும் வாக்குறுதி வழங்கியிருந்தார்.

அத்துடன் 2015ல் இடம்பெற்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டவாறு அனைத்துலக சமூகத்தின் பங்களிப்புடன் நீதிச் சேவையை மேற்கொள்வதாகவும் இலங்கை உறுதி வழங்கியிருந்தமையானது அதியுச்ச நம்பிக்கையை வழங்கியது.

எனினும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்ட கலப்பு நீதிமன்றம் ஒன்றை அமைத்தல், வடக்கு - கிழக்கில் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை மீண்டும் தமிழ் மக்களிடம் கையளிப்பதற்கான நகர்வுகள் போன்ற மிக முக்கிய விடயங்களில் எவ்வித முன்னேற்றமும் தற்போதைய இலங்கை அரசால் ஏற்படவில்லை.

தமது நிலங்களைத் தம்மிடம் மீளக்கையளிக்குமாறு கோரி வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் இடம்பெயர்ந்த தமிழ் மக்களால் அரசாங்கத்தின் பிரதேச செயலகங்களின் முன்னால் தொடர் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட வேளையிலேயே ஐக்கிய நாடுகள் சபையால் அறிக்கை வெளியிடப்பட்டது.

மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் இருப்பை மீண்டும் நிலைப்படுத்திக் கொள்வதற்காக ஆதரவுகளை வழங்கி வரும் சிங்கள தேசியவாதிகளின் எதிர்ப்பைச் சம்பாதிப்பதைத் தவிர்ப்பதற்காகவே, இலங்கையின் தற்போதைய அரசாங்கமானது நல்லிணக்க முயற்சிகளில் விரைவான தீர்மானங்களை எடுக்க முடியாதிருக்கலாம்.

ஆனால் அரசாங்கத்தின் இத்தாமதமானது அரசாங்கத்திற்குள் உள்ள கட்சிகளின் வெறுப்பைச் சம்பாதிப்பதற்கும், பொதுமக்களின் நம்பிக்கையை இழப்பதற்கும் குறிப்பாக போரால் பாதிக்கப்பட்ட மக்கள் அரசாங்கத்தின் மீதான தமது நம்பிக்கையை இழப்பதற்கும் எதிர்க்கட்சியினர் மீளவும் தமக்கான ஆதரவைப் பலப்படுத்திக் கொள்வதற்குமான மேலதிக காலஅவகாசத்தை வழங்குவதற்குமான ஒரு சூழலை உண்டு பண்ணியுள்ளது.

இராணுவத்தினர் அதிகளவில் பயன்படுத்தப்படுதல், பலவந்தக் கடத்தல்கள் உட்பட்ட பல்வேறு பிரச்சினைகள் போன்றன அரசாங்கமானது நாட்டின் அரசியல் முறைமையை மாற்றுவது தொடர்பில் தீவிர கரிசனை காண்பிக்கவில்லை என்பதையே சுட்டிக் காட்டுகிறது.

மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க அரசாங்கமானது இந்தச் சூழலைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கான முயற்சியை மேற்கொள்வதுடன், நல்லிணக்கத்தை முன்னெடுத்தல் மற்றும் நாட்டின் எதிர்காலம் போன்ற முக்கிய விவகாரங்களை முன்னெடுப்பதில் தீவிரம் காண்பிக்க வேண்டும் இல்லையேல் நிலைமையை மீறிவிடும் என்பதாக அவ் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-11)

## சர்வதேச பொறி...

வைக்கப்பட்டுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை அரசாங்கத்துக்கான தீர்மானத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்தைக் கோருதலும் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஐக்கிய நாடுகள் சபையிடம் வலியுறுத்துதலும் தொடர்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தால் நேற்றைய வடக்கு மாகாண சபையின் அமர்வில் ஒரு பிரேரனை கொண்டு வரப்பட்டு தீர்மானமாக நிறைவேற்றி ஐ.நாவிற்கு அனுப்புவதாக இருந்தது.

நேற்றுக் காலை சபை அமர்வு தொடங்குவதற்கு முன்னதாக அந்தப் பிரேரனை குறித்து சபை உறுப்பினர்களுக்கிடையில் விசேட கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

அதன் போது எடுக்கப்பட்ட முடிவிற்கமைய இந்தப் பிரேரணையை ஒத்தி வைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன் பின்னர் சபை ஆரம்பத்திலும் அதன் பின்னர் சபை முடிவுகளின் போதும் சபையில் அறிவிப்புக்களை விடுக்கின்ற நேரத்தில் இந்தப் பிரேரணை ஒத்தி வைப்பதாகவும் இந்தப் பிரேரணை தொடர்பாக எதிர்வரும் 14 ஆம் திகதி விசேட அமர்வை நடத்த இருப்பதாகவும் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் அறிவித்தார்.

எனினும் குறித்த தீர்மானம் வடக்கு மாகாண சபையின் நிறைவேற்ற கூடிய சாத்தியப்பாடுகள் காணப்படுவதாக சிவாஜிலிங்கம் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

எனினும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், ஊடக பேச்சாளர் சுமந்திரன் ஆகியோர் கால அவகாசம் வழங்குவதற்கு ஆதரவு வழங்கி வரும் நிலையில் இத்தீர்மானத்தை சபையில் பிறிதொரு நேரம் விவாதிப்பதாக தெரிவித்து ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (செ-4)

## வடக்கு மாகாண...

ந்துரையாடி பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு தொடர்பில் ஆராய்வது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண பட்டதாரிக்ள் கடந்த பத்து நாட்களாக யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக வேலைவாய்ப்பு கோரி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், நேற்று பதினோராவது நாளாக வடக்கு மாகாண சபைக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த போராட்டத்தில் பல நூற்றுக்கணக்கான பட்டதாரிகள் கலந்து கொண்டு தமக்கான நியாயத்தை வழங்குமாறு கோரியிருந்தனர். காலை ஒன்பது மணியளவில் வடக்கு மாகாண சபைக்கு முன்பாக வெளியே முன்னெடுக்கப்பட்ட இந்த போராட்டம் பின்னர் வடக்கு மாகாண சபையின் உள் வளாகத்திற்குள் பட்டதாரிகளால் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர், அமைச்சர்கள், உறுப்பினர்கள் ஆகியோரினை பட்டதாரிகள் சந்திப்பதற்கான ஏற்பாட்டினை வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் சிவாஜிலிங்கம் செய்தார்.

இதனை அடுத்து பட்டதாரிகள் சார்பில் இரு பெண்கள் உட்பட ஏழு பிரதிநிதிகள் உறுப்பினர்களை சந்தித்தனர். இந்த சந்திப்பு சுமார் ஒருமணித்தியாலம் வரை நடைபெற்ற நிலையில், வடக்கு மாகாண அமைச்சுக்களில் உள்ள வெற்றிடங்கள் தொடர்பில் பட்டதாரிகளுக்கு கூறப்பட்டது.

எனினும் அந்த வெற்றிடங்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகளை நிரப்புவதற்கு போதுமானதாக இல்லாமல் இருந்தமையால் வேறு ஏதும் யோசனைகளை முன்வைக்குமாறு பட்டதாரிகள் தரப்பில் கோரப்பட்டது. பட்டதாரிகளை மேலதிகமாக உள்வாங்குவதற்கான அதிகாரம் ஆளுநரிடமே உள்ளது.

அவருடனான சந்திப்பை அடுத்தே இது தொடர்பில் கூற முடியும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் அவைத்தலைவர் ஆகியோரால் கூறப்பட்டது. மேலும் வடக்கு மாகாண அமைச்சுக்களில் உள்ள வெற்றிடங்கள் தொடர்பில் மதிப்பீடு செய்யுமாறும் அவைத்தலைவர் சிவஞானத்தினால் முதலமைச்சர், அமைச்சர்களுக்கு கடிதம் ஒன்று உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் எதிர்வரும் 13 ஆம் திகதி வடக்கு மாகாண ஆளுநரை பட்டதாரிகளின் பிரதிநிதிகள், வடக்கு மாகாண சபையின் பிரதிநிதிகள் ஆகியோர் சந்திப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டு.

அதுவரை பட்டதாரிகளை அமைதியாக இருக்குமாறும் கோரப்பட்டது. எனினும் யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக இரவு பகலாக முன்னெடுக்கப்பட்டு வரும் தமது போராட்டம் தொடரும் என தெரிவித்த பட்டதாரிகள், ஆளுநருடனான சந்திப்பினை அடுத்து தமது போராட்டம் தொடர்வதா? இல்லையா? என தீர்மானிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளனர்.

பட்டதாரிகளின் இந்த போராட்டத்தின் போது வடக்கு மாகாண சபையில் வழமைக்கு மாறான அதிகளவான பொலிஸ் பிரசன்னம் அதிகரிக்கப்பட்டு காணப்பட்டதோடு, ஆயுதம் தாங்கிய பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு இருந்தனர். தமது மக்கள் பிரதிநிதிகளை தாம் சந்திக்க வரும் போது இவ்வாறான பாதுகாப்புக்கள் குறித்து தமது கவலையை ஊடகங்களிடம் பட்டதாரிகள் தெரிவித்தனர். (செ-4)


வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
070 330 5500
அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com
உங்கள் அனைத்து விதமான பொதிகள் மற்றும் கடிதங்களை நம்பிக்கையுடனும், துரிதமாகவும்,குறைந்தளவு கட்டணங்களுடன் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட நாடுங்கள். (A-7704)
யாழ்ப்பாணம் | மீசாலை | திருகோணமலை | மல்லாவி
முல்லைத்தீவு | கிளிநொச்சி | கனகராயன்குளம் | வவுனியா

பங்குச்சந்தையின் சமகாலப்போக்கு மற்றும் முதலீட்டு வாய்ப்புக்கள் விளக்கக் கருத்தரங்கு
CSE COLOMBO STOCK EXCHANGE
பங்குச்சந்தை முதலீட்டாளர்களுக்கு சமகால விடயங்களை உள்ளடக்கி எதிர்வரும் சனிக்கிழமை 11-ம் திகதி காலை 9.30-மதியம் 12.30 மணிவரை, 147 2/3, கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள பங்குப் பரிவர்த்தனை கேட்போர்கூடத்தில் சிரேஷ்ட நிதிப்பகுப்பாய்வாளர் திரு.சு.ரகுராம் (CFA Level 3, CIMA)-NDB குழுமம், அவர்கள் கருத்துரை வழங்குவார்.
பங்குபற்ற விரும்புவோர் 0777822014/222 1455எனும் இலக் கங்களின் ஊடாக முன்பதிவுகளை மேற்கொள்ள முடியும். (C-7758)

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
● விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
● எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கில்கள் வெல்லும் வாய்ப்பு

UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை (A-7747)

V2 TRAVELS
தை மாதம் தங்கம் வென்ற அதிஸ்டசாலி


அதிஸ்ட எண் -N/13JAN17/1371/152
சி.தேவராசா
கரணவாய், கரவெட்டி
இவர் 13-01-2017 அன்று எமக்கூடாக 1கிலோ பொதி ஜெர்மனிக்கு அனுப்பினார்
நீங்களும் தங்கம் மற்றும் மோட்டார் சைக்கிள் வெல்ல
வாய்ப்புக்களுக்கு: 0768226240

கனடாவில் நிரந்தர குடியேறல்/வேலைவாய்ப்பு/கல்வி- கருத்தரங்கு
இனிமேலும் சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல வேண்டாமே!
குறைந்த கட்டணத்துடன் சட்டபூர்வமாக குடும்பத்துடன் கனடாவில் குடியேறலாம்
வங்கி ஊழியர்கள், அரச ஊழியர்கள், தாதியர், உயர் பதவியில் இருப்பவர்கள், நிரந்தர வேலை செய்பவர்கள், தற்காலிக உத்தியோகத்தர்கள் மற்றும் பள்ளியில் படிக்கும் குழந்தைகள் உள்ள வர்த்தகர்கள் என அனைவருக்கும் வழிகள் பல உண்டு. (A-7763)
கனடாவில் இருந்து வருகை தந்திருக்கும் Immigration அலுவலரால் பூரணவிளக்கம் அளிக்கப்பட்டு உங்கள் சந்தேகங்களுக்கு பதிலும் அளிக்கப்படும்.
கருத்தரங்கு
நாள்-12-03-2017
ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி
IMMIGRATION APPROVED Canada
V2 Travels
முற்பதிவுகளுக்கு - 0768226236
49 A சப்பல் லேன் யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.